செப்டெம்பர் 14 - ஒக்டோபர் 14 2012-6


இது ஒரு மாத இதழ்

விலை ரூபா 100/=

# தின மஞ்சரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# ஹன்சிகா தமன்னா மோதல்

வேட்டை படத்தின் தெலுங்குப் பதிப்பில் ஒப்பந்தமான ஹன்ஸிகா நீக்கப்பட்டு, அவருக்கு பதில் தமன்னா ஒப்பந்தம் செய்யப் பட்டுள்ளார். இதனால் இரண்டு முன்னணி நடிகைகளுக்கும் கடும் மோதல் ஏற்பட்டுள்ளது.

மாதவன், ஆர்யா நடித்து தமிழில் ரி-லீசான வேட்டை படம் தெலுங்கில் ரீமேக் ஆகிறது. இதில் கதாநாயகி களாக நடிக்க ஹன்சிகா, ஆண்ட்ரியா ஒப்பந்தம் செய்யப் பட்டனர்.

தமிழில் அமலாபால் நடித்த கேரக்டரில் ஹன்சிகாவும், சமீரா ரெட்டி நடித்த வேடத்தில் ஆண்ட்ரியாவும் நடிப்பதாக இருந்தது.

ஆன்ட்ரியாவும் ஹன்ஸிகாவும் அக்கா தங்கை போல போஸ் கொடுத்து மகிழ்ச்சியை வெளியிட்டிருந்தனர். ஆனால் அது புஸ்ஸாகிவிட்டது.

இப்போது திடீரென படத்திலி ருந்து ஹன்ஸிகா நீக்கப்பட்டார். அவருக்கு பதில் தமன்னாவை தேர்வு செய்துள்ளனர். தற்போது தமன்னா தெலுங்கில் படு பிசி. அவரது சமீபத்திய படம் "100 பேர்சன்ட் லவ்" படம் செம ஹிட் என்பதால் இந்த முடிவு என்றும் படக் குழுவினர் தெரிவித்தி ருந்தனர்.ஆனால் ஹன்ஸிகாவோ, தனது பட வாய்ப்பை தமன்னா பறித்து விட்டதாக ஆத்திரத்தில் உ ள்ளாராம்.

தமன்னாவை மிகக் கடுமையாகத் திட்டி தனக்கு நெருக்கமானவர்க ளிடம் கருத்து தெரிவித்து வருகிறாராம் ஹன்ஸிகா.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தின மகுடி

## சவாலே சமாளி

தினமகுடி தனது ஆறாவது இதழை உங்கள் கரங்களில் தவழவிடுவதில் மகிழ்ச்சியடைகிறது. சிற்றிதழ்களின் ஆயுட்காலம் ஐந்து அல்லது ஆறு பதிப்புகளுக்குள் முடிந்துவிடும் என்பது அனுபவசாலிகளின் வாய்ப்பந்த லாக அமைந்திருந்தபோதும், சவாலே சமாளி என்ற உணர்வோடு இந்த ஆறாவது இதழை உங்கள் கரங்களில் தவழச் செய்வதற்கு நீங்கள் வழங்கிய ஆதரவுதான் காரணம் என்பதை எண்ணி பெருமை கொள்கிறோம்.

ஆரம்பத்தில் 40 பக்கங்களோடு மலர்ந்த தினமகுடி தனது ஆறாவது இதழை 60 பக்கங்களுடன் உங்களிடம் சமர்ப்பிக்கின்றதெனில் இந்த வல்லமையை எமக்கு பெற்றுத்தந்தவர்கள் நீங்கள்தான் என்பதையும் மகிழ்வோடு நினைவில் கொள்கிறோம்.

தினமகுடியின் வளர்ச்சியில் கண்ணும் கருத்துமாக இருந்து செயற்பட்டுவரும் வர்த்தகப் பெருமக்கள் தமது முழுமையான பங்களிப்பை எமக்கு வழங்குவது மகிழ்ச்சியூட்டுகின்றது. அவர்களைப்போன்று இன்னும் பலர் இதன் வளர்ச்சிக்கு உறுதுணைபுரிய முன்வர வேண்டும் என எதிர்பார்க்கிறோம்.

அத்தோடு எமது கலை, இலக்கிய அரங்கில் கால் பதித்து தமது படைப்புகள் மூலம் வாசகர்கள் உங்களில் நிலைத்திருப்பவர்கள் தமது படைப்புகளை தினமகுடிக்கும் வழங்க முன்வரவேண்டும் என கேட்டுக்கொள்கிறோம்.

குறிப்பாக வளர்ந்து வரும் கலை. இலக்கிய ஆர்வலர்கள் உங்கள் படைப்புகளை வெளிக்கொனர தினமகுடி சிறந்த களம் அமைக்கும் என்பதையும் கருத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

வாசகர்களோ தொடர்ந்து தினமகுடியை படியுங்கள் அத்துடன் உங்கள் கருத்துக்களையும் தவறாது பகிர்ந்து கொள்ளுங்கள் எனக்கேட்டுக் கொள்கிறோம்.

படைப்பால் இணைவோம்
புது வழி சமைப்போம் வாரீர்

**ஆசிரிய பீடம் தினமகுடி**
**இல. 238 கடற்கரை வீதி, கொழும்பு-11**
தொலை பேசி : 011 7209862
தொலைநகல் : 011 2334633
gmail : thinamakudis@gmail.com

## எம்.எஸ்.விக்கு விருது







ஜெயா டி.வியின் 14ஆவது ஆண்டு விழாவில் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் – ராமமூர்த்தி ஆகியோர் மெல்லிசை சக்கரவர்த்தி விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். தமிழக முதல்வர் ஜெயலலிதா இந்த விழாவில் சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு விருதுகளை வழங்கினார். சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்த், இசைஞானி இளையராஜா, உலகநாயகன் கமல்ஹாசன், இயக்குநர் கே.பாலச்சந்தர், தயாரிப்பாளர் ஏ.வி.எம்.சரவணன் ஆகியோர் பங்கேற்றனர். நிகழ்வில் பரிசு பெற்ற பாடகர்களையும் படங்களில் காணலாம்.

## அதிசய உலகம்

இயற்கை தன்னகத்தே பல வியத்தகு பிரம்மாண்டங்களை உள்ளடக்கி வைத்திருக்கிறது. அதில் சில இயற்கையின் மாறுபாட்ட கோணங்களையும் பிரமிக்கத்தக்க அழகையும் நம் முன்னே காட்சிப்படுத்துகிறது. அப்படிப்பட்ட சில மாறுபட்ட இயற்கையின் பகுதிகள் இங்கே.



### சொக்லேட் ஹில்ஸ் - பிலிப்பைன்ஸ்

சொக்லேட் நிறத்தில் கூம்பு வடிவ குட்டி குட்டி மலைகளை பிலிப்பைன்ஸ் மத்திய மலைப் பகுதியில் காணலாம். இந்த அசாதாரண புவியியல் உருவாக்கம் பல தசாப்தங்களாக புவியியலாளர்கள் குழப்பி வருகிறது. கூம்பு மலைகள் உருவாக்கப்பட்டது எவ்வாறு என்று வெவ்வேறு கோட்பாடுகள் நிலவுகின்றன. 50 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் பரந்து விரிந்துள்ள, வியக்கத்தக்க மலைகள் நூறுதீவுகள் தேசிய பூங்கா மற்றும் தால் எரிமலை, உலகின் மிகச்சிறிய செயலில் எரிமலை சேர்ந்து பிலிப்பைன்ஸின் தேசிய புவியியல் நினைவுச் சின்னங்களாக உள்ளன.

### நரகத்தின் வாயில்கள - துர்க்மெனிஸ்தான்



இங்குதான் இயற்கை எரிவாயு உலகின் ஐந்தாவது மிக பெரியளவில் உள்ளது என்று மதிப்பிடப்பட்டுள்ளது. சுமார் 1500 சதுர மைல் பரப்பளவில். துரதிஸ்டவசமாக இந்த இயற்கை எரிவாயு யாருக்கும் பயனில்லாமல் இன்றும் தொடர்ந்து எரிந்து கொண்டிருக்கிறது. கடந்த 2011மே மாதத்தில், இந்த துர்க்மெனிஸ்தான் கண்டுபிடிக்கப்பட்டது. புவியியலாளர்கள் இங்கு ஆராய்ச்சி செய்ய தோண்டியபோது விஷ வாயு நிரப்பப்பட்ட ஒரு பெரிய பள்ளம் கண்டுபிடிக்கப்பட்டது.



### சொகொத்ரா தீவு - ஏமன்

இந்திய பெருங்கடலில் உள்ள நான்கு சிறிய தீவுகளை கொண்ட தொகுப்பு ஆகும்.

இங்கு பல அரிய வகையான உயினங்களும், தாவர வகைகளும் இருப்பதாக கண்டறியப்பட்டுள்ளது. இது ஒரு முக்கிய சுற்றுலாத் தலமும் கூட.

இங்குள்ள இரட்டைப் பாறை அமைப்பு வித்தியாசமானது.

### ஜொர்மி தேசிய பூங்கா - துருக்கி

இது இயற்கை செதுக்கிய ஓவியம் என கருதப்படுகிறது. காற்று, நீர், ஏரிமலை போன்ற இயற்கை கூறுகளால் இந்த பள்ளதாக்கு வடிவமைக்கபட்டிருக்கிறது.

இது கண்ணை கவரும் பேரழகு என பார்த்தவர்கள் வருணிக்கிறார்கள்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஜனநாயக மக்கள் முன்னணி அதனது தனித்துவத்தை தொலைத்துள்ளது என அதன் முக்கியஸ்தர்கள் குமுறிக் கொண்டிருக்கின்றனர். சப்ரகமுவ மாகாண தேர்தலின் போது இக்கட்சியின் தலைவர் மனோ கனேசன் எடுத்த தன்னிச்சையான இந்த முடிவு, கட்சியின் தனித்துவம் தொலைந்து போகக் காரணமாகியுள்ளது எனவும் அவர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

கட்சிக்கென நிர்வாகம் இருக்கின்றபோதும் இந்த நிர்வாகத்துடன் கலந்துரையாடாது ஏதேச்சையாக தலைமை எடுத்து முடிவுகள் கட்சியின் செல்வாக்கை நிலைகுலையச் செய்துள்ளன என்றும் அவர்கள் பெருமுகின்றனர்.

மலையகக்கட்சிகள் ஒன்றிணைந்து சப்ரகமுவ தேர்தலை சந்தித்து, இம்மாகாணத்தில் தமது பிரதிநிதித்துவத்தை தக்கவைக்க வேண்டியது அவசியமானது என்பதில் எமக்கு எந்தவித மாற்றுக் கருத்துமில்லை.

# தொலைந்தது தனித்துவம்

ஆனால் அதற்காக ஆளும் கட்சியுடன் ஒட்டிக் கொண்டிருக்கும் கட்சிகளுடன் இணைந்து செயற்பட வேண்டுமா எனவும் அவர்கள் கேள்வி எழுப்புகின்றனர்.

இணைந்தாலும் பறவாயில்லை எதற்காக அந்த அணியில் எமது கட்சி சார்பாகப் போட்டியிடுவதற்கு வேட்பாளரை நியமிக்கவேண்டும் என்றும் கேட்கின்றனர். தேர்தல் சமயத்தில் தலைவர்கள் ஒன்றாக அமாந்திருந்தபோதும், வேட்பாளர்கள் தத்தமது இஷ்டத்துக்கு ஏற்ப பிரசார நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்ததையும் பார்க்க முடிந்தது என்கின்றனர்.

இதேவேளை, மேலும் சிலர் பல்வேறு கிசுகிசு தகவல்களையும் தெரிவிக்கின்றனர். அதாவது கட்சியின் தலைவர் தனது வியாபார நடவடிக்கைகளை மேம்படுத்தும் நோக்கில் முக்கிய அமைச்சர் ஒருவரின் அனுசரனையைப் பெற்றுக் கொள்வதற்காகவே இவ்வாறான நடவடிக்கைகளில் குதித்தார் எனவும் அதற்காக அவர் முதலில் போட்ட தூண்டில் அமைச்சர் ஆறுமுகன் தொண்டமானை கைக்குள் போட்டு கொண்டது என்றும் கூறுகின்றனர்.



தமிழர்களின் தனித்துவத்தை கட்டியெழுப்புவதற்காக உருவாக்கப்பட்டதாகக் கூறிக் கொள்ளும் கட்சிக்கு இவ்வாறானதொரு நிலைமை ஏற்பட்டிருப்பது பத்தோட பதினொன்று அத்தோடு இதுவும் ஒன்று என்ற நிலையை ஏற்படுத்தியுள்ளது எனவும் இவர்கள் அங்கலாய்கின்றனர்.

இது காலவரையில் ஐக்கிய தேசிய கட்சியின் பச்சை நிறத்துக்குள் தம்மை அடையாளம் காட்டி நின்ற இக்கட்சி இப்போ நீல மோகத்துக்குள் பச்சோந்தியாய் மாறி செயற்பட்டுக் கொண்டிருப்பதை மானமுள்ள எந்தத் தமிழனும் ஏற்க மாட்டான் என்கின்றனர்.

மனோகரா மர்மம் என்ன? எல்லாம் உனக்கே வெளிச்சம்

தின மகுடி
14.09.201

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சரித்திரத்தை நோக்கி சின்ன நாயகி



தினமகுடியின் இளம் சாதனையாளர்களின் தேடலில் இம்முறை இவ்விதழை அலங்கரிப்பவர் இறம்பைக்குளம் வவுனியாவைச் சேர்ந்த சிகரம் நோக்கி பறக்கத்துடிக்கும் சப்திக்கா இவரை அவரது இல்லத்தில் தினமகுடிக்குழுவினா சுந்தித்தபோது, நிலவை மறைக்கும் கார்மேகம் போல் அந்தச்சிறுமியின் சந்தோஷத்தை மறைத்திருந்தது அவளின் பிறப்பு. இரண்டு கைகளும் இழந்த இளந்தளிர் பார்த்ததும் பாரமாகியது மனம். சிறிது நேரம் மௌனமே நிலவியது தொடர்ந்து....

**உங்களை பற்றி–** எனது பெயர் எஸ்.சப்திக்கா அப்பா சத்தியசீலன் அம்மா யூடிற் தங்கைமார் நிலோபர் ஜெனி-சாம்சிக்கா நான் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நான்காம் தரத்தில் கல்வி கற்கிறேன்

**நீங்கள் சொல்ல விரும்புவது–** நான் இவ்வாறு இருந்தும் என்னை எந்தவிதக் குறையில்லாமல் வைத்திருக்கும் எனது தெய்வங்களுக்கும் எம்மை படைத்த தெய்வத்துக்கும் முதலில் நன்றி கூறுகிறேன். எனது சகோதரிகள் மற்றும் எனது பாலர் வகுப்பு ஆசிரியர் சர்மிளா ஆகியோருக்கும் எல்லாவற்றையும் விட எனது அம்மப்பாவுக்கும் இன்னும் பல உதவிகள் செய்யும் அனைவரையும் நினைவில் கொள்கிறோன்



**சப்திக்கா பிறந்திருக்கும் போது உங்களின் மனநிலை எவ்வாறு இருந்தது என தந்தை சத்தியசீலனிடம் கேட்ட போது**

மருத்துவர் அருகில் வந்து உங்களுக்கு அழகான பெண் குழந்தை பிறந்துள்ளது என்றார். மனமகிழ்ச்சியடையுமுன்னர் வந்து கை கொஞ்சம் சின்னதாக உள்ளது என்றார். சின்னக் கையென்றால் என்ன சேர் எனது குழந்தையை காட்டுங்கள் என்றேன். குழந்தையைக் கண்டதும் எல்லாப் பெற்றோர்களும் மிகவும் மகிழ்ச்சியடைவார்கள் ஆனால் எனக்கு மனம் நொருங்கியது என்ன செய்வதென்றே தெரியவில்லை கலங்கிப்போனேன் தனியே இருந்து அழுதேன்.சிந்தித்தேன் உனது மனைவியிடம் "இது எங்களுடைய பிள்ளை நாங்கள் தான் இவளை வளர்க்கவேண்டும்" எல்லாம் இறைவன் செயல் என்றேன். நாங்கள் கிறிஸ்த்தவர்கள் ஒருவன் தங்கும் அளவு சுமையை விட அதிகமான சுமையை சுமத்தமாட்டார் இது எமது இறைவாக்கு அதன் படியே நடக்கிறது.

**தந்தையை விட பத்து மாதம் சுமந்து பல கனவுகளோடு பிள்ளை பெற்றெடுக்கும் தாய்க்கு வேதனை அதிகம் தான் அந்தவகையில் தாய்–யூடிறாவிடம் கேட்டபோது...**

எனது மகளை வெளிச்சத்தில் வைத்திருக்கிறார்கள் வெள்ளை நிறத்தில் வடிவாக இருக்கிறாள். அதிகமான வைத்தியர்கள் மற்றும் பொதுமக்கள் கண்காட்சி பார்ப்பது போல் கூடியிருந்தனர் என்னவென்று கேட்டேன் எவருமே எதுவும் சொல்லவில்லை மருத்துவர் அருகில் வந்து உங்கள் பரம்பரையில் யாரவது ஊனமாக பிறந்து இருக்கிறார்களா என பல கேள்விகளை கேட்டு விட்டு உமக்கு பிள்ளை வேணுமா வேணாமா என்று கேட்டார் ஏன் இப்படி கேட்கிறிங்க டொக்டர் என்றேன்.

உமது பிள்ளைக்கு இரு கைகளும் இல்லை வலது காளில் மூன்று விரல்களும் இடது காளில் இரண்டு விரல்களும் தான் உள்ளது நடக்கவும் தாமதம் ஆகும். உடல் நிலையும் மோசமாகவுள்ளது இதயத்தில் சிறிய ஓட்டை ஒன்றும் உள்ளது.என்றார் எனது இதயம் நிண்டுபோனது மனம் கல்லாகிப் போனது அப்படியே திரும்பிபார்க்கிறேன் எனது கணவர் எதிரில் அழுதுகொண்டுடிருந்தார். அவரைக்கண்டதும் பெரும் சத்தத்தோடு கதறியழுது விட்டேன். அன்று அழுதது மட்டும் தான் அதன் பிறகு இவளை நினைத்து அழுததே இல்லை.

**இப்பிள்ளையின் வளர்ச்சிக்கு நீங்கள் மேற்கொண்ட முயற்சி என்ன?**

படுத்த படுக்கையாக இருந்தால் எல்லாமே படுக்கையில்தான் இப்படியே வைத்து என்ன செய்வது ஆண்டவரின் வல்லமையால் நடக்க ஆரம்பித்து விட்டாள் கையையும் இதயத்தில் உள்ள ஓட்டையையும் எப்படியாவது குணப்படுத்திவிடலாம் என்று நோனா-அப்பலோ-நவலோக போன்ற வைத்தியசாலைகளில் பணிபுரியும் வைத்தியர்களிடமும் ஆலோசனையும் பெற்றோம் இப்போது எதுமே செய்ய வேண்டாம் பிள்ளை வளரட்டும் என்றார்கள் பல நிறுவனங்களிடம் உதவியினை நாடினோம் பலனேதும் இல்லை குறிப்பாக மொறட்டுவ அன்னைதிரேசா மடத்தினரால் ஆரம்பகட்ட பரிசோதனை மட்டுமே செய்யபட்டது. கடவுளின் கிருபையால் தற்போது இதயத்தில் இருந்த ஓட்டையும் மறைந்து விட்டது. இந்தக் கைக்கு மட்டும் தகுந்த உதவி கிடைக்குமானால் மிகவும் மனமகிழ்ச்சிக்குரிய விடயமே இவளுக்கென்று தனியான அறையினை கட்டிவருகிறேன் (chair comert) ஒன்றினை தந்து உதவி யவர் வவுனியா கல்வித்திணைக்கள அதிகாரி சுப்பிரமணியம் அவர்கள் (Non form) எல்லாமே சொல்லிவிட முடியாதல்லவா

**மறக்கமுடியாத சம்பவம் ஏதும்–** எனது மகளே மறக்கமுடியாதவள் தான். மாணவர்களை முதலாம் தரத்திற்கு வரவேற்கும் நிகழ்விற்கு நாங்கள் 10நிமிடம் தாமதமாகத்தான் போனோம். எதாவது சொல்லி அவமானப்படுத்துவார்கள் என்ற காரணத்தினால் ஆனால் அங்கு இயக்குந், அதிபர்கள் ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவமாணவிகள் அனைவரும் கையில் மாலையோடு காத்திருந்தனர். மாலையணிவித்து வாத்திய இசைமுழங்க அழைத்துச் சென்றமை விழா நாயகியாக நிகழ்வினை தொடங்கிவைத்தாள் அப்போது எமது கண்களில் ஆனந்தக்கண்ணீர் நிரம்பியது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கிடையிலான போட்டியில் பங்பற்றுவதற்காக கொழும்புக்கு சென்றிருந்தோம் அங்கு வந்திருந்த மாணவர்களைப் பார்த்து நாங்களே பயந்து விட்டோம். போட்டி ஆரம்பமானது. எமது மகளும் கலந்து கொண்டாள் அகில இலங்கை வெற்றியாளர் சப்திக்கா என வெளிநாட்டு நடுவர் அறிவித்ததும் எல்லோருமே அதிர்ந்துபோயினர் அதுமட்டுமல்லாமல் எனது மகளை சூழ்ந்த கூட்டம் அவளிடம் Autograp ck; photo வும் எடுத்துக்கொண்டனர் மீண்டும்மொரு முறை ஆனந்தக் கண்ணீரில் எமது கண்கள்

**இதுவரை உங்கள் மகளின் சாதனைகள் பற்றி–**

Sri lanka Annual competitive Festival popular song Sinhalese , popular song English,Story telling,Verse Speaking-1st ,Greating card making 2nd All Islandwinner In 2010 மேலும் கோலம் போடுதல் மாலைகட்டுதல் சித்திரம் வரைதல் பாடுதல் நடனமாடுதல் மனைப்போட்டி பண்ணிசைப்போட்டி எப்போட்டியானலும் முதலாம் இரண்டாம் இடங்களைப்பெற்றுவிடுவாள் படிப்பிலும் 3ஆம் பிள்ளையாக வருவாள் இவளின் தனிச் சிறப்பாக ஓகன் வாசித்தல் தான். இலங்கை தேசிய கீதம் , வாடாமாப்பிள்ளை, என்ட மல்லி என்ட மல்லி, சுறாங்கனி சுறாங்கன், கிறிஸ்தவப்பாடல்கள் இன்னும் பலபாடல்களை வாசித்து தங்க மடல் மற்றும் சான்றிதழ்கள் பெற்றிருக்கிறாள்.

**பிள்ளை பற்றிய எதிர்காலத்திட்டம்–**

எமது மகளுக்கு தகுந்த தொழில் ஒன்றை கற்றுக்கொடுக்க வேண்டும் அதே நேரம் அத்தொழில் பிள்ளைக்கும் பிடித்திருக்கவேண்டும் எமதும் அவளின் ஆசையும் தான் ஒரு நீதிபதியாக அல்லது சட்டத்தரணியாக வரவேண்டும் என்பதுதான் அதுதான் அவளுக்கான தொழில் என அடையாளப்படுத்தியுள்ளோம். ஆனால் வருகிற வருடம் நடைபெறவிருக்கும் புலமைப்பரிசில் சித்தியடைவாள் நம்பிக்கையுள்ளது.

தினமகுடி பற்றி தங்களின் கருத்து-

இலங்கையில் பல பத்திரிகைகள், சஞ்சிகைகள் இருந்தாலும் இளைஞர்களின் திறமைக்கு முன்னுரிமை கொடுத்து அவர்களை வெளியுலகிற்கு கொண்டுவருதல் மிகவும் பாராட்டுக்குரிய விடயமாகும் தொடர்ந்து வெளிவரவேண்டும் வெற்றி பெறவேண்டும் அதே நேரம் தினமகுடி ஊடாக வாசகர்களாகிய உங்களிடம் ஒரு வேண்டுகோள் முடிந்தால் எனது மகளுக்கு இரு கைகளையும் பெறுவதற்கான உதவிகளை நல்ல உள்ளத்தோடு செய்யுங்கள்

*வை-கஜேந்திரன்*







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீறுநடை போடும் விவேகானந்தா

வரலாறு படைத்த பாடசாலைகள் வரிசையில் இம்மாத தினமகுடியின் இதழை அலங்கரிப்பது கொழும்பு-13 புதிய செட்டி வீதியில் அமைந்துள்ள விவேகானந்தா கல்லூரியாகும். 1926ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இப்பாடசாலை 86 ஆண்டுகள் கடந்து சாதனைகளோடு புதிய பாதையில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. "ஆகுக ஆக்குக" என்னும் மகுட வாசகத்தோடு கல்விக்கு அதிபதியான வீணையோடு வீற்றிருக்கும் சரஸ்வதிதேவியின் இலச்சினையோடு செம்மஞ்சள் மரூண் வண்ணத்தில் வெற்றிக் கொடி பறக்கிறது அக்கல்லூரியின் வரலாற்றை நோக்குவோமாயின்.

1902ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்ட விவேகானந்த சபையானது 1926ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24ஆம் திகதி 25 மாணவர்களோடு விவேகானந்தர் பெயரில் பாடசாலை ஆரம்பிக்கப்பட்டது. அதன் சிறப்பு விழாவன்று சுவாமி விபுலானந்த அடிகளும் சுவாமி சச்சிதானந்தரும் கலந்து சிறப்பித்துள்ளார்கள். இதுவே கொழும்பில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது இந்து வித்தியாலயம் ஆகும். ஆரம்பத்தில் இரு ஆசிரியர்களோடு ஆரம்பிக்கப்பட்ட பாடசாலை ஓராண்டுக்குள் நான்கு ஆசிரியர்களையும் 160 மாணவர்களையும் கொண்டதாக வளர்ச்சியடைந்தது. இக்காலத்தில் சபையின் தலைவராக சேர் பொன்.இராமநாதனும் செயலாளராக முன்னை நாள் கல்விப் பணிப்பாளரும் வட்டுக்கோட்டை நாடளுமன்ற உறுப்பினருமான கே.கனகரத்தினமும் கடமை புரிந்தார்கள்.

பாடசாலை கல்வித் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்டு முதலாவது பரீட்சையை ஒக்டோபர் மாதத்தில் நடத்தியது. 1927ஆம் ஆண்டு கல்வித் திணைக்களம் ஒரு தலைமை ஆசிரியை நியமிக்கவேண்டும் என்று கேட்டு கொண்டதிற்கிணங்க நவரட்ணம் என்பவர் தலைமை ஆசிரியராக நியமிக்கப்பட்டார். 1929ஆம் ஆண்டு வித்தியாலய விவேகானந்தா மாணவர்கள் இலகுவாகப் பாடப்புத்தகங்களையும் சமய நூல்களையும் பெற்றுக்கொள்ள வசதியாக ஒரு புத்தகசாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இவ்வாண்டில் தலைமை ஆசிரியராக மு.சுப்பிரமணிய சாஸ்திரி நியமிக்கப்பட்டார். அதன் பின்பு வித்தியாலயம் ஆங்கிலமும் தமிழும் கற்கும் இருமொழிப் பாடசாலையாக மாறியது.

1930ஆம் ஆண்டு ஏ.எஸ்.தம்பையா தலைமையாசிரியரானார். 1933 மே மாதம் முதலாம் திகதி அடிக்கல் நாட்டு விழாவுடன் ஆரம்பிக்கப்பட்ட பாடசாலையின் புதிய கட்டிடம் அவ்வாண்டு நவம்பர் மாதம் 13ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது. சுவாமி விபுலானந்த அடிகளாரும் (செயலாளர் இராமகிருஷ்ணமிஷன் இலங்கை) கல்விப்பணிப்பாளர் எல்.மாக்கிரேயும் கலந்து சிறப்பித்தார்கள். 1935ஆம் ஆண்டு பாடசாலை முகாமையாளராக ஏ.ஏ. மகாதேவா நியமிக்கப்பட்டார். 1936ஆம் ஆண்டு 332 பிள்ளைகள் கல்வி கற்றனர் 1939ஆம் ஆண்டு கே.சபாபதி மற்றும் எம்.ஆறுமுகமும் ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டனர். அப்போதுள்ள மாணவர் தொகை 409 இவர்களுள் 239 ஆண்களும் 170 பெண்களும் அடங்குவர். 1941ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 3ஆம் திகதி முதலாவது பெற்றோர் தினம் இங்கு கொண்டாடப்பட்டது.

1944ஆம் ஆண்டு மாணவர் தொகை அதிகரித்தமையால் இடநெருக்கடி ஏற்படவே மேலும் ஒரு மண்டபம் A.செல்வமுத்து என்பவரால் கட்டப்பட்டது. 1945ஆம் ஆண்டு கல்வித்திட்டம் திருத்தப்பட்டு ஆங்கிலம் வகுப்பிலிருந்தே கற்பிக்கப்பட்டது. 1950ஆம் ஆண்டு நவம்பர் மாதம் முதலாம் திகதி செல்லத்துரை என்பவர் தலைமை ஆசிரியராகக் கடமையாற்றினார். 1952ஆம் ஆண்டில் இப்பாடசாலை சிரேஷ்ட இடைநிலை பாடசாலை தரத்திற்கு உயர்த்தப்பட்டு முதன்முதலாக 16 மாணவர்கள் கா.பொ.தா சாதாரணதரத்திற்கு தோற்ற அனுமதி வழங்கப்பட்டது. பாடசாலையில் நூல் நிலையம் ஆரம்பிக்கப்பட்டதோடு சங்கீத நடன சிங்கள வகுப்புக்களும் ஆரம்பிக்கப்பட்டது. 17-3-1964 அன்று புதிய கட்டடம் காப்பாளர் ஏ.செல்வமுத்துவினால் திறந்து வைக்கப்பட்டன. 1954 மே மாதம் இரு நேரப்பாடசாலையாக மாற்றப்பட்டதுடன் வித்தியாலயம் மென்மேலும் வளர்ச்சியடைந்தது குறிப்பிடத்தக்கது.

1957ஆம் ஆண்டு விஞ்ஞான ஆய்வு கூடம் தாபிக்கப்பட்டது. 1959ஆம் ஆண்டு வித்தியாலய முகாமையாளராக ஏ.சி.நடராஜா அவர்கள் பொறுப்பேற்றுக் கொண்டார். வ.நடராஜா தலைமையாசிரியராக நியமிக்கப்பட்டார். இது வரைகாலமும். 1920-1960 வரை விவேகானந்தா சபையின் பொறுப்பில் இருந்த விவேகானந்தா வித்தியாலயம் 1960ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் முதலாம் திகதி தொடக்கம் அரசாங்கத்தின் தீர்மானத்திற்கமைய பாடசாலை கல்வியதிகாரியின் முகாமையின் கீழ் கொண்டு வரப்பட்டது. 1962இல் அரசாங்கம் பாடசாலையைப் பொறுப்பேற்றது. அதனைத் தொடர்ந்து 1963இல் மகா வித்தியாலயமாக தரமுயர்த்தப்பட்டது. இவ்வாண்டிலிருந்து மாணவர்கள் பல்கலைக்கழகம் - சட்டக் கல்லூரி - உயர் கற்கை நெறிகள் என்பவற்றுக்கு தெரிவு செய்யப்பட்டு உயர் கல்வியை தொடர வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டன. 1967இல் பல்கலைக்கழகத்திற்கு மாணவி ஒருவர் தெரிவு செய்யப்பட்டமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். 1965இல் க.சோமசுந்தரமும் 1969இல் கனகலிங்கமும் அதிபராகக் கடமையாற்றி மகா வித்தியாலயத்தின் வளர்ச்சியில் பெரும் பங்காற்றினர் மற்றும் 1970ஆம் ஆண்டில் வ.நடராஜா கல்லூரி வளர்ச்சிக்கு மேலும் மெருகூட்டினார்.

27-7-1973இல் சு.மகேசன் அதிபராக நியமிக்கப்பட்டார் இவர் கடமையாற்றிய காலப்பகுதியை ஒரு பொற்காலம் என்றே குறிப்பிடலாம்.அதிபர் சு.மகேசனின் காலத்தில் பாடசாலை மேலும் துரித வளர்ச்சி கண்டது. அவர் சளைக்காது பாடசாலையின் ஒவ்வொரு வளர்ச்சிக்காகவும் பொறுமையுடனும் விடாமுயற்சியனும் சகல மாணவர்களுடனும் ஒன்றுகூடி அவர்களது பிரச்சினைகளை கருத்தில் கொண்டு வறுமைப்பட்ட மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவதில் அக்கறை செலுத்தி முன்னேற்றினார். இன்றைக்கு மிகவும் உயர் நிலையில் நிற்பவர்களில் பலரும் அவரை நினைவு கூர்வது குறிப்பிடத்தக்கது. 1981இல் மூன்று மாடிக்கட்டிடம் அமைக்கப்பட்டது.



1983இல் எஸ்.மாணிக்கவாசகர் அதிபராகர் பொறுப்பேற்றார் அவரது காலத்திலே 1988இல் ஆரம்பப்பிரிவு மாணவர்களுக்கான கட்டடம் அமைக்கப்பட்டு அன்றைய ஜனாதிபதியாக இருந்த R.பிரேமதாசாவினால் திறந்து வைக்கப்பட்டது. 1990இல் பாடசாலை வளவுக்குள் சித்தி விநாயகர் ஆலயம் அமைக்கப்பட்டு கும்பாபிஷேகம் செய்யப்பட்டது. இது கல்லூரி வரலாற்றில் ஒரு வரப்பிரசாதமாகும். 01.01.1991-21.02.1991 மிகச்சிறிய காலப்பகுதியில் உப அதிபராக K.P. சிவானந்தம் கடமையாற்றினார் பின்னர் 01-03-1991இல் S.தில்லைநாதன் அதிபராக கடமையைப் பொறுப்பேற்றார். இவரது காலப்பகுதியில் வகுப்புக்கள் அனைத்திற்கும் ஒலி பெருக்கி பூட்டப்பட்டமை விசேட அம்சமாகும். அவரைத் தொடர்ந்து திருமதி S.பாலசுந்தரம் அம்மையார் 1995ஆம் ஆண்டு காலப்பகுதியில் அதிபராக நியமிக்கப்பட்டார். இக்காலப் பகுதியில் இக் கல்லூரியில் எழுது வினைஞராக இருந்த செல்வி பவளம் குமார் அம்மையார் சேவையில் இருந்து ஓய்வு பெற்றார். இவர் 1965-1995 வரை கடமையாற்றினார். அவரது காலகட்டத்தில் ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் சிறந்த வழிகாட்டியாக இருந்தார் என்பதை மறக்க முடியாது.

1996இல் கல்லூரி தேசிய பாடசாலையாக தரம் உயர்த் தப்பட்டது கொழும்பு வடக்கின் ஒரே ஒரு தேசிய தமிழ் பாடசாலை என்பதும் குறிப்பிடத்தக்கது. 1997, 2006 இல் திருமதி P.பாலகிருஷ்ணன் கல்லூரியின் பதில் அதிபராக கடமைப்பொறுப்பேற்றார். அவரைத்தொடர்ந்து 1998இல் T.சந்தோஷம் அதிபராக நியமிக்கப்பட்டார். 1999இல் 16 வகுப்பறைகள் கொண்ட 4 மாடிக்கட்டடம் கட்டப்பட்டது. 2000 ஆண்டு குளிரூட்டப்பட்ட வசதிகளுடன் கணனி அறை அமைக்கப்பட்டது. 2006இல் கல்லூரியின் அமுத விழா பழைய மாணவர்கள், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பெற்றோர்கள் ஆகியோரின் அனுசரணையுடன் பொருட்காட்சியும் விழாவும் சிறப்புற்றது. 2006இல் I.இராசரத்தினம் அவர்கள் அதிபராக பொறுப்பேற்றார். 2009 ஆண்டு முதல் இரு நேரப் பாடசாலையாக இயங்கி வந்த கல்லூரியை காலை நேரப் பாடசாலையாக இயங்க வைத்த பெருமை இவரையே சாரும்.

தற்போது அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் திருமதி. வசந்தி பரசுராமன் அம்மையார் 12-08-201-1ல் இருந்து அதிபராக பொறுப்பேற்று திறமையாக நடத்திக் கொண்டு வருகின்றமை யாவரும் அறிந்ததே இவர் 1983இல் இருந்து மனையியல் ஆசிரியராக நூழைந்தார் தனது கைத்திறத்தினால் மாணவர்களை வளப்படுத்தியதுடன் அனைவருக்கும் இனிமையானவராகக் காணப்பட்டார் தனது திறமையால் முன்னேறி பகுதித்தலைவராக கடமையாற்றினார் பின்னர் உப-அதிபராக தமது கடமைகளை செய்தார். அவரது திறமை அவரை பிரதி அதிபராக்கியது கல்லூரியில் நிர்வாகக்கட்டமைப்பில் முழுமையாக ஈடுபட்டு ஆற்றிய பணிக்கு பலனாக இன்று அதிபராக சேவையாற்றுகிறார். இது அவரின் சேவைக்கு கிடைத்த பரிசாகும்.

அதுமட்டுமன்றி அதிபர் தனது நிர்வாக கட்டமைப்பிற்குள் பிரதி அதிபர் S.தில்லைநாதன் மற்றும் உபஅதிபர்களாக M.S.ஒஸ்வாட் திருமதி. T.தேவதாசன் ஏ.மயூரன் ஆகியோரையும் 2250 ற்கு மேற்பட்ட மாணவர்களையும் 100பேர் கொண்ட ஆசிரியர் குழாத்தினையும் பாடசாலை சங்க அபிவிருத்திச் சங்க உறுப்பினர்களையும் பழையமாணவ உறுப்பினர்களையும் பெற்றோர்கள் நலன்விரும்பிகளையும் ஒன்றிணைத்து ஒத்துழைப்புடன் கல்லூரியை வளர்ச்சிப்பாதையில் வழிநடத்துகிறார்.

இவரது பணிசிறக்கவும் இக்கல்லூரியானது இன்னும் மென்மேலும் சிறப்பான வரலாற்றைப் படைக்க வேண்டுமென தினமகுடியும் வாழ்த்துகின்றது.

-பாபு கஜன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர் ஒற்றுமைக்கு மதிப்பளித்தோம்

## கிழக்கு மாகாணத் தேர்தலில்



1982 ஆம் ஆண்டு நடைபெற்ற மாவட்டசபைத் தேர்தலின் பின்னர் கிழக்கு மாகாணத்தில் தமிழ்பேசும் இனங்களுக்கும் ஏனைய இனங்களுக்கும் இடையில் உறவில் மட்டுமல்ல எண்ணங்களிலும்,சிந்தனைகளிலும் பெரும் மாற்றம் உருவாகியது. இந்த மாற்றம் குறித்து நமது நவோதயா மக்கள் முன்னணி முதலில் கவனம் கொண்டது.

கிழக்கில் ஒவ்வொரு சமூகமும் தத்தமது அபிலாஷைகளைப் பூர்த்தி செய்து கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தில் தமது அரசியல் சக்திகளை வளப்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதில் அவதானம் செலுத்தின.அன்றைய சூழலில் இத்தகைய எண்ணமும் செயற்பாடும் அவசியமானவையாக இருந்தன. இதன் சுவட்டினில் இன அடையாளங்களை பிரதிபலிக்கக்கூடிய கட்சிகள் தோற்றம் பெற்றன.

இத்தகைய ஓர் ஒழுங்குக்குள்ளேயே கடந்த மாகாண சபைத் தேர்தலும் நடந்து முடிந்துள்ளது. இத் தேர்தலில் எமது நவோதயா மக்கள் முன்னணி சுயேச்சைக் குழுவாக போட்டியிடத் தீர்மாணித்திருந்து போதும் இறுதியில் தமிழ் மக்களின் ஒற்றுமை கருதி தேர்தலிலிருந்து விலகிக் கொண்டது.

இவ்வாறு தினமகுடிக்குத் தெரிவித்தார் நவோதயா மக்கள் முன்னணியின் தலைவர் எஸ்.கே.கிருஷ்ணா.

நவோதயா மக்கள் முன்னணி கிழக்கு மாகாணத் தேர்தலிலிருந்து விலகிக் கொண்டமை குறித்தும் விளக்கமளிக்கும் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கும் போது.

நமது அமைப்பு இலங்கைத் தேசியத்தின் மீது கவனம் கொண்டது. இதேவேளை ஒவ்வொரு இனத்தினதும் தனித்துவம் குறித்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும் என்ற நோக்கத்தையும் கொண்டிருக்கிறது. இந்த வகையில் தமிழ், முஸ்லிம் மக்களின் இன உணர்வுகளை கருத்தில் கொண்டோம். அத்துடன் தேர்தல் கள நிலைவரங்கள் இந்த உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டிய தேவையை எமக்கு எடுத்தியம்பின அவற்றை மனதில் கொண்டோம் இவற்றுக்கு ஏற்பவே நாம் எமது முடிவை எடுத்தோம்

எதிர்காலத்தில் எமது நடவடிக்கைகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கான சிறந்ததொரு அனுபவத்தை இந்த முயற்சி எமக்கு ஏற்படுத்தித் தந்துள்ளது. குறிப்பாக மேல்மாகாணத்தில் தேர்தல் ஒன்று நடைபெறும் தருணத்தில் எமது அமைப்பின் கட்டுப்பாட்டுடனான நடவடிக்கைகள் இதற்கான பணிகளை சிறந்த முறையில் மக்கள் அரங்கிற்கு பெற்றுத்ததர வழிசமைக்கும் - என்றார்.





# அனுஷ்கா பாணியில் ஆரியா

யோக கலையில் வல்லவரான அனுஷ்கா, உள்ளூர் மற்றும் அவுட்டோர் படப்பிடிப்புகளில் எவ்வளவு பிசியாக இருந்தாலும் யோகா செய்வதற்கென்று தனிநேரம் ஒதுக்கி விடுவாராம்.

சமீபத்தில் செல்வராகவனின் இரண்டாம் உலகம் படப்பிடிப்புக்கு ஜோர்ஜியா காட்டுக்கு சென்றபோதுகூட, தினமும் காலை எழுந்ததும் யோகா முடித்தபிறகுதான் நான் ஸ்பொட் டுக்கே வருவேன் என்று கண்டிசனாக சொல்லி விட்டாராம். அவரது பழக்கவழக்கங்களை தெரிந்த செல்வராகவனும் அதற்கு தடைவிதிக்கவில்லையாம்.

ஆனால் அனுஷ்கா வரும்போதுதான் ஆர்யாவுக்கு ஸ்பாட்டில் வேலை என்பதால் அதுவரைக்கும் அனுஷ்கா யோகா செய்வதை வேடிக்கை பார்ப்பாராம். அப்போது யோகா செய்வதால் உடம்புக்கும் மனதுக்கும் கிடைக்கிற நற்பலன்கள் பற்றி அனுஷ்கா விளக்கியபோது ஆர்யாவுக்கும் யோகா மீது ஈர்ப்பு ஏற்பட்டு விட்டதாம்.

அதனால் அவ்வப்போது சின்னச்சின்ன யோக கலைகளை அவரிடம் பயிற்சி எடுத்திருக்கிறார். அதன் பலன் சிறப்பாக இருந்ததை உணர்ந்த ஆர்யா அதன்பிறகு ஜிம்முக்கு செல்வதை நிறுத்தி விட்டு தினமும் அனுஷ்கா பாணியில் யோகாவை செய்யத்தொடங்கி விட்டாராம். சென்னை திரும்பியபிறகு அனுஷ்கா சொல்லித்தரும் யோகா சாதாரணமல்ல அருமருந்து என்று தனது சினிமா நண்பர்களிடம் பெருமையாக சொல்லி வருகிறார் ஆர்யா.





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# தமிழ் உணர்வுச் சித்தாந்தம் உணரப்பட்டு தீர்வு வருமா?

பி.ஆர்.எம்.

*தமிழ் இனம் மிகத் தொன்மையான தேசிய இனங்களுள் ஒன்று. தொன்மையான வரலாறு, மொழி, பண்பாடு, கலை, அறம், மறம், நெறி கொண்ட ஏற்ற இறக்கங்கள் பலவற்றைப் பார்த்த ஒரு இனம்.*

இந்த இன மக்கள் தமிழகத்தையும் இலங்கையையும் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். முன்னைய காலங்களில் பல்வேறு சூழல்களில் சிங்கப்பூர், மலேஷியா, தென்ஆபிரிக்கா போன்ற நாடுகளில் குறைந்த எண்ணிக்கையில் குடியேறி புலம் பெயர்ந்த மக்களாகத் தமிழர் என்ற தனித்தன்மையோடு வாழ்ந்தும் வந்துள்ளனர்.

தமிழ் மக்களின் பரவல் இந்தளவிலே இருந்த வரை தேசியம் என்ற கருத்து உருப்பெற்றதாகவோ, வலுப் பெற்றதாகவோ தெரியவில்லை. அந்த கால கட்டங்களின் அரசியல் சூழல்களின் நோக்கங்கள் வேறாக இருந்தன என்றும் சொல்லலாம்.

இலங்கையில் சிங்கள பௌத்த வாதம் முனைப்புப் பெற்றபோது இலங்கைத் தமிழர்களை இரண்டாம் நிலைக் குடிமக்களாக்கி, அவர்களைப் பூண்டோடு அழித்து ஒழித்து விட கங்கனம் கட்டியவேளை அவிழ்த்துவிடப்பட்ட கொடுமைகளைத் தாங்க முடியாத இலங்கைத் தமிழர்கள் கடந்த 30 ஆண்டுகளாக அகதிகளாக உலகம் முழுவதும் பெயர்ந்து விட வேண்டிய அவல நிலை ஏற்பட்டது.

இவர்கள், ஏறத்தாழ 10 உலக நாடுகளில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையிலான சமூகமாகவும் வலுகொண்ட சிறுபான்மையினராகவும் 30-40 நாடுகளில் சற்றுக் குறைந்த எண்ணிக்கையில் இருந்தாலும் ஒரு சமூகமாக உருப்பெற்றிருக்கிறார்கள். இவர்கள் யாவரும் படித்துவிட்டு வேலைக்குப் போவதற்காக வெளிநாடு போனவர்கள் அல்லர். அடைக்கலமாக, வேறு வழியின்றி, பல இழப்புகளை சந்தித்து வெளிப்போக நேர்ந்தவர்களேமிக மிகப் பெரும்பான்மையினர்.

இவர்களை கைநீட்டி ஏற்றுக் கொண்ட பல உலக நாடுகள் இவர்களுக்கு வாழ்க்கையைக் கொடுத்த போதிலும் இவற்றிலுள்ள வல்லரசு நாடுகளும் மனித நேயம் போற் றும் நாடுகளும் செல்வம் நிறைந்த நாடுகளும் இவர்கள் துரத்தியடிக்கப்பட்டதன் காரணத்தை இன்றுவரை அறிய முற்படவில்லை.


ஆக, இப்படி புலம் பெயர்ந்து வாழவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்ட மக்கள் பல்வேறு அயலகச் சூழல்களுக்கு உள்ளாகி, பிரிந்து, அவலப்பட்டு வாழ்பவர்கள். எனினும் அப்படியே திசையற்று, வேரற்றுப் போய்விடாமலும் அந்நியச் சூழல்களால் வேர்களை இழந்து விடாமலும் இருக்கிறார்கள்

உலகம் முழுதும் பரவிக் கிடக்கும் தமிழ் மக்களுக்குக் குறிக்கோள் கொடுத்து, அவர்களின் அடையாளம் தொலைந்து விடாமல், அவர்களின் மொழி மறைந்துவிடாமல், பண்பாடு சிதைந்து விடாமல், தொன்மை குன்றாமல் காக்கும் இணைப்புச் சங்கிலியாகத்தான் தமிழ் தேசிய சித்தாந்தம் கட்டியெழுப்பப்பட்டுள்ளது.

இடத்தால், நாட்டால் பிரிந்து கிடந்தாலும் அவ்வவ் மண்ணில் இயல்புடன் வாழ்ந்தாலும் அதையும் கடந்து அனைவரையும் தமிழ் தமிழர் என்ற அடையாளத்துடன் நாட்டுப்பற்று, மொழிப்பற்று, இனப்பற்று, நெறி, பண்பாடு, பெருமை, அறம், மறம், கல்வி, ஈகை, உரிமை, மரபு, தொன்மம் ஆகியவற்றில் தமிழ்மக்களை ஒருங்கிணைத்து அவர்களின் வாழ்க்கை நம்பிக்கைக்கு ஒளியூட்டியது இந்த தமிழ் தேசிய சித்தாந்தமே.

உலக மெங்கும் பல்வேறுநாடுகளில் வாழும் இலங்கைத் தமிழர்களின் எழுச்சியான ஒற்றுமை என்பதே இந்த தமிழ்த் தேசிய உணர்வின் பெரும் வெற்றி என்று சொல்லலாம்.

இதற்கு ஆகியிருக்கிற விலை அளவிடற்கரியது. ஈகையாலும் உழைப்பாலும் ஒற்றுமையாலும் மன உறுதியாலும்




இந்தத் தேசியம் கட்டப்பட்டிருக்கிறது.

அந்த வகையில் பார்க்கும் போது, "தமிழ்த் தேசியம் என்பது புவியியல் எல்லைகளைப் பற்றியது அல்ல என்பதும் அது ஒரு குறிக்கோளுடன் கூடிய கொள்கை மற்றும் உணர்வுச் சித்தாந்தம் என்பதும் புரியும். அதற்கு அடிப்படை என்பது "ஒரு ஆதி நிலத்தில் வாழும் ஒரு இனமக்களின் அடையாளம் அழிக்கப்பட்ட போது, எழுந்த மனித உரிமை உணர்வின் பல்வேறு கூறுகள்தான" என்பது தெளிவாகிறது.

இலங்கைத் தமிழர்களின் போராட்டங்களுக்கு முன்னரான இலங்கையில் பல்வேறு கொள்கைகள் குறிக்கோள்களுடன் தோன்றிய போராட்டங்களை எல்லாம் ஒருமுகப்படுத்த இந்தச் சித்தாந்தம் அடிப்படையாக இருந்திருக்கின்றது.

ஒன்றை எண்ணிப் பார்க்க வேண்டும். ஒருவேளை இலங்கையில் தமிழர் போராட்டம் ஏற்பட வேண்டிய அவசியம் இல்லாது போயிருந்தால் தமிழ் இனத்தின் மேல் சிங்கள இனம் அழிப்புத் தாக்குதலை நடத்தாதிருந்திருந்தால் இந்தத் தமிழ் தேசிய சித்தாந்தம் தோன்றியிருக்கவே வாய்ப்பில்லை.


ஆக, ஒரு இனம் முழுமையாக அது வாழும் நிலத்தில் புறக்கணிக்கப் பட்ட சூழலிலேயே இந்தத் தேசிய முகிழ்ப்பு நிகழ்ந்திருக்கிறது அந்த முகிழ்ப்பு அவர்களின் குறிக்கோள்களுக்கான அகவிசையை அளிக்கும் சித்தாந்தம் என்பதும் அந்த சித்தாந்தம் அந்த மக்களின் நிலத்தில் தமது உரிமையை நிலை நாட்டுவதனை நோக்கியதென்பதும் தெளிவாகிறது.

ஒரு தமிழ் நிலத்தில் வீசுகின்ற தேசிய ஒளியால் மற்ற நிலங்களில் வாழும் தமிழ் மக்களுக்கு தொன்மம் மரபு பண்பு பெருமை என்ற இந்த நான்கு விடயங்களில் பயன் மேலும் பெருகுமே தவிர அரசியலிலும் புவியியலிலும் இருக்கவே முடியாது. அதற்கு தமிழ் வரலாற்றிலேயே சான்றுகள் உள்ளன.

இலங்கையில் அந்தக் காலத்தில் தமிழர் ஆட்சிக்கு இன்னல் வந்தபோதெல்லாம் சோழனோ பல்லவனோ பாண்டியனோ உதவி செய்திருக்கிறான். பெரும்பாலும் சோழநாடு அல்லது பாண்டிய நாடு என்ற அப்போதைய இந்தப் பகுதியிலான வல்லரசு என்ற வகையில் தமிழ்நாட்டின் உதவி பெற்ற அரசாக இலங்கைத் தமிழர்களின் அரசு இருந்திருக்கிறது.

இத்தகைய நிலையில் முள்ளிவாய்க்காலுடன் தமிழர்களின் போராட்டம் முற்றுப்பெற்றுவிட்டதாக யாரும் நோக்க முடியாது தமிழ்தேசியத்தை நிலைக்க செய்துள்ள சித்தாந்தம் இதன் இலக்கை அடையும் வரை நீட்சிமிக்கதாக உருப்பெறும் என்பதை இன்றைய அரசு உணாந்து கொள்வது அவசியமானது.


இந்நிலையில், நியாயமான பேச்சுவார்த்தைகளுடனான அரசியல் தீர்வை முன்வைப்பதற்கு உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்வதே முக்கியமானது. இதனை தற்போதைய அரசு செய்யவேண்டும் என்பதே பலரது எதிர்பார்ப்பாக உள்ளது. நடக்குமா?







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சென்னை என்றாலே மயிலாப்பூரையும், வட சென்னையையும், ராயப்பேட்டையின் நெரிசலான சந்துகளையுமே காட்டி வந்தவர்கள் தற்போது சென்னையின் புறநகர் பேருந்துகளை மட்டும் வைத்துக் கொண்டு, கொஞ்சம் அவுட்டருக்கு நம்மைத் தள்ளிக் கொண்டு போயிருக்கிறார்கள்..!

ஒரு இளைஞனின் வாழ்க்கையில் குறுக்கிடும் காதலையும் பெண்களையும் வைத்து சுவாரஸ்யமாக ரம்மியாட்டம் ஆடியிருக்கிறார் இயக்குநர்..! முதல் பாராட்டு ஹீரோ தினகரன் என்னும் தினாவாக நடித்த தினேஷிற்கு. பொருத்தமான தெரிவு..! முதல் காதலைச் சொல்ல நினைத்து முயன்று முயன்று இறுதியில் ஜெயிக்கும்போது கிடைக்கும் பதிலை கேட்டு திகைப்பதில்தான் இவரது நடிப்பு தொடங்குகிறது.

அதே சோகத்தோடு நண்பர்களுடன் கடைக்குப் போய் போண்டா சாப்பிடும்போது பேசுகின்ற பேச்சும் நடிப்பும் அட்டகாசம். இதே வேகத்தோடு அடுத்தடுத்த பெண்களுடன் பேசுவதற்கு முயன்று. வேண்டுமென்றே அடிதடிக்குள் நுழையும் அந்தக் காட்சியிலும் மிக யதார்த்தமான நடிப்பு!

எழுதி வைத்த கடிதத்தை பூர்ணிமாவிடம் கொடுக்க நினைத்து தவிப்பது. கல்லூரியில் சண்டியர் தனத்தைக் காட்டும் நேரத்தில் பூர்ணிமாவைப் பார்த்தவுடன் சட்டென இயல்புக்கு மாறுவது. பேருந்தில் செய்யும் கலாட்டாக்கள். ஒரு உணர்ச்சி வேகத்தில் தப்பிக்க முடியாத உணர்வில் பேருந்தில் அந்தப் பெண்ணைத் தடவும் காட்சி. “அமுதா வர்றாடா..” என்ற நண்பனின் குரலைக் கேட்டவுடன் சட்டென கண்ணைத் துடைத்துக் கொண்டு பரபரவென தலையைச் சிலுப்பிக் கொண்டு தயாராகி நிற்கும் அந்த வேகம்.. ஸ்டைல்.. எல்லாவற்றுக்கும் மேலாக இறுதியில் பூர்ணிமாவை அவள் கணவரோடு பார்த்துவிட்டு அதிரும் காட்சியில் இவரது நடிப்பு ஏ ஒன்.. “இன்னிக்கு ஒரு நாள் இருந்திட்டு போலாம்ல.. நீயும் வாயேன்..” என்று ஹீரோயின் அழைக்க அதற்கு மறுதலிக்க முயன்று சொல்ல முடியாமல் தவிக்கும் அந்தக் காட்சியும் ஹீரோவுக்கு பெத்த பெயர் கொடுக்கும் காட்சிகள்.. நிச்சயமாக அடுத்த வருடம் சிறந்த புதுமுகத்திற்கான அனைத்து விருதுகளும் இவருக்குத்தான் என்று உறுதியாகச் சொல்லலாம்..!

ஹீரோயின் பூர்ணிமாவாக நடித்த நந்திதாவின் சில சில எக்ஸ்பிரஷன்கள் கவர்ச்சியாக இருக்கிறது..! இறுதிவரையிலும் தான் யார் என்பதை அவர் காட்டாமலேயே இருப்பதுபோல திரைக்கதை என்பதால் எப்போதும் போலவே இருப்பது கொஞ்சம் ஈர்க்காமல் விட்டுவிட்டது.. பொண்ணுக்கு சிரிப்புதான் மூலதனம்.. இவருக்கு அடுத்து மனதைக் கவர்பவர் பக்கத்து வீட்டு அத்தைப் பொண்ணான அமுதா. முதல் அறிமுகத்திலேயே டிவியை பார்த்தபடியே பேசும் அந்த அரைவெட்டு முகமும் வாசலில் கோலம் போடும் அழகும் யாரை விரும்புகிறாள் என்பதையே வெளிப்படுத்திக் காட்டாத அந்த வயதுக்கே உரித்தான இன்னொசன்ட் நடிப்பும் ஓஹோ.

இதுபோலவே அடுத்த காதலிகளாக வந்து மாட்டும் அந்த இரட்டையர் நாயகிகள்.. இவர்கள் போர்ஷனில் இயக்குநரின் கலைத்திறமையும் காட்சிப்படுத்தும் திறனும் ரொம்பவே வெளிப்பட்டிருக்கிறது! இதை எதுக்கு எங்க கிட்ட கொடுக்குறீங்க என்ற கேள்வியிலேயே அவர்களது இத்தனை நாள் கொண்டாட்ட நிகழ்வைக் குறிப்பாகச் சொல்லிவிடுகிறார் இயக்குநர்.

ஆடி போனா ஆவணி பாடலும் ஆசை ஒரு புல்வெளி பாடலும் ஹிட்டித்திருக்கின்றன. இதில் ஆடி போனா ஆவணி கானா டைப்பாக இருந்தாலும் எடுக்கப்பட்ட காட்சிகளால் மேலும் மேலும் மெருகூட்டப்பட்டிருக்கிறது. இதே போல் ஆசை ஒரு புல்வெளி பாடல் மாண்டேஜ் காட்சிகள் தான் என்றாலும் இன்னும் சிரத்தையாக செய்திருக்கலாமோ என்று தோன்றுகிறது!

பாடல்களைவிட பின்னணி இசை அற்புதம் என்றே சொல்ல வேண்டும்! எந்தவிடத்திலும் தற்போதைய சினிமா இசை தென்பட்டுவிடாமல் கவனத்துடன் பார்த்திருந்து நாடக மேடைகளில் ஒலிக்கப்படும் மென்மையான இசையையே படம் முழுவதும் தவழ விட்டிருக்கிறார்.. அதிலும் ஒரு காட்சியில் வாழை மட்டையை சுவற்றில் அடித்தால் என்ன சப்தம் வருமோ அதையே தடதட காட்சிக்கு பயன்படுத்தியிருப்பது சாலப் பொருத்தம்..! கச்சிதமாக பணியாற்றியிருக்கிறார் இசையமைப்பாளர் சந்தோஷ் நாராயணன்!

இரட்டை மகளிரை சைட் அடிக்கும் காட்சியில் ஒவ்வொரு நாள் ஒவ்வொரு டிரெஸ்ஸில் வருவதையும் அடுத்தடுத்த நாட்களில் தினா பேசுகின்ற பேச்சு கூடிக் கொண்டே போவதையும் அந்த ஒற்றைக் காட்சியில் அழகுடன் விளக்கியிருக்கும் இயக்குநருக்கும் அதற்கு பெருந்துணையாக இருந்திருக்கும் ஒளிப்பதிவாளருக்கும் ஒரு சபாஷ்!

ஒரு காட்சியில் பேருந்து படிகளில் பயணம் செய்யும் தினா-பூர்ணிமாவையும், அவ்வப்போது வந்து செல்லும் காட்சிகளில் லைட்டிங்ஸே இல்லாமல் இருப்பதை வைத்து அழகுற செய்திருக்கும் ஒளிப்பதிவாளரின் பணியை புதிய ஒளிப்பதிவாளர்கள் பார்த்துக் கற்றுக்கொள்ள வேண்டியிருக்கிறது!


கேரக்டர் ஸ்கெட்ச்சிலும் இயக்குநர் அடித்து ஆடியிருக்கிறார். தினாவின் குடிகார அப்பா. குடித்துவிட்டு அவர் பேசுகின்ற பேச்சும். செய்யும் செயலும் மிக நயமான நகைச்சுவை. அமுதாவை வைத்துக் கொண்டு தினாவின் அம்மா அவனைத் திட்டுவதும், குடித்துவிட்டு மப்பில் இருக்கும் கணவனை சாப்பிடச் சொல்லி வற்புறுத்தி ஊட்டுவதும். என் ஜட்டி எங்க என்று கேட்கும் கேள்விக்கு அம்மாவின் அந்த வெறுப்பான பதிலுமாக. அந்தக் குடும்பத்தை தேடிப் பார்க்க வேண்டுமே என்ற ஆசையைத் தூண்டிவிட்டது!

உண்மையான கத்தி ரத்தம் சிந்த வைக்கும். ஆனால் அதுவே அட்டக் கத்தியாக இருந்தால் உண்மை தெரியாத வரையில் மிரள வைக்கும். உண்மை தெரிந்தால்! இதற்கான பதிலைத்தான் ஹீரோவின் கல்யாண வாழ்க்கையில் இறுதிக் காட்சியில் காட்டுகிறார்..! எத்தனையோ முயன்றும், கடைசியில் பிக்கப்பாகி முடிவது எதிர்பாராத வேறொன்றாகிவிடுகிறது..!

எல்லா காதலுமே ஜெயிப்பதில்லை.. ஆனால் காதல் முயற்சிகள் ஒருபோதும் நின்று போவதில்லை என்பதை இப்படத்தின் மூலம் உணர்த்தியிருப்பதாக பேட்டியளித்தார் இயக்குநர் ரஞ்சித்.

இப்படம் பெரிய ஹீரோ ஹீரோயின்களை வைத்து இன்னும் கொஞ்சம் நகைச்சுவை கதாநாயகர்களோடு வலம் வந்திருந்தால் நிச்சயம் ஓகே ஓகே, கலகலப்பு ரேஞ்சுக்கு பேசப்பட்டிருக்கும். இப்போதும் பரவாயில்லை. இயக்குநர் ரஞ்சித்திற்கு நல்ல பெயரையும் அடுத்த படத்திற்கான வாய்ப்பையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது.

முதல் பார்வையிலேயே இந்தப் படத்தை வாங்கி, கூடுதலாக 1 கோடிக்கும் மேல் செலவழித்து படத்தை ரிலீஸ் செய்திருக்கும் ஞானவேல்ராஜா நிச்சயம் பாராட்டுக்குரியவர். இவர்களை போன்ற பெருந்தனக்காரர்கள் இது போன்ற சின்ன பட்ஜெட்டில் தயாராகும் தரமான திரைப்படங்களை ஊக்குவித்தால் நிச்சயம் தமிழ்ச் சினிமாவில் இது போன்ற சினிமாக்கள் நிறையவே வெளிவரும்!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுக்கு நான்கு



## நறுக்கு 1

உளடகத் தகவல்களைப் பார்த்து தெரிந்து கொண்டு அதற்காக உடன் பத்திரிக்கை அறிக்கைவிடும் கலாசாரம் எமது அரசியல்வாதிகளிடம் காணப்படுகின்றது. இவ்வா றான அறிக்கைகளை படிக்கும் மக்கள், இந்த அரசி யல்வாதி தமது நலன்களில் மிகுந்த கவனம் செலுத் துவதாக நம்பிவிடுகின்றனர். அது ஒரு தந்திரமான நடவ டிக்கை என்பதை இவர்கள் புரிந்து கொள்வதில்லை.அரசி யல்வாதிகளின் இத்தகைய தந்திரத்தை தெரிந்து கொள்ள வேண்டுமானால் அவர்கள் சூட்டோடு சூடாக வெளியிட்ட அறிக்கையில்குறிப்பிட்ட விடயம் தொடர்பில் அவர்கள் தொடர்ந்து முன்னேடுக்கும் நடவடிக்கை எது?. என்ன? என்பதைப் பார்த்தால் புரிந்து கொள்ள முடியும். தேர்தல் காலத்தில் மட்டுமல்ல சாதாரண காலத்திலும் இவர்கள் தமது நாடகங்களை அரங்கேற்றத்தான் செய்கின்றனர். மொத்ததில் ஏமாறுபவர்கள் மக்களாகத் தான் இருக்கின்றனர்.

## நறுக்கு 2

சமகாலத்தில் முனீஸ்வரம் பத்திரகாளியம்மன் ஆல யத்தில் வருடாந்தம் நடத்தப்படும் பலிபூஜை குறித்து பிரதி யமைச்சர் ஒருவர் கடுமையாக தனது எதிர்ப்பைத் தெரிவித்திருந்தார். பலி பூஜை நடத்துவதானால் முதலில் எனது கழுத்தை வெட்ட வேண்டும்.புனித கபிலவஸ்து நாட்டுக்குள் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில் மிருகபலி பூஜைக்கு இடமில்லை என வரிந்து கட்டிக் கொண்டார் இவர் வெளியிட்ட தகவல்கள் வெளிவந்ததும் நம்மவர்கள் உடனாடியாக அறிக்கைவிட்டனர்." இந்த பலியிடல்களை எதிர்த்து கடந்த வருடம் முன்னேஸ்வர கோவில் வளாகத்தில் பிரதியமைச்சர் நுழைந்து நடந்துகொண்ட முறை மை இந்து மத உணர்வுகளை புண்படுத்தும் விதமாகவும், பூசகர்களையும், பக்தர்களையும் அச்சுறுத்தும் விதமாகவும் அமைந்திருந்தது. இது மீண்டும் நடக்க கூடாது.இது சம்பந்தமாக மத விவகாரங்களுக்கு பொறுப்பான அமைச்சருடன் இணைந்து இந்த விவா கரத்துக்கு முடிவு கண்டிருக்க வேண்டும். தேவையற்ற மதச்சச்சரவுகள் இடம்பெற அனுமதிக்ககூடாது" எனத் தெரிவித்தனர்.

## நறுக்கு 3

இவர்களது இந்த அக்கறை பாராட்டப்பட கூடியதாக அமைந்தபோதும் இவ்விடயத்தில் பின்னர் புத்தபிக்குகள் ஆர்பாட்டஊர்வலம் நடத்தியமை பின்னர் குறிப்பிட்ட அமைச்சர் தெரிவித்து வந்த கருத்துகள் இவை குறித்து இவர்கள எதுவும் தெரிவிக்கவில்லை . ஏன் வாய்முடி மௌனிகளாக இருந்தனர் என்பதும் தெரியவில்லை. இந்து மாமன்றம் கூட இவ்விடயத்தை அரசியலாக்கா தீர்கள் என்று கோரியிருந்த போதும் இவ்விடயம் புகைவிட்டுக் கொண்டேயிருந்தது இந்நிலையில் ஜனாதிபதியின் தலையீட்டில் இப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட்டுள்ளது.

## நறுக்கு 4

ஜனாதிபதி இவ்விடயத்தில் தலையிட்டுள்ளார் என்றால் அதற்கான பின்புலமாக இவ்வாறு அறிக்கைவிட்ட அரசியல்வாதிகள் இருந்தனரா? என்பது கேள்விக்குரியது. இதற்கான பதில் இல்லை என்பதே! இதனை நாம் உறுதி யாகச் செல்வதற்கு காரணம் இவர்கள் ஜனாதிபதியிடம் பேசி தீர்வை பெற்று தந்திருப்பார்களாயின் உடன் அறிக்கை விட்டிருப்பார்கள் அது கூட வெளிவரவில்லை எனவே அவர்கள் இதில் சம்பந்தப்படவில்லை என்பது தெளி வாகின்றது அல்லவா? எனவே மக்களே ஏமாற்றும் இவ்வாறான நாடகங்களை நடத்தவேண்டுமா என்பது குறித்து சம்பந்தப்பட்டவர்கள் சிந்திக்கட்டும்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசி

எயர் கனடா விமானம் முகில்களை கிழித்துக்கொண்டு உயர உயரப்பறக்கிறது. ஆனால் எண்ணங்கள் என்றும் பூமியைச்சுற்றித்தான் வலம்வந்து கொண்டிருக்கிறது. சகோதரங்களை எல்லாம் கனடாவுக்கு அனுப்பும் மட்டும் எந்த வெளிநாட்டையும் நான் எட்டிப்பார்த்ததே கிடையாது. செக்குமாடு போல் வீடும் வேலையுமாக பதினைத்து வருடங்கள் உருண்டோடி விட்டன. உறவுகள் பற்றிய கனவும் சகோதரங்கைளைக் காணும் துடிப்பும் இப்படி இப்படி எப்படி எப்படியோ எண்ணங்கள் ஏக்கங்கள்...! சாப்பாட்டை எண்ணும்போது சந்திரா மாமி தான் கண்முன் நிற்பா. என்ன உணவானாலும் மாமியை வெல்ல யாருமில்லை. ஊரில், கிழமைக்கு ஒருதடவையாவது மாமியினுடைய சாப்பாடு சாப்பிடவில்லை என்றால் எனக்கு வாழ்வே விடியாது. அப்படி அமிர்தமாய் இருக்கும் அவருடைய உணவு. அவருடைய கைக்கென்று ஒரு தனிச் சிறப்பு...அது கையல்ல அச்சயபாத்திரம். மாமியும் இப்போ கனடாவில்தான். அவவை நினைக்கும் போதே வாயூறத் தொடங்குகிறது.

எனக்கு நான்கு தாய்நாடுகள்.. அகதிதானே! பிறந்தது சிங்கப்பூர், வளர்ந்தது இலங்கை, படித்துப் பட்டம் பெற்றது நோர்வே, கனடாவில் என் காலடி படவில்லையாயினும் நான்காவது தாய்நாடு போன்ற உணர்வு. என் உற்றம், சுற்றம், உறவு எல்லாமல்ல, மாமியின் சாப்பாடும் அங்கேதானே.

கனடா விமானநிலையம் என் உறவுகளாலும், நண்பர்களாலும் நிரம்பியது... ஏதோ ஒரு மந்திரி, குடும்பத்துடன் வந்து இறங் கியது போன்ற ஓர் உணர்வு. மாமியைத் தேடுகிறேன் காணவில்லை. தம்பிசொன்னான், அண்ணா!! மாமி வரவில்லை, வேலையாம், நாளைக்கு இரண்டு மணிக்கு சாப்பிடவரட்டாம். கனடா வந்து இறங்கியதை விட, உறவுகள் நண்பர்களைச் சந்தித்ததை விட மாமி வீட்டில் நாளை விருந்து என்பது தான் என்னை எங்கோ கொண்டு சென்றது. மாமியை நினைத்தாலே பசியெடுக்கத் தொடங்கும்... சீ..மாமிக்கு ஒரு பெண்பிள்ளை இருந்தால் மாமியின் சாப்பாட்டுக்காக ஆவது அவளைத் திருமணம் செய்திருப்பேன் என்று என் மனைவியைச் சீண்டுவது வழக்கம்.

காலை புலர்ந்தது பயணக் களைப்புத் தீர உறங்கி எழுந்தாயிற்று மனைவி சாப்பிடக் கூப்பிடுகிறாள். யாருக்கு வேணும் உந்தச் சுட்ட பாணும் செத்த பிண இறைச்சியும். என்னுக்குள் எண்ணிக்கொண்டேன். மாமியின் சாப்பாடு சாப்பிட்டிருந்தால் தெரியும் அதன் அருமை. நான் பசியுடனே மாமியின் சாப்பாட்டுக்காகத் தயாராகிறேன். எந்தப்பரிசுப் பொருளைக் கொடுத்தாலும் மாமியின் சாப்பாட்டுக்கு ஈடாகாது.

மணி ஒண்டரை, மரணப்பசி, மாமி வீட்டை நோக்கி தம்பியின் கார் பறக்கிறது. சிரித்த முகம், பாசமான கண்கள், அன்பான வார்த்தைகள்... மாமி மாறவே இல்லை. பரிசுப் பொருட்களைக் கொடுத்து விட்டு இருக்கைகளில் அமர்ந்து கொள்கிறோம். மாமி, மாமா இருவரும் எம்முடன் கதைத்துக்கொண்டு இருக்கிறார்கள். ஊர்க்கதைகள், உலக்கதைகள், இனசனம் என்று கதை வளர்ந்து கொண்டு போனது. சாப்பாட்டு மணமே இல்லை. அடுக்களைப் பக்கம் எட்டிப்பார்க்கிறேன். அங்கே சாப்பாடு எதையும் காணவுமில்லை. இன்று என்வயிற்றில் அடிதான். தம்பியின் காதில் மாமி விருந்துக்கத்தானே வரச்சொன்னவ? ஒண்டையும் காணேல்லை? தம்பி ஆம் என்பதுபோல் தலையை அசைத்து விட்டு அமைதியாக இருக்கிறான். என்னுள் பெரும் கலவரம். தேநீர் போடுவதாகக் கூடத்தெரியவில்லை. ஊரில் மாமி வீட்டுக்குப் போனால் அவ முதலில் ஓடுவதே குசினிக்குள்தான். சாப்பாடும் தேனீரும் தராமல் அனுப்பமாட்டா... எனக்கு ஒன்றுமாய் புரியவில்லை.

கொட்டாவி விட்டு என்பசியை உணர்த்துகிறேன். சிறு குடலைப் பெருங்குடல் தின்று கொண்டிருந்தது. எனக்கு பசிக்கிறது என்பதை உணர்ந்த மாமி, "மருமகன் ரீ போடட்டோ" என்றபடி இருக்கையை விட்டு எழுகிறார். மரியாதைக்காக கொஞ்சம் பொறுத்துக் குடிப்பம் என்று என்பசியையும் பொருட்படுத்தாது மாமியை உற்றுப்பார்க்கிறேன். மாமி எதுவித சலனமும் இல்லாமல் மீண்டும் ஆசனத்தில் அமர்ந்து விடுகிறார். எனக்கு இன்று தேநீரும் கிடைத்தபாடில்லை. கொடுத்த பரிசுப் பொருளும் வீண்தான் என்று என்மனம் என்னை எள்ளி நகையாடிக் கொண்டது. மாமியும் மாமாவும் ஊர்க்கதைகளையும் பழைய நினைவுகளையும் மீட்டுக் கொண்டிந்தனர். எனக்கே வயிறு அழுவது கேட்டுக் கொண்டிருந்தது.

வீட்டுமணியடித்தது. என்னடாப்பா எமக்கே சாப்பாடு தந்தபாடில்லை இதற்கும் இன்னும் புதிய விருந்தாளிகளா? இனித்தான் மாமி சமைக்கப்போகிறாவா? இப்ப சமைத்து எப்ப சாப்பிடுவது? எனக்கு ஒன்றுமே புரியவில்லை. மாமி எந்தவித சலனமும் இன்று வெளிக்கதவை திறக்கிறார்.

சாப்பாட்டு வாசம் மூக்கைப் பிரித்தது. ஓ...ஓ மாமி சாப்பாட்டை கடையில் ஒழுங்கு பண்ணியிருக்கிறா..

வந்தசாப்பாடு பரிமாறப்படுகிறது. தோசை, இடியப்பம், சாம்பாறு, சட்ணி, இறைச்சிக்கறி, சொதி, மிளகாயுடன் வடகப் பொரியல். மாமி சமைத்திருந்தால் இப்படி பல கறி வைத்திருக்கமாட்டா தான். சாப்பாடும் மாமியின் சாப்பாட்டுக்கு ஈடுகொடுக்கிறது. எல்லோரும் மூக்கு முட்ட ஒரு பிடி பிடித்தோம். வயிறு நிரப்பியது. ஆனால் மனம் மட்டும் நிரம்பவே இல்லை... ஆள்மனதில் ஒரு வருடல், நெருடல், வருத்தம், வேதனை... ஆயிரமாயிரம் கேள்விகள்...? ஏன் ஏன் இப்படி...?



எப்படி...எப்படி...எனக்கு எப்படித்தெரியும் என்று மனம் குழம்பிக் கொள்கிறது. சாப்பிட்டாயிற்றே என்ன குழப்பம். கடையிலே சாப்பாடு எடுப்பது என்றால் கடையிலே எல்லாரும் சாப்பிட்ட பின் மாமி வீட்டுக்கு வந்திருக்கலாமே. பணம் எம்மிடமும் உண்டுதானே. என் எதிர்பார்ப்பு உடைந்தது... மனதைச் சமாதானப்படுத்திக் கொள்கிறேன்... மனமே எதிர்பார்ப்பு என்ற ஒன்று இருந்தால் ஏமாற்றம் என்ற இன்னொன்று நிச்சயம் இருக்கும்.... இருப்பினும் மனம் அடங்கியதாக இல்லை...

மாமியின் முகத்தையே பார்க்கிறேன்..அது பழையமாதிரி சலனமற்று, குற்றம் குறையற்று தெளிவாகவே இருக்கிறது.

எனக்கு இருப்புக் கொள்ளவில்லை. உடனடியாக வெளிக்கிட்டுப் போய்விடவேண்டும் போல் இருக்கிறது. தம்பியைப் பார்த்து வெளிக்கிடுவமா எனச்செய்கை காட்டுகிறேன். சரி எனச்செய்கை காட்டினான் அவனும். மாமிக்குப் புரிந்துவிட்டது நாங்கள் புறப்படப்போகிறோம் என்று. மருமகன் பால் ரீ இருக்கு குடிக்கேல்லையே என சுடுநீர் போத்தலை எடுத்துவந்தார். அதுவும் ஓடர் செய்யப்பட்டு வந்தது தான்...

"சாப்பாடு பிடிச்சுதோ" இதுமாமி. ஏதோ தான்சமைத்த சாப்பாடுதிரி என்ற என்மனம் புலம்பியது. சூப்பராய் இருந்தது... கனடாவிலை நல்லாச் சமைக்கிறார்கள் என்றேன். மாமியும் மாமாவும் தமது கடையில் இருந்து சாப்பாடு வந்ததுபோல் கடைகளையும் சாப்பாடுகளையும் புகழத் தொடங்கினார்கள். போதும் போதும் என்றாகி விட்டது. மனைவி என் முகத்தை ஒரு நக்கலாக பார்க்கிறாள்; ஏதோ மாமி மாமி மாமியின்டை சாப்பாடு என்றாய் எங்கே..? என்பதுபோல் இருந்தது. என்முகத்தில் அசடு தான் வழிந்தது

வீட்டில் வாசல்வரை மாமியும் மாமாவும் வந்தார்கள். பிரிந்து போகும்போது மாமியை மீண்டும் திரும்பிப் பார்க்கிறேன்... சலனமற்றிருந்தது அவவின் முகம். வயிறு முட்டச்சாப்பிட்டும் பசியுடனே தான் திரும்புகிறேன் என்றது மனது. வயிறு நிறைந்துதான் இருந்தது மனம் மட்டும் வெறுமையாய் பசி... பசி என்று பதைத்துக்கொண்டது. சாப்பாடு இருந்தது அங்கு மாமியில்லை. சாப்பாட்டில் மாமியில்லை. அவரின் உடல் இருந்தது உயிர் இல்லை.

உதவாத உணவை மாமியின் கையால் செய்து பரிமாறியிருந்தால் கூட சாப்பிட்ட திருப்தியும் மனநிறைவும் இருந்திருக்கும். பசியுடன் உயிரை இழந்தவன் போல் திருப்தியற்றவனாக காரில் வந்து ஏறிக்கொள்ள அது உறுமிக்கொண்டு கிளம்பியது.

– நோர்வே நக்கீரா





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






சில மனிதர்கள் முகத்தில் சிரிப்பைக் காணமுடிவதில்லையே அது என்ன குணம்? அவர்களை என்ன வென்று சொல்வது? அவர்களை எப்பிரிவில் சேர்ப்பது?

இந்த கேள்விகளுக்கு ஒரே வரியில் பதில் சொல்ல வேண்டுமென்றால் "மனிதன் சிரிக்கப்பிறந்தவன் ஆனால்சிரிக்க மறந்தவன்" என்றுதான் சொல்லவேண்டும்.

குழந்தை பிறந்த சில தினங்களிலேயே தன் பொக்கை வாயைத் திறந்து புன்னகைக்கத் துவங்கிவிடுகிறது.

பிறந்த 20ஆவது வாரத்தில் சிரிக்க ஆரம்பித்துவிடுகிறது. 6ஆவது மாதத்தில் சத்தம்போட்டுச் சிரிக்கத் துவங்குகிறது. கண்பார்வை அற்ற குழந்தைகூட புன்னகைக்கிறது. எனவே குழந்தைகள் புன்னகைப்பது சிரிப்பது என்ற உணர்ச்சிகள் அதன் தாயைப் பார்த்துக் கற்றுக்கொள்வது அல்ல என்று அறிஞர்கள் கூறுகிறார்கள்.

சின்னக் குழந்தைகள் ஒரு நாளில் 200 லிருந்து 400 முறை சிரிக்கிறார்கள். ஆனால், பெரியவர்களோ 20 முறைதான் சிரிக்கிறார்கள் என்று ஒரு நூலில் காணப்படுகிறது. இதைப் பார்க்கும்போது, ஒரு நாளில் 200 லிருந்து 400 முறை சிரித்துக்கொண்டிருந்த நாம், 20 முறை மட்டுமே நம் சிரிப்பைக் குறைத்துக்கொண்டதே நமது அநேக சிக்கல்களுக்குக் காரணம்.

"மனவியல்" என்ற ஒன்று வளர்வதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்பே தமிழ் மூதாதையர்கள் சிரிப்பின் அவசியத்தை நன்கு உணர்ந்திருக்கிறார்கள். ஆகவேதான் "வாய்விட்டுச் சிரித்தால். நோய்விட்டுப் போகும்" என்ற அறிவுரையை நமக்குப் பழமொழியாகத் தந்துவிட்டுச் சென்றிருக்கிறார்கள்.

"சிரித்து வாழவேண்டும் பிறர் சிரிக்க வாழ்ந்திடாதே!" என்று நமது தமிழ்க் கவிஞர் நமக்கு அறிவுறுத்தியுள்ளதை நினைவுகூருங்கள்.


சிரிக்கும்போது "என்டோர்பின்ஸ்" என்னும் திரவப்பொருள் நம் மூளையில் உருவாகி ஒருவகையான இயற்கைப் போதையை ஊட்டுகிறது. இதனால் நம் உடலுக்குப் புத்துணர்ச்சி ஏற்படுகிறது.ஆனால், நாம் கவலையோடிருக்கும்போது, மனவழுத்தம், சோர்வு இவைதான் ஏற்படுகிறது. மனவழுத்தமானது, பதட்டம், விரக்தி போன்ற உணர்ச்சிச் சிக்கல்களை உருவாக்கிவிடுகிறது.

நாம் மனம்விட்டுக் குலுங்கக் குலுங்கச் சிரித்தால் மனத்திலிருக்கும் கவலைகளும் அழுத்தம், பதட்டம், விரக்தி இவைகளும் விரட்டியடிக்கப்பட்டு மனம் இலேசாகி உட்லெங்கும் புத்துணர்ச்சி ஏற்படுகிறது. மனம் விட்டுச் சிரித்து. மகிழ்ச்சியோடு இருக்கும்போது நமக்கு ஆற்றல் அதிகமாகி நாம் செயல்படுத்தும் அனைத்து வேலைகளுமே சிறப்பாக நடந்தேறுகின்றன. தொடர்ந்து சிரிப்போம்..

# சிரித்து வாழவேண்டும்








**கேள்வி: ஹலோ, புத்தகத்துக்கும் கடிதத்துக்கும் என்ன வித்தியாசம் சொல்லும் பார்க்கலாம்?**

பாமினி கொழும்பு 07.

**பதில் :** புத்தகத்தை படித்துக்கிழிக்கலாம் ஆனால் கடிதத்தை கிழித்துதாங்க படிக்கமுடியும். எப்புடி?

**கேள்வி: பாம்பாட்டியரே தினமும் அவுஸ்திரேலியாவுக்கு கப்பல் போகும் செய்திகள் வருகிறதோ நீர் போகல்லையா?**

**சாந்தன் கிளிநொச்சி.**

**பதில் :**ஒரு வாரிஸின் வியாபாரம் எங்கிறாங்க அவரை தேடிக்கிட்டிருக்கேன் சந்திரனுக்கு போக முன்னடி அவரை சந்திச்சா லக்குத்தான்

**கேள்வி: தினமகுடியில என்னையா படம் போட்டிருக்கிறீங்க? மார்லின்மன்றோவின் வேறபடமே கிடைக்கல்லையா?**

**சாவித்திரி கொட்டாஞ்சேனை.**

**பதில் :** பார்க்கிறது, கேட்கிறது, பேசுறது மனித உரிமை. அதை தடைசெய்யக் கூடாதுன்னு சொல்றாங்க இதுக்குப்போய் கோபப்படுறீங்களே இல்லாத ஒன்னையா காட்டிட்டாங்க take it easy.

**கேள்வி: பாம்பாட்டியாரே நான் ஒரு மாணவன் எனக்கு ஒரு விடயம் தெரிந்து கொள்ள வேண்டும் பூனைத்தீவு என்று ஒரு தீவு உலகில் இருக்கின்றதா?**

**தர்ஷன் பம்பலப்பிட்டி.**



**பதில்** ஆம் உண்டு இது ஜப்பானில் உள்ள இஸினோமா நகரத்தில் உள்ளது ரஸிரோஜிமா என்பது இதன் பெயர் இங்கு மக்களைவிட பூனைகளே அதிகம் உள்ளன. இங்குள்ள வீடுகள் கூட பூனை வடிவத்தில் இருக்கிறதுன்ன பாருங்களேன்

**கேள்வி: ஹலோ, மைடியர் காதலின் ஆரம்பத்திற்கு முக்கியமாக தேவைப்படுவது எது?**

ராஜி மட்டக்குளி.

**பதில்:** கண்ணு சரியா இருக்கவேணுங்க இதோட கொஞ்சம் தைரியமும் தேவையுங்க

ஆமா உங்களை optical ல்ல யாரோ பார்த்ததா சொன்னங்களே...

**கேள்வி: கிழக்கு மாகாணத் தேர்தலில் தமிழ்தேசிய கூட்டமைப்பு வென்று ஆட்சியை பிடிக்குமா?**

வேலாயுதம். திருகோணமலை.

**பதில்:** புடிக்கவேண்டும் என்பதுதான் பலரோட எதிர்பார்ப்பு. ஆனாப் பாருங்கோ எங்கட தமிழ் ஆட்களுக்கு வாக்களிக்கப் போறதில ஒரு பஞ்சியிருக்குது. அதல ஒரு வேளை வோட்டு குறையலாம். முதல்ல கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என்பதை அவையளுக்கு சொல்லிக் கொடுங்க.

**கேள்வி: பாம்பாட்டியரே நன்பன் யார்? எதிரி யார் என்பதை எப்படித் தெரிந்து கொள்ளமுடியும்?**

சந்தோஷ் வவுனியா.

**பதில்:** நமக்கு நன்பனும் நாமே, எதிரியும் நாமே. எவன் ஒருவன் தன் பலவீனங்களை முறியடித்து வெற்றி பெறுகிறானோ அவன் தனக்குத் தானே நன்பனாகிறான். யார் ஒருவன் தன் பலவீனங்களை வெற்றிபெற முடியாமல் தவிக்கிறானோ அவன் அவனுக்கே எதிரியாகின்றான்.

**கேள்வி: ஹலோ மைடியர், நம்ம நமிதா என்னை மச்சான்னு கூப்பிட ஒரு ஐடியா சொல்லுமேன்**

சதீஸ். கொச்சிக்கடை.

**பதில்:** அவங்க இப்ப "மானாட மயிலாட" நிகழ்ச்சிக்காக மலேஷியா போயிட்டுவந்திருக்காங்க அங்க நிறைய மச்சான் போட்டதால களைப்பாம். எதுக்கும் நீங்க மானாட மயிலாட நிகழ்ச்சியில ஆட ரைபண்ணினா என்ன?

**கேள்வி : சீனாவில் இந்துசமயக் கோவில் உள்ளதாமே உண்மையா?**

காயத்திரி. வெள்ளவத்தை



**பதில்** உள்ளது சீனாவின் சக்கரவர்த்தியாக இருந்த குப்லாய்கான் என்பவர் இதனை நிர்மானித்துள்ளார் இங்குள்ள கல் வெட்டு ஒன்றில் தமிழ், சீன மொழிகள் உள்ளன அதோ அந்த கல்வெட்டை நீங்களும் பார்க்கலாம்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் சரவெடி ஆட்டம்

கிரிக்கெட்டில் சரவெடி ஆட்டம் என வர்ணிக்கப்படும் இருபது-20 போட்டியின் உலகக் கிண்ணத் திருவிழா எதிர்வரும் 18ஆம் திகதி அம்பாந்தோட்டையில் கோலா-கலமாக ஆரம்பிக்கிறது.
சர்வதேச ரீதியில் 2007ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்ட உலகக் கிண்ண இருபது-20 தொடர், இம்முறை இலங்கையில் நடைபெறவுள்ளது.
2007ஆம் ஆண்டு நடைபெற்ற முதலாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடரின் இறுதியாட்டத்தில் இந்திய அணி, பாகிஸ்தான் அணியை 5 ஓட்டங்களால் வெற்றிபெற்று முதலாவது கிண்ணத்தைச் சுவீகரித்தது.
பின்னர் 2009ஆம் ஆண்டு நடைபெற்ற இரண்டாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணியை 8 விக்கெட்டுகளால் வெற்றிபெற்ற பாகிஸ்தான் அணி, இரண்டாவது கிண்ணத்தைத் தனதாக்கிக் கொண்டது.
தொடர்ந்து 2010ஆம் ஆண்டு நடைபெற்ற மூன்றாவது இருபது-20 உலகக் கிண்ணத் தொடரில் கிரிக்கெட்டின் தாயக அணியான இங்கிலாந்து, ஆஸ்திரேலிய அணியை 7 விக்கெட்டுகளால் வீழ்த்தி கிண்ணத்தைக் கைப்பற்றியது.
இங்கிலாந்து அணி அதுவரை எந்தவிதமாக உலகக் கிண்ணத்தையும் (50ஓவர்கள், இருபது-20) வென்றதில்லை. இந்த வெற்றி அந்த அணிக்குக் கிடைத்த வரலாற்று வெற்றியாக அமைந்தது.
இந்நிலையில், நான்காவது உலகக் கிண்ணத் தொடர் இலங்கையில் நடைபெறவுள்ளது. இத்தொடர் எதிர்வரும் 18ஆம் திகதி அம்பாந்தோட்டையில் ஆரம்பித்து, அடுத்த மாதம் 7ஆம் திகதி கொழும்பில் இறுதியாட்டத்துடன் நிறைவடைகிறது.
இத்தொடரில் மொத்தம் 12 அணிகள் பங்கேற்கின்றன. இவை ஏ, பி, சி, டி என நான்கு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு பிரிவிலும் தலா 3 அணிகள் இடம்பெற்றுள்ளன.
போட்டிகளின் அடிப்படையில் ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அடுத்த சுற்றான சூப்பர்-8இற்கு முன்னேறும், பின்னர் இச்சுற்று பிரிவு -1, பிரிவு-2 என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு பிரிவிலும் தலா 4 அணிகள் இடம்பிடிக்கும்
பின்னர் இரு பிரிவுகளிலும் முதல் இரண்டு இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்குத் தகுதி பெற்று, பின்னர் இந்தப் போட்டிகளில் வெற்றிபெறும் அணிகள் இறுதியாட்டத்துக்குத் தகுதிபெறும்.
இத்தொடரின், முதலாவது ஆட்டத்தில் இலங்கை அணி, சிம்பாப்வே அணியை எதிர்கொள்கிறது. இந்த ஆட்டம் அம்பாந்தோட்டையில் இரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.
இப்போட்டிகள் அம்பாந்தோட்டை சூரிய வெவவில் அமைந்துள்ள தேசிய கிரிக்கெட் மைதானம், கண்டி பல்லேகலவில் அமைந்துள்ள தேசிய மைதானம் மற்றும் கொழும்பில் அமைந்துள்ள ஆர். பிரேமதாஸ மைதானம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளன.

## அணிகள் இடம்பிடித்துள்ள பிரிவுகள்

| ஏ | பி | சி | டி |
|---|---|---|---|
| இங்கிலாந்து | ஆஸ்திரேலியா | இலங்கை | பாகிஸ்தான் |
| இந்தியா | மே.இ.தீவுகள் | தெ.ஆபிரிக்கா | நியூஸிலாந்து |
| ஆப்கானிஸ்தான் | அயர்லாந்து | சிம்பாப்வே | பங்களாதேஷ் |

## இருபது-20 : 2012 போட்டி அட்டவணை

| | திகதி | அணி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 1) | 18.09. | இல.-சிம். | 7.30 இரவு | அம்பாந்தோட்டை |
| 2) | 19.09. | ஆஸி.-அயர். | 3.30 பி.ப. | கொழும்பு |
| 3) | 19.09. | ஆப்.-இந். | 7.30 இரவு | கொழும்பு |
| 4) | 20.09. | தெ.ஆ.-சிம். | 7.30 இரவு | அம்பாந்தோட்டை |
| 5) | 21.09. | பங்.-நியூஸி. | 3.30 பி.ப. | கண்டி |
| 6) | 21.09. | ஆப்.-இங். | 7.30 இரவு | கொழும்பு |
| 7) | 22.09. | இல.-தெ.ஆ. | 3.30 பி.ப. | அம்பாந்தோட்டை |
| 8) | 22.09. | ஆஸி.-மே.இ.தீ. | 7.30 பி.ப. | கொழும்பு |
| 9) | 23.09. | நியூஸி.-பாக். | 3.30 பி.ப. | கண்டி |
| 10) | 23.09. | இங்.-இந். | 7.30 இரவு | கொழும்பு |
| 11) | 23.09. | அயர்.-மே.இ.தீ. | 7.30 இரவு | கொழும்பு |
| 12) | 25.09. | பங்.-பாக். | 7.30 இரவு | கண்டி |

### சூப்பர்-8 சுற்று

| | திகதி | அணி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 13) | 27.09. | சி1-டி2 | 3.30 பி.ப. | கண்டி |
| 14) | 27.09. | ஏ1-பி2 | 7.30 இரவு | கண்டி |
| 15) | 28.09. | டி1-சி2 | 3.30 பி.ப. | கொழும்பு |
| 16) | 28.09. | பி1.-ஏ2 | 7.30 இரவு | கொழும்பு |
| 17) | 29.09. | ஏ1.-டி2 | 3.30 பி.ப. | கண்டி |
| 18) | 29.09. | சி1.-பி2 | 7.30 இரவு | கண்டி |
| 19) | 30.09. | பி1.-சி2 | 3.30 பி.ப. | கொழும்பு |
| 20) | 30.09. | டி1.-ஏ2 | 7.30 இரவு | கொழும்பு |
| 21) | 01.10. | பி2-டி2 | 3.30 பி.ப. | கண்டி |
| 22) | 01.10. | ஏ1-சி1 | 7.30 இரவு | கண்டி |
| 23) | 02.10. | பி1-டி1 | 3.30 பி.ப. | கொழும்பு |
| 24) | 02.10. | ஏ2-சி2 | 7.30 இரவு | கொழும்பு |

### முதலாவது அரையிறுதி

| | திகதி | அணி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 25) | 04.10. | பிரிவு1:1-பிரிவு2:2 | 07 இரவு | கொழும்பு |

### இரண்டாவது அரையிறுதி

| | திகதி | அணி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 26) | 05.10. | பிரிவு2:1-பிரிவு1:2 | 07 இரவு | கொழும்பு |

### இறுதியாட்டம்

| | திகதி | அணி | நேரம் | இடம் |
|---|---|---|---|---|
| 27) | 07.10. | | 07 இரவு | கொழும்பு |

### சூப்பர்-8 சுற்றில் ஒவ்வொரு அணிகளும் பிடிக்கும் பிரிவுகள்

சூப்பர் - 8

| பிரிவு ¹ | பிரிவு° 2 |
|---|---|
| ஏ1 | ஏ2 |
| பி2 | பி1 |
| சி1 | சி2 |
| டி2 | டி1 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

18ஆம் திகதி ஆரம்பமாகும் உலகக் கிண்ண இருபது-20 தொடருக்கான இலங்கை அணியில் புது முகங்களுடன் அனுபவ வீரர்களும் களமிறங்குகின்றனர்.
இரண்டாவது உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி இறுதிவரை முன்னேறியிருந்தமையும், நடந்து முடிந்த ஐ.பி.எல்., மற்றும் எஸ்.எல்.பி.எல். தொடர்களின் பெறுபேறுகளில் இலங்கை வீரர்களின் திறன்களும் இலங்கை அணியின் அதீத பலத்தைப் பறைசாற்றுகிறது.
அதேவேளை, சொந்த மண்ணில் விளையாடுவதால் பரீட்சயமான மைதானங்களும், சொந்த ரசிகர்களின் ஆதரவும் இலங்கை அணிக்கு மிகப்பெரிய பலமாகவே காணப்படும்.
இதற்கு கடந்த 50 ஓவர்கள் உலகக் கிண்ணத் தொடரில் இலங்கை அணி இறுதிப் போட்டி வரை சென்றமையைக் குறிப்பிடலாம்

# சிங்கங்கள் 15


மஹேல ஜெயவர்தன (அணித்தலைவர்)
வயது - 35
விளையாட்டு வகை- துடுப்பாட்டம்


அஞ்சலோ மத்யூஸ் (துணைத்தலைவர்)
வயது - 25
விளையாட்டு வகை - சகலதுறை


தினேஸ் சண்டிமால்
வயது - 22
விளையாட்டு வகை - விக்கெட் காப்பு - துடுப்பாட்டம்


திலகரட்ண டில்ஷான்
வயது - 35
விளையாட்டு வகை - சகலதுறை


ஷமிந்த ஏரங்க
வயது - 26
விளையாட்டு வகை - பந்துவீச்சு


ரங்கன ஹேரத்
வயது - 34
விளையாட்டு வகை - பந்துவீச்சு


நுவான் குலசேகர
வயது - 30
விளையாட்டு வகை - பந்துவீச்சு


லஸித் மாலிங்க
வயது - 28
விளையாட்டு வகை - பந்துவீச்சு.


அஜந்த மெண்டிஸ்
வயது - 27
விளையாட்டு வகை - பந்துவீச்சு


ஜீவன் மெண்டிஸ்
வயது - 29
விளையாட்டு வகை - சகலதுறை


டில்ஷான் முனவீர
வயது - 23
விளையாட்டு வகை - துடுப்பாட்டம்


அகில தனஞ்சய
வயது - 18
விளையாட்டு வகை - சகலதுறை


திஸார பெரேரா
வயது - 23
விளையாட்டு வகை - சகலதுறை


குமார் சங்கக்கார
வயது - 34
விளையாட்டு வகை - விக்கெட் காப்பு - துடுப்பாட்டம்


லகிரு திரிமன்னே
வயது - 22
விளையாட்டு வகை - துடுப்பாட்டம்





# இனிமையை ரசிக்க என்ன செய்யவேண்டும்?

ஒரு மனோதத்துவ வகுப்பில் ஒரு பேராசிரியர் ஒரு தம்ளரில் சிறிது தண்ணீரை ஊற்றிக் கையில் ஏந்தியபடி மாணவர்களிடம்

"இந்தத் தம்ளர் எவ்வளவு கனம் இருக்கும்?" என்று கேட்டார்.

மாணவர்கள் பக்கத்தில் இருந்து பல உத்தேச பதில்கள் வந்தன. "ஐம்பது கிராம், எழுபது கிராம், நூறு கிராம், நூற்றி இருபது கிராம்"

பேராசிரியர் சொன்னார். "இதை எடை போட்டால் தான் உண்மையான எடை நமக்குத் தெரியும். ஆனால் இது ஒருவரால் மிக சுலபமாக சுமக்கும் கனம் தான் இல்லையா?"

"ஆமாம்" என்று மாணவர்கள் ஒருமித்த குரலில் சொன்னார்கள்.

பேராசிரியர் கேட்டார். "இதை நான் சில நிமிடங்கள் கையில் ஏந்திக் கொண்டிருந்தால் என்ன ஆகும்?"

"ஒன்றும் ஆகாது" மறுபடி ஒருமித்த குரலில் பதில் வந்தது.

"இதை நான் ஒரு மணி நேரம் அப்படியே பிடித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகும்"

"கை வலிக்கும்" என்று ஒரு மாணவர் சிரித்துக் கொண்டே சொன்னார்.

"உண்மை தான். சரி, நான் இதை ஒரு நாள் முழுவதும் இப்படியே பிடித்துக் கொண்டிருந்தால் என்ன ஆகும்"

"தாங்க முடியாத வலி ஏற்படும்", "கை தசைகள் இறுகி கையை நகர்த்த முடியாமல் போய் விடும்", "ஆஸ்பத்திரிக்குத் தான் போக வேண்டி வரும்"

என்று பதில்கள் வந்தன.

"அந்தப் பிரச்சினை ஏற்படுவது தம்ளரின் கனம் கூடுவதாலா?"

"இல்லை நீங்கள் தொடர்ந்து அதை பிடித்துக் கொண்டிருப்பதால் தான்"

"இந்தப் பிரச்சினை ஏற்படாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?"

ஒரு மாணவி சுலபமாகச் சொன்னாள். "அந்தத் தம்ளரை கீழே வைத்தால் போதும்"

பேராசிரியர் சொன்னார். "மிகவும் உண்மை. ஒன்றுமே இல்லை என்று சொல்லக்கூடிய ஒரு எடையைக் கூட தொடர்ந்து நிறைய நேரம் கையில் ஏந்திக் கொண்டே இருந்தால் அது உடலில் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்த வல்லது.

வாழ்க்கையில் எல்லா பிரச்சினைகளும் அப்படித்தான். அவற்றை உங்கள் மனதில் சிறிது நேரம் வைத்திருந்தால் பெரிய பாதிப்பு இல்லை. ஆனால் அவற்றை நிறைய நேரம் சுமக்க ஆரம்பித்தால் சின்னப் பிரச்சினை கூட உங்களுக்கு வலியை ஏற்படுத்தி விடும். அதையே நாள் கணக்கில் சுமக்க ஆரம்பித்தால் அது உங்களை வாழ்க்கையையே ஸ்தம்பிக்க வைத்து விடும்.

அதனால் எந்த சுமையையும் இரவு தூங்கப் போகும் முன் கீழே இறக்கி வைத்து விட்டு உறங்கச் செல்லக் கற்றுக் கொள்ளுங்கள். வாழ்க்கை எளிதாக இருக்கும். மறு நாளைய பிரச்சினைகளைச் சமாளிப்பது சுலபமாகும்"

மிக அழகான ஒரு உவமை இது. நமக்கு மனதில் சுமைகளை ஏற்றிக் கொண்டே போகத் தெரிகிறதே ஒழிய இறக்கி வைக்கத் தெரிவதில்லை. சுமைகள் கூடிக் கொண்டே போகும் தான் நம்மால் புதியதாக சின்னப் பிரச்சினை வந்தால் கூட அதை சமாளிக்கத் தெரிவதில்லை.

"ஐயோ இதுவுமா" என்று மலைத்துப் போய் விடுகிறோம். ஒவ்வொரு பிரச்சினையாக எடுத்துப் பார்த்தால் அதை சமாளிப்பது சுலபமாக இருக்கும். பெரும்பாலானவை தனித்தனியாக அணுகும்போது அப்படி சமாளிக்க முடிந்தவையே. ஆனால் பிரச்சினைகளை சேர்த்து வைத்துக் கொண்டே சுமந்து நின்றால் அதன் பின் கூடும் எல்லாச் சின்னப் பிரச்சினைகளும் தாங்க முடியாதவையாக மாறி விடுகின்றன.

ஒன்று மட்டும் நினைவில் வைத்துக் கொள்வது நல்லது. சுமந்து கொண்டே இருப்பதால் கனம் கூடுமே ஒழிய குறையாது. இறக்கி வைத்தால் மட்டுமே கனம் குறையும்.

எனவே அவ்வப்போது மனதின் சுமைகளை இறக்கி வைக்கப் பழகிக் கொள்ளுங்கள். புதிதாக வருவதை சமாளிப்பது சுலபமாகும். வாழ்வின் இனிமைகளை ரசிக்க மனதில் இடம் பாக்கி இருக்கும்!

படித்ததில் பிடித்தது
சந்தோஷ் தயாளன்





# பலம் எது? பலவீனம் எது?

"எனக்கொரு வீக்னெஸ் இருக்கு. இல்லேன்னா நான் வாழ்க்கைல வெற்றிக் கொடி நாட்டியிருப்பேன்" இப்படியான உரையாடலை எல்லா இடங்களிலும் சகஜமாகக் கேட்கலாம். பலவீனங்கள் இல்லாத மனிதன் இல்லை. ஆனல் பலவீனத்தை முதலீடாய்க் கொண்டு வாழ்வில்

வெற்றிபெற்றவர்களைப் பார்க்கும் போது தான் பலவீனங்கள் பலங்களை நோக்கிய படிக்கட்டுகள் எனும் உண்மை புரியும்.

உலகைக் கலக்கிய பீட்டில்ஸ் இசைக்குழுவைப் பற்றிக் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர்களுடைய ஆரம்ப காலத்தில் ஒரு ரிக்கார்டிங் நிறுவனத்திடம் போய் ஆல்பம் போடுவதற்கான வாய்ப்பைக் கேட்டார்கள்.

பாட்டைக் கேட்ட நிறுவனத்தினர் " பாட்டு பரவாயில்லை. ஆனா உங்க கிட்டார் சவுண்ட் மண்டையைப் பொளக்குது. அதனால் இதை தேர்வு செய்ய முடியாது" என அனுப்பி வைத்தனர்.

இன்றைக்கு பீட்டில்ஸ் குழுவினரின் பலமாகக் கருதப்படுவதே அந்த கிட்டார் இசை தான் ! அந்த அதிரடிக்கும் சத்தத்துக்காகவே அவர்கள் உலகம் முழுவதும் பிரபலமானார்கள்! அந்த கிடார் இசையை கழித்துப் பார்த்தால் பீட்டில்ஸ் இருந்திருக்கமுடியாது!

"ஐயோ நாலு பேரு சொல்லிட்டாங்களே" இது ஒரு பெரிய குறை போல இருக்கு. இனிமே கிட்டார் இசையை கம்மியா வைச்சு மியூசிக் போடுவோம்" என்று அவர்கள் நினைக்கவில்லை. அப்படி நினைத்திருந்தால் அவர்களுக்கென ஒரு தனி அடை யாளம் இல்லாமலேயே போயிருக்கும்.

எது பலவீனம் என்று மற்றவர்கள் நினைத்தார்களோ அதையே தங்களது பலம் என அவர்கள் நிரூபித்தார்கள் !

நம்முடைய வாழ்க்கையிலும் பல விஷயங்களை நாம் பலவீனம் என நினைத்திருப்போம். ஆனால் அதே விஷயங்கள் தான் நமக்கு பலமான விஷயங்களாக மாறி விடும்

. "சே என் பல்லு கொஞ்சம் அசிங்கமா இருக்கு" என புலம்பிக் கொண்டிருக்கும் பெண்ணுக்கு திடீரென வாய்ப்பு வரும் "உங்க பல்லு ரொம்ப அழகா இருக்கு. மாடலா நடிக்க முடியுமா ?". அல்லது காதலன் கசிந்துருகி சொல்வான், "உன் பல்லு தான் எனக்கு ரொம்பப் புடிச்ச விஷயம்".

எனக்கு பலவீனம் இருக்கிறது என புலம்புவதால் உண்மையில் எதையுமே சாதிக்க முடியாது.

ஸ்டீபன் ஹாக்கின்ஸ் பற்றித் தெரிந்திருக்கும். தெரியாதவர்களுக்காக ஒரு சின்ன அறிமுகம். இயற்பியலுக்காக ஏகப்பட்ட பங்களிப்பைச் செய்தவர் அவர். அவருடைய "த பிரீஃப் ஹிஸ்டரி ஆஃப் டைம்" நூல் தொடர்ந்து ஐந்து ஆண்டுகள் "அதிகம் விற்பனையாகும்" புத்தகமாக இருந்தது.

தமிழில் காலம் ஒரு வரலாற்றுச் சுருக்கம் என வெளியான இந்த நூல் இன்றும் உலகின் சிறந்த நூல் என பாராட்டப்படுகிறது.

இவர் உடலின் பெரும்பாலான பகுதிகள் செயலிழந்த நிலையில் இருப்பவர். வீல் சேரில் தான் வாழ்க்கை. உடல் பாகங்கள் ஏதும் அசையாது. பேசுவதற்குக் கூட ஒரு கணினி வேண்டும் எனும் நிலை !

ஆனாலும் இவருடைய சாதனைகளின் தாகம் மட்டும் குறையவே இல்லை. இந்த நோய் இருப்பதனால் முழு நேரத்தையும் சிந்தனையிலும், வாசிப்பிலும் செலவிடுகிறேன் என்கிறார் இவர் தன்னம்பிக்கையாக.

பலவீனத்தை பலமாய்ப் பார்க்க மனம் பலமாய் இருக்க வேண்டும். ஸ்டீபன் ஹாக்கிங்ஸ்டம் அந்த மனம் இருக்கிறது. அதனால் தான் அவர் இன்னும் பிரமிப்புடன் பார்க்கப்படுகிறார்.


ஒருவருடைய பலம் இன்னொருவருக்கு பலவீனமாகும். ஒருவருடைய பலவீனம் இன்னொருவருக்கு பலமாய் இருக்கும்.


புல்லாங்குழலை எடுத்துக் கொள்ளுங்கள். துளைகள் இல்லையேல் அதில் இசை இல்லை. மிருதங்கத்தை எடுத்துக் கொள்ளுங்கள் துளைகள் இருந்தால் அதில் இசை இல்லை.


ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு குணாதிசயம், அடுத்தவருடன் ஒப்பிட்டு நம்முடைய பலங்களை பலவீனமாய்க் கருதாமல் இருக்க வேண்டியது முக்கியம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# வெற்றிப் பாதையின் மைல்கற்கள்

- என்.கணேசன்

ஆன்மாவிற்கான சிக்கன் சூப் கதைகள் (Chicken Soup for the Soul ) பற்றி பலரும் கேள்விப்பட்டிருப்பீர்கள். தன்னம்பிக்கை, அன்பு, அறிவு,வாழ்வியல் ஆகியவற்றை விளக்கும் உண்மைக்கதைகள், கவிதைகள், கட்டுரைகள் ஆகியவற்றின் தொகுப்பு அவை. அந்தத் தலைப்பில் 200 க்கும் மேற்பட்ட புத்தகங்கள் உள்ளன. பதினோரு கோடிக்கும் மேற்பட்ட புத்தகங்கள் விற்பனையாகி உள்ளன. நாற்பதற்கும் மேற்பட்ட மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டு இருக்கின்றன. இந்த அளவு வெற்றியடைந்த அந்த நூல்களில் முதல் நூலைப் பதிப்பிக்க அதன் தொகுப்பாளர்கள் ஜேக் கேன்ஃபீல்டு (Jack Canfield) மற்றும் மார்க் விக்டர் ஹான்சென் (Mark Victor Hansen) இருவரும் சந்தித்த தடைகள் கொஞ்சநஞ்சமல்ல.

அவர்கள் இருவரும் தன்னம்பிக்கை, சுய முன்னேற்றம் குறித்த முகாம்களை நடத்தி வந்த போது அதற்குத் தேவையான நிஜக்கதைகள் நிறைய சேகரித்து வைத்திருந்தார்கள். அந்த முகாம்களில் கலந்து கொண்ட பலர் அந்த நிஜக் கதைகளைப் புத்தகமாகப் போட்டால் பலருக்கு உதவியாக இருக்கும் என்று சொல்ல, அதைப் புத்தகமாகப் போடும் எண்ணம் அவர்களுக்கு ஏற்பட்டது. 1991ஆம் ஆண்டு இறுதியில் ஒரு புத்தகமாகத் தொகுத்து நியூயோர்க் சென்று பதிப்பகங்களை ஒரு ஏஜெண்டின் துணையுடன் அணுகினார்கள். சிலர் அது போன்ற தொகுப்பு நூல் விலை போகாது என்றார்கள், சிலர் அந்தப் பெயரே சரியில்லை, படிக்கவும் ஆளிருக்காது என்றார்கள், சிலர் பரபரப்பு இல்லாத கதைகள் விற்பனையாகாது என்றார்கள். நேரடியாக சந்திக்க முடியாத பதிப்பகங்களுக்கு அந்த புத்தகங்களை தபால் மூலமாக அனுப்பிப் பார்த்தார்கள். அந்தப் பதிப்பகங்களும் அவற்றைப் பிரசுரிக்க ஆர்வம் காட்டவில்லை. இனி ஒன்றும் செய்வ தற்கில்லை என்று அவர்கள் ஏஜெண்டும் கைவிரித்து விட்டார்.

விற்பனை ஆகாது, விலை போகாது என்று திரும்பத் திரும்பக் கேட்க நேர்ந்த ஜேக் கேன்ஃபீல்டும், மார்க் விக்டர் ஹான்செனும் அந்த அபிப்பிராயங்கள் உண்மையல்ல என்று புரிய வைக்க வேறு வழி கண்டு பிடித்தனர். அந்த நூல் வெளியானால் கண்டிப்பாக பிரதிகள் வாங்குவேன் என்ற உறுதி மொழிக்கடிதம் ஒன்றை அச்சிட்டு அதில் பெயர், விலாசம் எல்லாம் எழுத இடம் விட்டு தங்கள் முகாம்களுக்கு வந்தவர்கள் ஒவ்வொருவரிடமும் தந்தனர். 20000 புத்தகங்கள் வாங்க உறுதிமொழிக் கடிதங்கள் சேகரித்த பின் கலிபோர்னியாவில் நடந்த புத்தக விற்பனையாளர்கள் பேரவைக் கூட்டம் ஒன்றிற்குச் சென்று ஒவ்வொரு பதிப்பகத்திடமும் அந்த உறுதிமொழிக் கடிதங்களைக் காட்டிக் கூடப் பேசிப் பார்த்தார்கள். அங்கேயும் அவர்களுக்குத் தோல்வியே கிடைத்தது.

130 மறுப்புகளுக்குப் பிறகு ஒரு சின்ன பிரசுரம் அவர்கள் புத்தகத்தைப் பிரசுரிக்க முன் வந்தது. புத்தகங்கள் வெளி வந்தவுடன் முதலில் அந்த உறுதி மொழிக்கடிதம் கொடுத்தவர்களுக்கு நூல்களை அனுப்பி அவர்கள் காசோலைக்காகக் காத்திருந்தார்கள். கிட்டத்தட்ட அனைவருமே உறுதியளித்த எண்ணிக்கை புத்தகங்களை வாங்கினார்கள். படித்த ஒவ்வொருவரும் மற்றவர்களுக்கு சிபாரிசு செய்ய விற்பனை சூடுபிடிக்க ஆரம்பித்தது. முதல் புத்தகம் எண்பது லட்சம் பிரதிகள் விற்பனையாகி பெரும் சாதனை படைக்க அவர்களது மற்ற தொகுப்பு நூல்களும் பிரசுரமாகி பெரும் வெற்றியைக் கண்டன.

எந்த ஒரு வெற்றியும் தடைகள் இல்லாமல் சந்திக்கப்படுவதில்லை. அதிலும் வெற்றி மகத்தானதாக இருக்கும் பட்சத்தில் அது சந்திக்கும் தடைகளும் பெரிய அளவிலேயே தான் இருக்கின்றன. தடைகள் ஒன்றிரண்டிலேயே மனம் உடைந்து நிறுத்தப்பட்ட முயற்சிகள் உலகில் கோடிக்கணக்கில் இருக்கக்கூடும். அவற்றில் எத்தனையோ இன்று வெற்றி கண்டவற்றை விட எத்தனையோ விதங்களில்




மேன்மையாக இருந்திருக்கவும் கூடும். அதனால் எத்தனையோ பெரும் திறமைகள் உலகத்தின் பார்வைக்கே வராமல் போய் இருந்திருக்கின்றன என்பது தான் மிகவும் வருந்தத் தக்க உண்மை. உண்மையான வெற்றி பிரபலத்திலும், எண்ணிக்கையிலும் இல்லை தான். ஆனால் திறமை வெளியே தெரியாமலேயே அமுங்கி விடும் போது உண்மையான தோல்வி ஏற்பட்டு விடுகிறது என்பதை நாம் மறுக்க முடியாது.

அதனால் உண்மையான திறமை கொண்டிருப்பவர்கள் திறமைக்கு இணையாக தங்களிடம் விடா முயற்சியையும், சகிப்புத் தன்மையையும் வளர்த்துக் கொள்வது மிக முக்கியம். ஆரம்பத் தடைகளை எதிர்பார்க்காமல் இருந்து விடக் கூடாது.

அவற்றை வெற்றியின் பாதையில் கடக்க வேண்டிய மைல்கற்களாகவே கருதி ஏற்றுக் கொள்ள வேண்டும்.

சிக்கன் சூப் கதைகள் வெளியிட அவர்கள் இருவரும் பட்ட ஆரம்ப சிரமங்களைப் பாருங்கள். சில நேரங்களில் அவர்கள் சந்தித்த சில மறுப்புகள் நமக்கு அவமானமாகக் கூடத் தோன்றலாம். ஆனால் தாங்கள் எடுத்துக் கொண்ட விஷயத்தின் மேல் இருந்த நம்பிக்கை அவர்களைத் தொடர்ந்து முயல வைத்திருக்கிறது. தடைகள் வரும்போது அவர்கள் தயங்கி தங்கள் முயற்சிகளை நிறுத்திக் கொண்டிருந்தால் இன்று அந்த வெற்றி சரித்திரம் விடுபட்டுப் போயிருக்கும்.

எனவே திறமை உள்ளவர்களே ஆரம்பத் தடைகளுக்குத் தயாராகவே இருங்கள். அவற்றை சந்திக்கும் போது மனம் தளர்ந்து விடாதீர்கள். இது உங்களுக்கு மட்டும் நிகழும் தனிப்பட்ட சம்பவங்கள் அல்ல. சொல்லப் போனால் இதுவே நியதி. இதுவே பாதை. இந்த உண்மையை மனதில் அழுத்தமாகப் பதித்து எல்லாவற்றையும் தாக்குப் பிடித்து தொடர்ந்து முயலுங்கள். பல தடைகளைக் கடந்து கடைசியில் கிடைக்கும் வெற்றிக் கனியைப்போல் சுவையானது வேறொன்றும் இல்லை. உங்கள் திறமைகள் வெளிவருவதும், புதைந்துபோவதும் வெளிப்புற நிகழ்ச்சிகளாலோ, மற்றவர்களாலோ அல்ல, அதை எதிர் கொள்ளும் உங்கள் மனநிலையால் மட்டுமே என்பதை என்றும் மறந்து விடாதீர்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஐ.நா. சபை வரை செல்லுமா டெசோ தீர்மானங்கள்?



பட்டினப்பாலை இலக்கியம் பண்டைய சோழ நாட்டின் சிறப்பு, சோழ நாட்டின் தலைநகரான காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பு, அதன் செல்வ வளம், கரிகாலனுடைய வீரச்செயல்கள், மக்கள் வாழ்க்கை முறை ஆகியவற்றை எடுத்து இயம்புகிறது.

கரிகால் சோழன் திரைக்கடலில் நாவாய்கள் பல செலுத்தி, சுங்க முறையை ஏற்படுத்தி, வெளிநாடுகளுடன் வாணிபத்தொடர்பு ஏற்படுத்தி தமிழகத்திற்கு உலகப்புகழை ஏற்படுத்தியவன். அவன் ஆண்ட சோழப் பேரரசின் தலைநகரமாக விளங்கியது காவிரிப்பூம்பட்டினம். கரிகால் சோழனுடைய காவிரிப்பூம்பட்டினத்தின் பெருஞ்சிறப்பைச் சொல்வதே பட்டினப்பாலை ஆகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னைய தமிழ்நாட்டின் பெருமை, தமிழர் நாகரிகத்தின் உயர்வு, தமிழர்களின் வீரம், பண்பாடு இவற்றையெல்லாம் இந்தப் பட்டினப்பாலையில் காணலாம்.

காவிரியாற்றின் சிறப்பு, சோழநாட்டின் நிலவளம், காவிரிப்பூம்பட்டினத்தின் சுற்றுப்புறங்களின் செழிப்பு, காவிரித்துறையின் காட்சி, செம்படவர்களின் வாழ்க்கை, பொழுதுபோக்கு இவைகளை இந்நூல் விரிவாகக் கூறுகிறது.

காவிரிப்பூம்பட்டினத்திலே அக்காலத்தில் நடைபெற்ற வாணிகம், அந்நகரத்திலே குவிந்திருந்த செல்வங்கள், அங்கு நடைபெற்ற ஏற்றுமதி, இறக்குமதி வாணிகம், வாணிகர்களின் நடுவு நிலைமை, பண்டங்களைப் பாதுகாக்கும் முறை இவைகளையெல்லாம் இந்நூலிலே காணலாம்.

பட்டினப்பாலையைப் பாடிய உருத்திரன்கண்ணனாருக்கு கரிகாற்பெருவளத்தான் பதினாறு நூறாயிரம் கழஞ்சு (பொன்) பரிசளித்தான் என்ற செய்தி இவனுடைய தமிழ்ப்பற்றை விளக்குவதாகும்.

பூம்புகார் கடற்கரையில் வந்து நின்ற கப்பல்களில் இறக்குமதி ஏற்றுமதிக்காக வந்த பொருள்கள் என்ன என்பதைக் குறிக்க "ஈழத்து உணவும் காழகத் தாக்கமும்" என்ற வரி இடம் பெற்றுள்ளது.

எனவே "ஈழம்" என்பது இல்லாத சொல் அல்ல. கற்பனைச் சொல்லும் அல்ல. வரலாற்றில் இடம்பெற்ற ஒரு சொல். மதுரையில் வாழ்ந்த சங்ககாலப் புலவர் ஈழத்துப் பூதந்தேவனார் என அழைக்கப்பட்டார். ஒல்லாந்தர் காலத்தில் வாழ்ந்த நல்லூர் சின்னத்தம்பிப் புலவர் 'ஈழ மண்டல நாடெங்கள் நாடே' என்று பாடியிருக்கிறார். எனத் தனது தமிழ்புலமையை நிலைநிறுத்தி இந்திய மத்திய அரசு 'ஈழம்' என்ற சொல்லுக்கு வழங்கிய தடையைத் தகர்த்து டெசோ எனப்படும் ஈழத்தமிழர் வாழ்வுரிமை மாநாட்டை நடத்தியிருக்கிறார் தி.மு.க. தலைவர் கலைஞர் கருணாநிதி.

பல்வேறு சறுக்கல்களுக்கு மத்தியில் இம்மாநாட்டில் ஈழத்தமிழர்களுக்கு ஆதரவாக சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

அவை வருமாறு:

தின மகுடி
14.09.2012



■ இலங்கையில் தமிழருக்கு எதிராக போர்க்குற்றத்தில் ஈடுபட்ட போர்க் குற்றவாளிகள் மீது ஐக்கிய நாடுகள் சபை உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

■ ஐ.நா. மூலம் தமிழர்களிடம் பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.

■ தமிழர் பகுதிகளில் இருந்து இலங்கை இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் .

■ இலங்கையில் நடைபெறும் அநீதிகளை இந்திய அரசு கண்டு கொள்ளாமல் இருப்பது ஏன்? ஈழத் தமிழர் தாங்கள் விரும்பும் அரசியல் தீர்வை தாங்களே தீர்மானித்துக் கொள்ள வகை செய்யும் தீர்மானத்தை ஐ.நா. மன்றத்தில் இந்தியா கொண்டுவர வேண்டும். இலங்கையில் தமிழ் மொழி அடையாளங்கள் அழிக்கப்படுவதை தடுக்க வேண்டும்.

■ இலங்கையில் தமிழர் பகுதிகளில் வலிந்து குடியமர்த்தப்பட்டுள்ள சிங்களவர்களை உடனே வெளியேற்ற வேண்டும்.

■ தமிழர் பகுதியில் இயல்பு நிலை திரும்ப இலங்கை அரசை ஐ.நா. அவை வலியுறுத்த வேண்டும் .

■ அகதிகளாக வெளிநாடுகளுக்கு சென்று சிறைகளில் வாடும் தமிழர்களை விடுதலை செய்வதில் ஐ.நா. அகதிகள் சபை தலையிட வேண்டும்.

■ இந்தியாவில் உள்ள அனைத்து இலங்கை அகதிகளுக்கும் இந்திய குடியுரிமை அல்லது அவர்கள் இந்தியாவில் நிரந்தரமாக வாழ வழி-வகை செய்ய வேண்டும் .

■ அகதிகள் தொடர்பான ஐ.நா.வின் ஒப்பந்தத்தை இந்தியாவும் பின்பற்ற வேண்டும் .

■ ஐ.நா. மூலம் தமிழ் மக்களிடத்தில் பொதுவாக்கெடுப்பு நடத்த வேண்டும். ஈழத் தமிழர் பிரச்சினை தெற்காசிய பிரச்சினையாக அறிவிக்கப்பட வேண்டும் .

■ தமிழ் அரசியல் கைதிகள் அனைவரும் இலங்கை சிறைகளில் இருந்து விடுதலை செய்யப்பட வேண்டும் .

■ தமிழக மீனவர் படுகொலைக்கு முடிவுகட்ட கச்சத்தீவை மீட்க வேண்டும்.

■ தமிழகத்தின் மண்டபம் அல்லது தனுஷ் கோடியில் இந்திய கடற்படை முகாம் அமைக்க வேண்டும் .

■ தமிழர் பகுதிகளில் மறுவாழ்வு பணிகளை கண்காணிக்க பன்னாட்டுக் குழு அமைக்க வேண்டும்.

■ இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இலங்கை படையினருக்கு பயிற்சி கொடுக்கக் கூடாது .

இந்தத் தீர்மானங்களை தமிழ் நாடெங்கும் விளக்குவதற்கான நடவடிக்கைகள் தற்போது எடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் ஐ.நாவில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

ஐ.நா. செல்லுமா டெசோ தீர்மானம்.

தின மகுடி
14.09.2012





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அர்த்தமில்லாத காரியங்கள் ஆன்மீகத்தில் உள்ளனவா?

ஆன்மீகம் சம்பந்தமாக எத்தனையோ செயல்களை தினமும் செய்கிறோம். அதன் பொருள் என்னவென்று கேட்டால் நமக்குத் தெரிவதில்லை. அர்த்தமில்லாத காரியங்கள் உண்மையான ஆன்மீகத் தில் இல்லை. அப்படி அர்த்தமில்லாமல் செயல்கள் இருந்தால் அது உண்மையான ஆன்மீகம் இல்லை. எனவே எதையும் ஏன் செய்கிறோம் என்று தெரிந்து அந்த பாவனையுடன் செய்வதே சிறப்பு.

தீபத்தை ஏன் ஏற்றுகிறோம்?

தினசரி வீட்டில் தீபம் ஏற்றுகிறோம். மங்கள சடங்குகள், பொது நிகழ்ச்சிகள் கூட தீபம் ஏற்றி விட்டுத்தான் தொடங்கப்படுகிறது. அந்த சடங்குகள் நிகழ்ச்சிகள் முடியும் வரை அந்த தீபம் எரிந்து கொண்டிருக்கும்.

ஒளி அறிவையும் ஞானத்தையும் குறிக்கிறது. இருள் அறியாமையையும் அஞ்ஞானத்தையும் குறிக்கிறது. இறைவனை எல்லா ஞானத்திற்கும் மூலமானவனாகவும் ஒளிமயமானவனாகவும் கருதுகிறார்கள். நமது குடும்பங்களில் அறியாமை என்ற இருளகற்றி ஞானம் என்ற ஒளி பரவ வேண்டும் என்ற எண்ணத்தில் தான் தீபம் ஏற்றுகிறோம். சந்தியா காலங்களான அதிகாலை மாலை நேரங்கள் பிரார்த்தனைக்கேற்ற காலங்களாக நம் முன்னோர் கருதி வந்ததால் அந்த சமயங்களில் தீபம் ஏற்றி வழிபடுவது நமது வழக்கமாக இருக்கிறது.



எண்ணெய், திரி இரண்டும் ஆன்மீக மார்க்கத்தில் இவ்வுலகத்தில் பற்றை ஏற்படுத்தும் வாசனைகளாகக் கருதுகிறார்கள். தீபம் ஒளிரும் போது எண்ணெயும், திரியும் சிறிது சிறிதாக அழிவது போல், ஞானத்தினால் நம் பற்றுகள் எல்லாம் அழிகின்றன என்றும் ஞானம் அவற்றை அழித்த பிறகே ஓய்கிறது என்றும் தீபம் மூலம் உணர்த்தப்படுவதாக அறிஞர்கள் கருதுகிறார்கள்.

மேலும் தீபத்தின் நெருப்பு மேல் நோக்கியே ஒளிர்கிறது. அது போல உண்மையான ஞானமும் நம்மை மேலான எண்ணங்களுக்கே தூண்டுகிறது. அந்த ஞானம் நமக்கு அமையட்டும்,அந்த ஞான ஒளி நம் வாழ்க்கைப் பாதையில் ஒளிவீசி வழிகாட்டட்டும் என்ற பிரார்த்தனையோடு நாம் தீபம் ஏற்றுகிறோம்.

சடங்குகள் நிகழ்ச்சிகள் ஆகியவற்றில் தீபம் ஏற்றி வைப்பதும் அந்த ஞானக் கனியான இறைவன் அங்கு இருந்து அவை சிறப்பாக நடைபெற அருள் புரியட்டும் என்ற எண்ணத்தினால் தான்.

இனி தீபம் ஏற்றும் போதும் ஏற்றிய தீபத்தைக் காணும்போதும் இந்த அர்த்தத்தை நினைவுபடுத்திக் கொள்ளுங்கள்

**ஆக்கம் லக்ஷியா**



# மெய்ஞான மருத்துவம்

ஒன்பது கிரகங்களினதும் ஜீவகாந்த அலை, காற்றில் இருப்பதால்தான் நாம் தூங்க வேண்டியிருக்கிறது. ஏனெனில் நாம் தூங்குவதோ கிரகங்களின் ஜீவ காந்த அலையை உடலில் சேமிக்கத் தான்.

மருத்துவம், கெட்டுப்போன செயல்பாடு பாதிக்கப்பட்ட உறுப்பிற்கு வைத்தியம் செய்கிறது.

ஆனால் சாஸ்திரம் மேற்படி உறுப்பு இயங்க காரணமான கிரக சக்தியை மீண்டும் பெற வைக்க என்னவழி என்று கூறுகிறது.

அனைத்து மருத்துவமும், உடலுக்குதான் வைத்தியம் செய்கிறதேயன்றி உடல் பிணைக்கப்பட்டிருக்கும் கிரக ஜீவகாந்தத்தை ஒழுங்குபடுத்துவதில்லை.

எனவேதான் நாம் பலநோய்களுக்காக வாழ்நாள் முழுவதும் மருந்து சாப்பிடுகிறோம். ஒருவருக்கு உடலில் எந்த உறுப்பு பாதிக்கப்பட்டிருக்கிறதோ அவ்வுறுப்பு பிணைக்கப்பட்டிருக்கும் கிரகத்தின் ஜீவகாந்த அலையை ஒழுங்குபடுத்தினால் பாதிக்கப்பட்ட உறுப்பு மீண்டும் நல்லமுறையில் செயல்பட தொடங்கும். மேலும் மீண்டும் அந்நோய் வராமலும் காக்கும்.

ஒவ்வொரு நோய்க்கும் மருத்துவம் கூறும் காரணங்கள் நீங்கள் அனைவரும் நன்கு அறிந்தவை எனினும் சாஸ்திரம் கூறும் காரணங்கள் நீங்கள் அறிந்தவை அல்ல. அவை குறித்து பார்ப்போம்.

### சூரிய கிரகத்தின் ஆகர்ஷணம்

ஜனன ஜாதகத்தில் சூரிய கிரகம் பலமில்லாவிட்டாலும், யோகம் தரும் கிரகம் சூரியனாக இருந்து பாதிக்கப்பட்டிருந்தாலும், பிறந்த குழந்தையின் ஜாதகத்தில் தாய், தகப்பனுக்கு தோஷம் கொடுத்த கிரகம் சூரியனாக இருந்தாலும் சூரிய கிரகத்தின் ஆகர்ண சக்தி குறையும்.

ஆனால் இக்கிரக சக்தியை தியானம் மூலம் உடலில் சேமிக்கலாம். சூரியனின் ஜீவகாந்த அலையிலிருந்து இதயம், கண், இரைப்பை ஆகிய உறுப்புகளுக்கு சிகிச்சையளிக்கலாம்.சூரிய கிரகத்தின் ஜீவகாந்த சக்தியை உடலில் சேமிப்பதன் மூலம் இதயம் பலமடையும், கண்பார்வை தெளிவடையும், இரைப்பை நோய்கள் அனைத்தும் தானகவே சரியாகும்.

ஏனெனில் சூரியனின் ஜீவகாந்த சக்தியில்தான் கண், இதயம், இரைப்பை ஆகியவற்றில் செயல்பாடுகள் பிணைக்கப்பட்டுள்ளன. எனவேதான் உடல் உறுப்புகளில் ஏற்படும் கோளாறை



வாஸ்து ஜோதிட நிபுணர்
மருதை பத்மராஜன்

அவ்வுறுப்பு இயங்க அடிப்படை தேவையான கிரக சக்தியை அதிகப்படுத்தினாலே மேற்படி உறுப்புகளில் ஏற்படும் நோய் தானாகவே ஆச்சரியத்தக்க வகையில் சரியாகும்.

சூரிய கிரக சக்தியை உடலில் சேமிக்கும்போது மனதில் தைரியம் பிறக்கும், உடலுக்கு தேவையான அளவிற்கு செரிக்கும் சக்தி உண்டாகும். முதுமை தோற்றம் மாறி உடலில் உறுதி உண்டாகும் முகம் பொலிவு-பெறும்.

### சந்திர கிரகத்தின் ஆகர்ஷணம்

சந்திரன் கிரக ஆகர்ணசக்தியில் ஏற்படும் குறைபாடு காரணமாக உடலிலுள்ள நீர் சக்தி மற்றும் கணையம், பீட்யூட்டரி ஆகியவற்றில் நோய்கள் ஏற்படுகின்றன. இந்த சந்திரன் கிரக ஜீவகாந்த சக்தியை உடலுக்கு அதிகம் கிடைக்கும்படி செய்தாலே சம்மந்தப்பட்ட நோய்கள் தானே சரியாகும்.

பல தவறான பழக்கத்தினால் நோய் ஏற்பட்டிருந்தாலும் அப்பழக்கங்களை கைவிட்டு மேற்படி கிரக சக்தியை உடலில் அதிகப்படுத்தினாலே இந்த நே-ாயின் தீவிரம் குறைந்து குணம் உண்டாகும்.

சந்திரன் ஜீவகாந்த சக்தியை அதிகப்படுத்தினால் கிடைக்கும் நன்மைகள்:

1. உடலில் நீர்சக்தி பலமடையும்
2. மனித உடலின் கணையம், பிட்யூட்டர் உறுப்புகள் நன்கு செயல்பட ஆரம்பிக்கும்.
3. மனம் சாந்தமடையும், தன்னம்பிக்கை மலரும்.
4. கற்பனை வளம் பெருகும்.
5. உடலில் கபம் சேராது.
6. பய உணர்வு மறையும்.

### புதன் கிரகத்தின் ஆகர்ஷணம்

பிறப்பு ஜாதகத்தில் புதன் கிரகம் பலமில்லாவிட்டாலும், மாங்கல்ய தோஷம் புதன் கிரகத்தால் ஏற்பட்டிருந்தாலும், பிறந்த குழந்தைகள் ஜாதகத்தில் தாய், தகப்பனுக்கு தோஷம் கொடுத்த கிரகம் புதனாக இருந்தாலும். உறுப்பு பாதிப்படையும்.

ஆனால் புதன் கிரக சக்தியை உடலில் சேமிப்பதன் மூலம் நுரையீரல், நரம்பு சம்பந்தமான உறுப்பில் ஏற்படும் அனைத்து நோய்களையும் எளிதில் தீர்க்கலம். புதன் கிரகத்தின் ஜீவகாந்த சக்தியை சேமிப்பதனால் ஏற்படும் நன்மைகள்:

* நரம்பு சம்மந்தப்பட்ட எந்த நோயும் வராது.
* நரம்பு மண்டலம் பலப்படும்.
* வாயு தொந்தரவு நீங்கும்
* வாய்வு சம்மந்தப்பட்ட நோய் ஏற்படாது.
* நுரையீரல் பலமடையும், நுரையீரல் சார்ந்த நோய்கள் குணமாகும்
* கூர்ந்த நுண்ணறிவு ஏற்படும்

(தொடரும்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## மேடம்

இம்மாதத்தில் குடும்பத்தில் சில முணுமுணுப்புகள் கேட்டுக் கொண்டே இருக்கும். எதையும் காதில் வாங்கிக் கொள்ளாதீர்கள். இம்மாதத்தைப் பொறுத்தவரை எதிலும் வெற்றி நமக்குத்தான் என்ற உறுதியோடு செயல்படுவீர்கள்



## இடபம்

பொதுவாக பிறரை நம்பிப் பணமோ அல்லது முக்கியமான வேலைகளையோ ஒப்படைக்காதீர்கள். சில புதிய நண்பர்களின் அறிமுகம் கிட்டும். அவர்களிடம் சற்று எச்சரிக்கையாகப் பழகுவது நல்லது. உங்களை உற்சாகப் படுத்தக்கூடிய சிறுசிறு நிகழ்ச்சிகள் தினமும் நடைபெறும். வாழ்க்கை இனிமை நிறைந்ததாக தோன்றும்



## மிதுனம்

இம்மாதத்தில் பொதுவாக இப்போது நீங்கள் வேகம் குறைந்தவர்களாக காணப்படுவீர்கள். ஒரு காரியத்தை எடுத்துக் கொண்டால் அதை உடனே செய்து முடிக்க வேண்டும் என்று தோன்றாது. சாவகாசமாகச் செய்து கொள்ளலாம் என்று நினைப்பீர்கள். இந்த சோம்பேறித்தனத்தால் சில வெற்றிகளைக் கை நழுவ விடுவீர்கள்



## கடகம்

இம்மாதத்தில் உங்களிடம் ஒரு முரட்டுத்தனமான துணிச்சல் காணப்படும். குடும்பத்தில் சந்தோஷம் களை கட்டும். நிறைய வேலைகள் இருக்கும். ஆனால் எதையும் செய்யாமல் வீட்டில் அமர்ந்து தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை ரசித்துப் பார்த்துக் கொண்டிருப்பீர்கள். சுப நிகழ்ச்சிகள் நடக்கும். குடும்பத்தில் சுப விரயங்கள் அதிகரிக்கும்



## சிம்மம்

உங்களுடைய பொருளாதார நிலை சிறப்பாக இருக்கும். கையில் பணம் இருக்கும் போது நகை நட்டு என்று வாங்கிப் போடுங்கள். கையில் அதிகமாக பணம் சேர்ந்தால் வீடு, நிலம் போன்றவற்றை வாங்கும் முயற்சியில் தீவிரமாக இறங்குங்கள். எந்தக் காரியமாக இருந்தாலும் திட்டம் போடாமல் செய்ய மாட்டீர்கள். நன்கு திட்டமிட்டுச் செயல்படுவதால் பல வெற்றிகளை எளிதாகத் தேடிக் கொள்ள முடியும்



## கன்னி

இம்மாதத்தில் தொழில் வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு காணப்படும். உத்தியோகம் பார்ப்பவர்களின் கடின உழைப்புக்கும் நேர்மைக்கும் நல்ல பலன் கிட்டும். சிலருக்கு விரும்பும் வகையில் இடமாற்றம் ஏற்படலாம். தொழிலாளர்களுக்கு வருமானம் அதிகமாகும். குடும்பத்தில் உற்சாகமும் மகிழ்ச்சியும் நிறைந்திருக்கும். நின்று போன திருமணம் பேச்சுவார்த்தை மீண்டும் தொடரும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





## துலாம்

தொழில் வியாபாரத்தில் மந்தமான போக்கு காணப்பட்டாலும் ஓரளவு இலாபம் கிட்டும். உத்தியோகம் பார்ப்பவர்கள் மேலதிகாரிகளின் கோபத்திற்கு ஆளாவார்கள். தொழிலாளர்கள் சம்பள உயர்வுக்காகப் போராட வேண்டியிருக்கும். குடும்பத்தில் நீங்கள் அனைவரையும் அனுசரித்துப் போக வேண்டும்.



## விருச்சிகம்

இம்மாதத்தில் பெரிய திட்டங்களை ஒதுக்கி வையுங்கள் சிறுசிறு திட்டங்களை மட்டும் நிறைவேற்றிக் கொள்ள முயற்சி செய்யுங்கள். ஓரளவு வெற்றி கிட்டும். பொதுவாக இந்த நேரத்தில் யாரிடம் உதவி கேட்டாலும் கிடைக்காது. உழைப்பும் அலைச்சல்களும் நாளுக்கு நாள் அதிகரித்தாலும் அதற்கு ஏற்ற பலன் நிச்சயமாக காத்திருக்கின்றது



## தனுசு

இம்மாதத்தில் நீங்கள் முயற்சிகளைத் தீவிரப்படுத்தி முன்னேற்றகரமாகச் செயல்பட்டு அபிவிருத்தி காண்பீர்கள். பொறுப்புகள் நிறைவேறும். இம்மாதத்தைப் பொறுத்த வரை தந்தை வழி ஆதாயம் தங்களுக்கு மிகப் பெரிய வரப்பிரசாதமாக அமையும். கடமைகளை நிறைவேற்றுவதிலும் தனிக் கவனம் செலுத்துவீர்கள். எந்தக் காரியத்தை எடுத்துக்கொண்டாலும் அதைச் செய்து முடிக்கும் வரை ஓய மாட்டீர்கள்.



## மகரம்

இம்மாதத்தில் பொருளாதார வகையில் தாராளமாக முதலீடுகளை செய்யத் துணிவீர்கள். வருமானத்தை விட செலவுகள் அதிகமாக இருக்கும். கைக்கு வர வேண்டிய பணம் முழுமையாகக் கைக்கு வந்து சேராது. பகுதி பகுதியாக வரும். அதுவும் தாமதமாக வரும். அதனால் உங்களால் திட்டமிட்டுச் செய்ய முடியாமல் போய் விடும். எப்போதும் பற்றாக்குறை நிலவரமாகவே காணப்படும். புத்திசாலித்தனமாகச் செலவுகளைச் சமாளிக்க வேண்டும்.



## கும்பம்

தொழில், வியாபாரத்தில் முன்னேற்றமான போக்கு காணப்பட்டாலும் இலாபம் குறைவாகத்தான் கிட்டும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு அலுவலகத்தில் மறைமுக எதிர்ப்பு தோன்றும். கலைஞர்களுக்குச் செலவுகள் அதிகமாக ஏற்படும். குடும்பத்தில் யாருக்காவது வேலை கிடைப்பது போல் இருந்தால் உடனே கிடைத்து விடாது. இழுத்துக்கொண்டே போகும். சுபச்செலவுகள் ஏற்படும்.



## மீனம்

இம் மாதத்தைப் பொறுத்தவரை குடும்பத்தில் மாத முற்பகுதியில் கணவரிடம் கருத்து வேறுபாடுகள் ஏற்பட வாய்ப்பு இருக்கின்றது. குடும்பத்தில் தாயார் அல்லது மனைவியால் சில பிரச்சினைகள் ஏற்படும். போதாக்குறைக்கு உறவினர்களும் வந்து குழப்பத்தை ஏற்படுத்துவார்கள். முடிந்தவரை அனுசரித்து சென்றால் தேவையற்ற பிரச்சினைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கலாம். மாத பிற்பகுதிக்கு மேல் சிக்கல்கள் நீங்கி சுமூகமான உறவுகள் மலரும்.

# ஆறாம் விரல்



அந்தக் கூட்டம் அரிச்சந்திரன் கோவிலைத் தாண்டி சென்றுக் கொண்டிருந்தது. கையில் தீச்சட்டியுடன் முன்னே நடந்துக் கொண்டிருந்தான் மதன். வாழ்க்கையில் அவனுக்கு வழிகாட்டியாக இருந்த அவன் தந்தை இவனுக்குப் பின்னால். மதனுக்கு எப்போதும் துணையாய் இருந்தவருக்கே அன்று நாலுபேரின் உதவி தேவையாயிருந்தது.

சம்பிராதாயங்களும் ஆயத்தங்களும் முடிந்து தீ மூட்ட வேண்டிய நேரம் வந்தது. கொஞ்சம் கைக்கருகில் வந்தாலும் தீப்பந்தம் மதனின் கண்ணீரால் அணைந்து விடுவது போல் இருந்தது. யாரோ ஒருவர் வலுக்கட்டாயமாக அவனின் கையைப் பிடித்து தீ வைத்தார். படுத்திருந்தவர் மதனுக்கு மட்டும் எழுந்து காட்சி கொடுத்து வழக்கமாய் அவர் சொல்லும் வசனத்தை சொன்னார். "கொள்ளி வைக்க கூட நீ தேவையில்லடா. அதான் நானே எனக்கு வச்சுக்கிறேன்".

மதனுக்கு எல்லாமே அவன் தந்தைதான்.சினிமாவில் வருவதைப் போல இருவரும் அமர்ந்து நண்பர்கள் போல உரையாடியதில்லை. அவரின் ஒவ்வொரு செயலும் அவனுக்கு பாடமாய் இருந்தது. ஒரு நல்ல கணவனாக, தந்தையாக வாழ்ந்தவரிடம் ஒரு விஷயம் மட்டும் உறுத்தலாய் இருந்தது. அவரின் புகைப் பழக்கம். முடிந்த வரையில் வீட்டில் புகைக்காமல் இருந்தாலும் சில நேரங்களில் மதனிடம் பிடிபட்டு விடுவார். கேள்விகளால் துளைக்கும் அவனுக்கு ஒற்றைச் சிரிப்பு மட்டுமே பதிலாக கிடைக்கும். புகைப்பவர்கள் தனக்குத் தானேக் கொள்ளி வைத்துக் கொள்ளும் பாக்கியம் பெற்றவர்கள் என்பான் மதன். ஆமாம். நீ உன்னைப் பார்த்துக் கொண்டால் போதும். வழக்கமாய் கொள்ளி வைப்பதற்காக வாது மகன் வேண்டுமென்பார்கள். அந்த கஷ்டம் கூட உனக்கு நான் வைக்க மாட்டேன் என்பார் சிரித்துக் கொண்டே. ஆம். சிரித்துக் கொண்டே.

அவரிடம் இருந்த ஒரே ஒரு தீயப் பழக்கம் அவரின் உயிரையே பறித்து விட்டது என்பதை மதனால் நம்ப முடியவில்லை. முடங்கிப் போன அவன் தேற சில மாதங்கள் ஆனது. அவன் தந்தையின் விருப்பப்படி திரைத்துறையில் சேர வேண்டும் என நினைத்தான். முதல் படியாக ஒரு விளம்பரத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. இயக்குனரிடம் அறிமுகப்படுத்தப் பட்டான். எல்லாம் எதிர்பார்த்தப்படியே நடந்தது. படப்பிடிப்பு நாளன்று தவிர்க்க முடியாத சூழ்நிலையில் வேறு ஒரு விளம்பரம் எடுக்க வேண்டியதாயிற்று. அதற்கும் மதனையே போடலாம் என முடிவெடுத்த இயக்குனர், மதனிடம் "தம்பி சிகரெட் பிடிங்க பார்க்கலாம்" என்றார்.

தடுமாறிய மதன், புகைப்பதில்லை என்றான்.

அட.. சும்மா ரெண்டு பஃப் ஸ்டைலா இழுத்து விடுங்க. புகை நல்லா வரணும்.

அதற்குள் யாரோ ஒருவர் பற்ற வைக்கப்பட்ட சிகரெட்டுடன் வந்தார். அவனின் கையில் திணிக்கப்பட்டது. செய்வதறியாத மதன் அதை தூக்கிப் போட்டுவிட்டு வேகமாய் வெளியேறினான். இரண்டு நாட்கள் கழித்து இயக்குனரை சந்தித்து, நடந்ததைக் கூறினான். அவன் தோளை அழுத்திய இயக்குனர் எடுக்கப்பட்ட விளம்பரத்தை போட்டார். புகையின் பாதிப்பை அழுத்தமாய் காட்டும் அந்த விளம்பரத்தின் முதல் காட்சியில் இளைஞன் ஒருவன் வளையம் வளையமாக புகை விட்டுக் கொண்டிருந்தான்.



-ஆக்கம் கார்க்கி

# மணப்பெண் அலங்காரம்

பொதுவாக அழகு என்றால் பெண்கள் தான். அதுவும் திருமணம் என்னும் சொல்லைக்கேட்டவுடன் ஆண்களைவிட பெண்களே அதிகளவு மகிழ்ச்சி அடைவார்கள் ஏனெனில் உலகில் ஒவ்வொரு பெண்ணிற்குமே தனது திருமணவிழாவில் அனைவரதும் கண்ணை பறிக்கும் அழகியாக ஜொலிக்க வேண்டும் என்ற எண்ணம் இருக்கும்.

ஆனால் எந்தவொரு பெண்ணாலும் தனது திருமணத்தன்று செய்து கொள்ளும் அலங்காரத்தினால் மட்டும் ஒரு அழகான பொலிவை தோற்றத்தை பெற்றுக் கொள்ள முடியாது. எல்லாப் பெண்களுமே மனதில் வைத்துக்கொள்ள வேண்டிய முக்கிய விடயம் ஒன்று என்னவென்றால் அவர்கள் தமது திருமணத் திகதியை உறுதி செய்தவுடன் தாமதம் செய்யாமல் ஒரு அழகுக்கலை நிபுணரை தொடர்பு கொண்டு தனது திருமண நிகழ்வில் தான் அழகியாக தோன்ற வழி செய்து கொள்ள வேண்டும்.

அனைத்து பெண்களுமே முக்கியமாக மனதில் கொள்ள வேண்டிய மற்றுமொரு விடையம் மணப்பெண் அலங்காரம் என்பது ஒரு நாளில் பெறக்கூடிய அழகு அல்ல மணப்பெண் தனது திருமண நாளுக்கு ஆறு மாதங்களுக்கு முன்பிருந்தே தமது அழகை சிறிது சிறிதாக மெருகேற்றி கொண்டு வந்தால் தான் திருமணத்தினத்தன்று தான் நினைத்தது போல் பேரழகியாக ஜொலிக்லாம். குறைந்தது மூன்று மாதங்களாவது ஒரு அழகுக்கலை நிபுணரின் உதவி யுடன் தனது அழகை மென்மேலும் பிரகாசிக்க கூடிய வழிவகைகளை தொடரவெண்டும்.

ஒரு மணப்பெண் தனது மேனியின் நிறம் குறைவாக இருப்பதாக நினைத்தால் கட்டாயமாக ஒரு பார்லரில் சென்று ஆறு முறையாவது(Treatment)செய்து கொள்ள வேண்டும். கட்டாயமாக திருமணத் திகதிக்கு முன்பாக ஐந்து அல்லது ஆறு(Sittings)களில் முகத்தைப் பொலிவாக்கிக் கொள்ள வேண்டும். இந்த பேஷியல் முறைகளை கண்டிப்பாக பின்பற்ற வேண்டும். 5-6 தடவைகள் (Whitning Treatment)ம் செய்து கொள்ள வேண்டும் இது போன்ற பியூட்டி ட்ரீட்மென்டுகள் மூலம் திருமண நேரத்தில் முகத்தை அழகாகவும் பொலிவாகவும் வைக்க உதவும். மணப்பெண் அலங்காரம் என்பது முகத்தில் மேக்கப் செய்வதுடன் முடிந்து விடாது அதில் கால் கை சருமம்-(Skin) என அனைத்திற்குமே (Treatments) உண்டு கை கால் சருமத்திற்கான (Treatment) களை அடுத்த இதழில் பார்ப்போம் அழகோடு இணைந்திருங்கள்.





அழகுக்கலைஞர்
திருமதி உஷா அகிலன்













Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகு குறிப்பு

# அழகான கூந்தலுக்கு!

அழகான கூந்தல் என்பது பெண்மையின் அம்சம். அது மென்மையை உணர்த்துகிறது. பெண்ணின் தைரியத்தை காட்டுகிறது. அனைவருக்கும் கவர்ச்சியான அழகையும் தருகிறது. அதனால்தான் சிறப்புவாய்ந்த பாலியல் நிபுணரான எல்லீஸ்,தனது நூலில் கூந்தலானது பாலுணர்வை தூண்டும் ஒரு அம்சம் என்று குறிப்பிட்டுள்ளார்.

கூந்தலானது கண்களை கவர்கிறது. அதனை தொட தூண்டுகிறது. எத்தனையோ டிசைன்களில் நகைகளை அணிந்தாலும் கூந்தல் இல்லாத பெண்களுக்கு அழகு சற்று குறைச்சலாகத்தான் இருக்கும்.

கார்மேக கூந்தலைக் கொண்ட பெண்கள் சாதாரணமாக உடை அணிந்திருந்தாலும் அந்த கூந்தல் அழகே அவளை பேரழகியாக காட்டும் அதனால்தான் கூந்தல் வளர்ச்சிக்கு அனைவரும் முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஆணுக்கும் பெண்ணுக்கும் கூந்தலானது காதல் உணர்வையும் பாலுணர்வையும் அதிகரிக்கும் பொருளாக இருந்துள்ளது. பெண்ணின் கூந்தல் அழகு ஆணின் மூளையில் சமிக்ஞைகளை தூண்டுகிறது. அதேபோல் ஆணின் தலையில் கூந்தல் இருப்பதுதான் அவர்களின் அழகையும் கவர்ச்சியினையும் அதிகரிக்கிறது. அதனால்தான் பெரும்பாலான ஆண்கள் கொஞ்சம் முடி உதிரத்தொடங்கினாலே அழகு போய்விட்டதே என்று பதறத்தொடங்குகின்றனர். தாம்பத்ய உறவின் போது கூந்தலை கோதுவதன் மூலம் உணர்வுகளை தூண்ட முடியும் என்றும் அவர்கள் எண்ணுகின்றனர்.

நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே நறுமணத்தைலங்களை தடவி கூந்தலை வளர்த்ததாக தகவல்கள் தெரிவிக்கின்றன. கூந்தலை அழகுபடுத்துவது மனிதர்களின் சுதந்திர உணர்வை வெளிப்படுத்துவதாக அமைந்துள்ளது. அதேபோல் பண்டைய திருமணங்களில் ஆணும் பெண்ணும் கூந்தலை முடி போட்டு தங்களின் திருமண பந்தத்தை உறுதிபடுத்தியுள்ளனர்.

அதேபோல் தம்பதியரிடையே ஆரோக்கியமான தாம்பத்ய உறவு இருக்கும் பட்சத்தில் கூந்தல் வளர்ச்சியானது அதிகரிக்கிறது. இந்த செக்ஸ் ஹார்மோன்களின் சுரப்பு சரியான அளவு இருக்கும் பட்சத்தில் அதிக அளவு கூந்தல் வளர்ச்சியடைகிறது. அதேபோல் அதிக அளவில் கவலை ஏற்பட்டாலோ மன அழுத்தம் இருந்தாலோ கூந்தல் உதிரத்தொடங்குகிறது. நமது மனஆரோக்கியத்தோடும் உடல் ஆரோக்கியத்தோடும் தொடர்புடையதாக இருக்கிறது எனவே கூந்தலை பாரமரிப்பதில் நாம் கவனம் செலுத்த வேண்டியது அவசியமானது.



# அழகான உதடுகளைப் பெற

முகத்திற்கு அழகைத் தருவதில் உதட்டிற்கும் பெரும்பங்கு உண்டு. அதற்காக அனைவருமே நமது உதடுகள் நன்கு மென்மையாக, பிங்க் நிறத்தில் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுவார்கள்.

ஆனால் உதடுகள் சிலருக்கு வறண்டு வெடிப்புகள் ஏற்பட்டுஅழகாக இருக்கும் முகத்தின் அழகையே கெடுத்துவிடும்.

ஆகவே அவர்கள் மென்மையான உதட்டை பெற முடியாமல் முகத்திற்கு மேக்கப் செய்து உதடுகளுக்கு லிப்ஸ்டிக் போட்டு அழகுப்படுத்திக் கொள்கிறார்கள்.

இவ்வாறு கஷ்டப்பட்டு மேக்கப் போடும் பெண்களுக்கு ஒரு சிறந்தஉதட்டை மென்மையாக்க வீட்டிலேயே இருக்கும் ஒருசில பொருட்களை வைத்து உதட்டை மென்மையாக பராமரிக்கலாம்.

* தினமும் காலையில் பற்களை துலக்கியப் பின் சிறிது பேக்கிங் சோடாவை வைத்து உதட்டின் மீது மென்மையாக தேய்த்து வந்தால் உதடுகள் வறட்சியடையாமல் மென்மையாக இருக்கும்.

* உதட்டில் சிறிது தேன் அல்லது ஆமணக்கெண்ணெயை தேய்த்து வந்தால் உதடுகள் எப்போதும் ஈரப்பசையுடன் காணப்படும்.

* வறட்சியின் காரணமாக இரவில் படுக்கும் முன் வாஸ்லினை சிலர் தடவுவார்கள். ஆனால் அவ்வாறு வாஸ்லினை தடவும் முன் அன்னாசிப்பழ ஜூஸை தடவி பின்னர் வாஸ்லினைத் தடவ வேண்டும்.

* கிரீன் டீ செய்து குடித்த பின்னர் அதில் இருக்கும் இலையை உதட்டில் தடவி சிறிது நேரம் ஊற வைத்து பின்னர் கழுவினால் உதடுகள் எப்போதும் வறட்சியடையாமல் இருக்கும்.

* உதட்டில் இருக்கும் இறந்த செல்களை நீக்க ஒலிவ் எண்ணெயுடன், சர்க்கரையை கலந்து அதனை உதட்டில் தடவி சிறிது நேரம் தேய்த்து பின் கழுவ வேண்டும்.

இதனை தொடர்ந்து 1 அல்லது 2 வாரங்கள் தொடர்ந்து செய்யலாம் அல்லது எப்போது உதடுகள் வறட்சியடையாமல் இருக்கிறதோ அப்போது அதனை செய்யாமல் விடலாம்.


* தக்காளியின் பேஸ்ட்டை மில்க் கிரீமுடன் கலந்து உதட்டிற்கு தடவினால் உதடுகள் மென்மையாவதோடு பிங்க் நிறத்தையும் அடையும்.

* உதடுகள் பிங்க் நிறத்தில் வேண்டுமென்றால் ரோஸ் இதழ்களை மில்க் கிரீமுடன் கலந்து தடவினால் உதடுகளுக்கு எப்போதும் லிப்ஸ்டிக் போட்டது போல் காணப்படும்.

* பாதாமை நன்கு பேஸ்ட் செய்து அதனை உதட்டிற்கு தடவி வந்தாலும் உதடுகள் மென்மையடையும்.

* ஈரப்பதமான உதட்டைப் பெற தேங்காய் எண்ணெயுடன் எலுமிச்சை சாறு மற்றும் தேன் மெழுகை ஊற்றி காய வைத்து அதனை ஒரு காற்று புகாத டப்பாவில் போட்டு அந்த கலவையை தடவினால் உதடுகள் மென்மையாக இருக்கும்.

* முக்கியமாக தினமும் 8-10 டம்ளர் தண்ணீரை குடிக்க வேண்டும். உடலில் தண்ணீர் குறைவாக இருப்பதால் தான் உதடுகள் வறட்சியை அடைகின்றன. மேலும் நல்ல ஊட்டச்சத்துள்ள உணவுகளையும் நன்கு உண்ண வேண்டும்.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழகான இடை வேண்டுமா?



கோலங்கள் போடுவது என்பது வீட்டின் முகப்பை அழகுபடுத்துவதற்கு மட்டுமல்ல. அது மனிதனின் உடலுக்கும் மனதுக்கும் தரும் மிக சிறந்த பயிற்சி ஆகும். கோலம் போடுவதன் மூலம் கவனம் செலுத்தி மனதை ஒரு முகப்படுத்த முடிகிறது. இது மிகச் சிறந்த பயிற்சி ஆகும்.

இந்த எளிமையான பயிற்சி நம் முன்னோர்களால் அறிமுகப் படுத்தபட்டு பெண்களால் கடைபிடிக்கப்பட்டு சமீப காலம் வரை தொடர்கிறது. ஆனால் அது இந்த அவசர உலகின் காலை பரபரப்பு காரணமாக கொஞ்சம் கொஞ்சமாக மறைய ஆரம்பித்து கொண்டிருக்கிறது.

இது மிக முக்கியமாக பெண்களின் வேலையாகவே சொல்லப்பட்ட காரணம் பெண்கள்தான் குடும்பத்தை நடத்தி செல்லும் நிர்வாகியாக கருதப்பட்டமையாகும். இதை பெண்கள் அதிகாலையில் செய்ததினால் சுத்தமான காற்றை சுவாசிச்சு மனதை மிகவும் ஒருமுகப் படுத்தி குனிந்து நிமிர்ந்து செய்ததினால் மன மும் உட லும் மிக வலுப் பெற்றது.

அது மட்டுமல்ல இதை செய்வதினால் அவர்களின் இடை மெலிந்து கனவுக்கன்னியாக காட்சி தந்தனர்.

ஆனால் இன்று இடை என்று ஒன்று இருந்தற்கு அடையாளம் ஏதும் இல்லாதவர்களாகவும் பெண்கள் இருக்கிறார்கள்.

பெண்களுக்கு ஒருவேண்டுகோள் இதை நீங்கள் உங்கள் வாசலில் போடகூட வேண்டாம் அதற்கு பதிலாக ஒரு நோட்டில் போட்டு பழகினால் மனதுக்கு ஒரு நல்ல பயிற்சியாக இருக்கும். இதை உங்ஙள் குழந்தைகளுக்கு கற்று தரலாம். அமெரிக்காவில் இதை குழந்தைகளின் மனத்தை ஒருமுனைப்படுத்தும் பயிற சியாக கற்றுக் கொடுக்கிறார்கள்.

கோலம் எப்படி போடுவது என்று தெரியாத இந்த காலப் பெண்களுக்கு என ஒரு வலைத்தளம் உருவாக்கப்பட்டுள்ளது.

கோலசுரபி எனப்படும் இச்செயலியின் மூலம் பலவிதமான கோலங்களை உருவாக்கிக் கொண்டே இருக்கலாம். பிடித்த கோலங்களை வரைந்து அல்லது ஸ்கிரின்சாட் மூலமாக சேமித்துக் கொள்ளலாம். 3X3 முதல் 20X20 புள்ளிகள் வரை இதன்மூலம் வளை கோடுகள் மற்றும் கம்பிக் கோடுகள் கொண்ட கோலங்களை வேண்டிய அளவுகளில் பெற்றுக் கொள்ளலாம். சதுரம் அல்லது சாய்சதுர வடிவிலும் உருவாக்கிக் கொள்ளலாம். இதன் மூலம் Random மாக கோலங்கள் வரும் என்பதால் ஒருமுறை வந்த கோலங்கள் மறுமுறை வருவது மிக அரிதாகும். அதற்கான லிங்க் கோலசுரபியின் முகவரி http://tamilpoint. blogspot.com/p/kolam. html

மற்றும் ஒரு கோலத்திற்கான வலைத்தள கோலங்கள் http://www.udhayam.in/ This site is the good resource for Indian traditional art lovers.

நம்ம கோலத்தை மூளைக்கான பயிற்சி என்று சொல்லித்த ரும் மேலைநாட்டின் வலைத்தளம் விவரம் உங்கள் பார்வைக் காக.

Try பண்ணுங்க.

# சினிமா வேண்டாம்

'கிச்சா வயது 16' என்ற படத்தின் மூலம் சினிமாவில் அறி-முகமானவர் சுஜிபாலா. நாகர்கோவில் அருகே உள்ள எட்டாமடை என்ற கிராமத்தை சேர்ந்தவர். இவரது தாயார் நாடக நடிகை. திரைப்படங்களிலும் சிறு சிறு வேடங்களில் நடித்து வந்தார். மகளை எப்படியாவது சினிமாவில் பெரிய ஹீரோயி னாக்க வேண்டும் என்று சென்னையிலேயே தங்கினார். மகளை அழைத்துக் கொண்டு படப்பிடிப்பு நடக்கும் இடங்கள், பட விழாக்களுக்கு சென்றார். திரைப்படத் தயாரிப்பு நிறுவனங்க ளுக்கு அழைத்துச் சென்று வாய்ப்பு கேட்டார். இதன் பலனாக 'கிச்சா வயது 16' படத்தில் நடிக்க வாய்ப்பு கிடைத்தது. இந்தப் படத்தில் சிம்ரன்தான் ஹீரோ யின் ஆனாலும் சுஜிபாலாவும் மணிகண்டனும் இளம் ஜோடியாக நடித்தார்கள். ஆனால் அதன்பிறகு பெரிய அளவில் வாய்ப்புகள் கிடைக்கவில்லை. சின்ன சின்ன வேடங்களில் கவர்ச்சியாக நடிக்க ஆரம்பித்தார். அய்யாவழி என்ற படத்தில்தான் நாயகியாக நடித்தார். ஹீரோயின் வாய்ப்பு கிடைக்காததால் ஒரு பாட்டுக்கு ஆட ஆரம்பித்தார், கோரிப்பாளையம், சந்திரமுகி படங்களில் கவர்ச்சி வேடத்தில் நடித்தார்.



பெரிய ஹீரோயின் கனவோடு சினிமாவுக்கு வந்தவருக்கு எல்லாமே ஏமாற்றமாக அமைந்தது. ஒரு வளரும் சிறிய நடிகை சினிமாவில் சந்திக்கும் அத்தனை பிரச்சினை-களையும் சந்தித்தார். அதற்கு அவரின் தாயும் உடந்தையாகவே இருந்தார். ஒரு பாடலுக்கு நடனம் ஆடிய காலத்தில் அவருக்கும் நடன இயக்குனர் ஒருவருக்கும் காதல் ஏற்பட்டதாக கூறப்படுகிறது. ஆனால் மகளின் சினிமா வாழ்க்கை பாதிக்கும் என்பதால் காதலுக்கு கடும் எதிர்ப்பு தெரிவித்திருக்கிறார் தாய்.

இந்த நிலையில் உண்மை என்ற படத்தில் ஹீரோயினாக நடிக்க வாய்ப்பு வந்தது. ரவிகுமார் என்பவர்தான் தயாரிப்பாளர், இயக்குனர் ஹீரோ எல்லாம். இந்த படம் தயாராகும்போதே ரவிகுமாருக்கு சுஜியை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்ற ஆசை வந்தது. இதை அவர் சுஜியின் தயாராரிடம் கூறியிருக்கிறார். ரவிகுமார் வசதியானவர் என்பதால் அவரும் உடனே ஒப்புக் கொண்டார். ஆனால் இந்த திருமணத்தில் சுஜிபாலாவுக்கு விருப்பம் இல்லை. தன் காதலை நிராகரித்த அம்மா சொல்பவரை நாம் மணந்து கொள்வதா என்ற கோபம். ஆனாலும் கட்டாயப்படுத்தி திருமணத்துக்கு சம்மதிக்க வைத்துள்ளனர்.

இந்த நிலையில்தான் சுஜிபாலா அளவுக்கு அதிகமான தூக்க மாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முன்றிருக்கிறார். இந்த திருமணத்துக்கு சம்மதிக்காவிட் டாலோ, தற்கொலைக்கு முயன்றாலோ நான் செத்துவி டுவேன் என்ற அவர் அம்மா மிரட்டியதாக சொல்கிறார் கள்.

இதனால் சுஜிபாலா இப்போது அம்மாவுக்காக எல்லாவற்றையும் விட்டுக் கொடுக்க தயாராகி விட்டார். ரவிகுமாரை அக்டோபர் மாதம் திருமணம் செய்து கொள்கிறார். தன் தற்கொலை முயற்சியை காய்ச்சல் மாத்திரையை அதிகமாக சாப்பிட்டு விட்டேன் என்று சொல்லி மாற்றிவிட்டார். நான் இதுவரை யாரையும் காதலிக்கவில்லை என்றும் சொல்லி விட்டார். சுந்தர்.சி இயக்கும் 'எம்.ஜி.ஆர்,' படத்தையும் வருங்கால கணவர் ரவிகுமார் இயக்கும் 'உண்மை' படத்தையும் முடித்து கொடுத்துவிட்டு சினிமாவை விட்டே விலகுகிறேன் என்றும் கூறிவிட்டார்.


திருமணத்துக்கு பிறகாவது சுஜிபாலா நிம்மதி யான வாழ்க்கையை வாழ வேண்டும் என்று அவரது நண்பர்கள் விரும்புகி-றார்கள். காரணம் அவர் சந்தித்த வேதனைகளும் வலிகளும் அவர் களுக்கு மட்டுமே தெரியுமா.

*தமிழகத்திலிருந்து புவன்*


தின மகுடி
14.09.2012
Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனியே ஒரு குரல்

- என்.கணேசன்



பெரும்பாலான மனிதர்கள் காலத்தோடு ஒத்துப் போகிறார்கள். எல்லோரையும் போல சிந்திப்பது செயல்படுவது எல்லோரும் எப்படி வாழ்கிறார்களோ அப்படியே வாழ்வது என்று இருந்து விடுகிறார்கள். அவர்கள் வித்தியாசமாக சிந்தித்து செயல்பட்டு வாழ்ந்து சமூகத்தை பயமுறுத்துவதில்லை. சமூகத்தை தர்மசங்கடத்துக்கு உள்ளாக்குவதில்லை. ஆனால் எல்லோராலும் அப்படி இருக்க முடிவதில்லை. சிலர் விதிவிலக்குகளாக இருந்து தனிக்குரல் எழுப்புகிறார்கள். அந்தத் தனிக்குரல் சமூகத்தின் காதுகளில் நாராசமாக ஒலிக்கிறது. அந்தத் தனிக்குரலை ஒடுக்க சமூகம் பாடுபட ஆரம்பித்து பெரும்பாலான சமயங்களில் வெற்றியும் பெற்று விடுகிறது. ஆனாலும் அந்த தனிக்குரல் பல நூற்றாண்டுகள் கழித்தும் ஒலிப்பதுண்டு. அந்தக் குரலுக்கு பிற்கால சமூகம் செவி சாய்ப்பதுண்டு. அப்போது அந்தத் தனிக்குரல் சரித்திரம் படைக்கிறது. மனித குலத்தின் மகத்தான அத்தனை முன்னேற்றங்களுக்கும் இது போன்ற தனிக்குரல்களே மூல காரணமாக இருந்திருக்கின்றன.

பதினாறாம் நூற்றாண்டில் இத்தாலியில் ஒலித்த அப்படிப் பட்ட ஒரு தனிக்குரல் கலிலியோ கலிலி (Galileo Galilei) என்ற அறிஞருடையது. கி.பி 1564 ஆம் ஆண்டு பிறந்த கலிலியோ எதையும் மிக நுணுக்கமாக கவனிப்பவராக விளங்கினார். கிறித்துவக் கோயிலுக்கு அவர் சென்றிருந்த ஒரு சமயத்தில் தொங்கு விளக்கு ஒன்று காற்றால் ஆடிக் கொண்டு இருந்தது. காற்று வேகமாக வீசுகையில் விளக்கு வேகமாகவும் வேகம் குறைவாக வீசும்போது விளக்கு குறைவான வேகத்துடனும் ஆடிக் கொண்டிருந்ததைப் பார்த்துக்கொண்டே இருந்த கலிலியோவுக்கு அதில் மாறாத ஒரு விஷயம் இருப்பது கவனத்தைக் கவர்ந்தது.

தன் நாடியைப் பிடித்து அந்த விளக்கின் அசைவுகளை கலிலியோ ஆராய்ந்தார். வேகமாக அசையும் போதும் சரி, நிதானமாக அசையும் போதும் சரி அந்த விளக்கு ஒவ்வொரு முறையும் போய் திரும்பி வர ஒரே கால அவகாசத்தை எடுத்துக் கொண்டது அவருக்கு வியப்பை அளித்தது. அந்தக் கண்டுபிடிப்பு ஊசல் விதியாக எடுத்துக் கொள்ளப்பட்டு பிற்காலத்தில் கடிகாரங்களை உருவாக்க உதவியது. அவர் அந்த ஊசல் விதி கண்டு பிடித்த போது அவருக்கு வயது இருபது.

அரிஸ்டாட்டில் சொன்ன விதி ஒன்று யாராலும் கலிலியோவின் காலம் வரை சரியா என்று ஆராயப்படாமலேயே இருந்தது. அது 'எடை கூடிய பொருள்கள் எடை குறைந்த பொருள்களை விட வேகமாய் கீழே விழக் கூடியவை' என்பது தான். கலிலியோவிற்கு அது சரியாக இருக்கும் என்று தோன்றவில்லை. எனவே அவர் பல வித எடைகளில் இரும்புக் குண்டுகளை எடுத்துக் கொண்டு பைசா கோபுரத்தின் மேலே சென்று ஒவ்வொன்றையும் கீழே போட்டுப் பார்த்தார். எல்லாம் கீழே விழ ஒரே நேரத்தை எடுத்துக் கொண்டன. இதன் மூலம் அது வரை நம்பப்பட்டு வந்த அரிஸ்டாட்டிலின் அந்த குறிப்பிட்ட விதி தவறென்று கலிலியோ நிரூபித்துக் காட்டினார்.

கலிலியோ பல்கலைக்கழகப் படிப்பை நிறைவு செய்யவில்லை. காரணம் அவருக்கு கல்வியில் கணிதம் தவிர வேறெந்த துறையிலும் ஈடுபாடு இருக்கவில்லை. அவருடைய காலத்தில் ஒற்றர் கண்ணாடி (spy glass) என்றழைக்கப்பட்ட ஒரு விதக் கண்ணாடி வெகு தொலைவில் இருப்பதையும் அருகில் இருப்பதாகக் காட்ட வல்லது என்றும் அதை ஒரு டச்சு கண்ணாடித் தயாரிப்பாளர் செய்திருக்கிறார் என்றும் கலிலியோ கேள்விப்பட்டார். அதுவரை அந்தக் கண்ணாடியைக் கண்டிராத அவர் அந்த சாத்தியக் கூறால் கவரப்பட்டு கேள்விப்பட்ட சில விஷயங்களையும் தன் உள்ளுணர்வுகளையும் வைத்து அது போன்ற ஒரு கண்ணாடியை உருவாக்கினார். அதன் சக்தியை அதிகரித்துக் கொண்டே போய் மிக சக்தி வாய்ந்த கண்ணாடியை உருவாக்கினார். அது தான் பிற்காலத்தில் "டெலஸ்கோப்" என்று அழைக்கப்பட்டது.

அதை வெனிஸ் நகர செனெட்டில் கொண்டு போய் கலிலியோ காட்டினார். அது செனெட்டின் பேராதரவைப் பெற்றது. அவருடைய புகழ் நாடெங்கும் பரவியது. அதோடு அவர் நிறுத்தியிருந்தால் அவர் புகழோடும் செல்வத்தோடும் மீதமுள்ள வாழ்நாள் முழுவதும் வாழ்ந்திருக்கலாம். ஆனால் அவர் பெயர் சரித்திரத்தில் சிறிதாகத் தான் எழுதப்பட்டிருக்கும். அவர் தன் அறிவியல் ஆராய்ச்சியின் அடுத்த கட்டங்களுக்குச் சென்றார். அது அவருடைய பிரச்சினைகளுக்கு அஸ்திவாரம் போட்டது.

அந்த டெலஸ்கோப்பால் சந்திரனைப் பார்த்தார். சந்திரன் மிக அழகாக சமதளமாக இருக்கும் என்று எதிர்பார்த்தவருக்கு அதில் பாறைகளும் மலைகளும் மேடு பள்ளங்களும் இருப்பது வியப்பாய் இருந்தது. தன் டெலெஸ்கோப்பின் சக்தியை மேலும் பன்மடங்கு கூட்டி 1610 ஜனவரி 7 அன்று அந்த டெலஸ்கோப்பை ஜூபிடர் கிரகம் பக்கம் திருப்பினார். ஜூபிடர் கிரகம் அருகில் மூன்று நட்சத்திரங்கள் நேர்கோட்டில் இருப்பதைக் கண்டார். சிறிது நேரம் கழித்துப் பார்க்கையில் அந்த நட்சத்திரங்கள் இடம் மாறி அதேபோல் நேர்கோட்டில் இருப்பதைக் கண்டார். அப்போது தான் அவை ஜூபிடரின் உபகிரகங்கள் என்றும் அவை ஜூபிடரைச் சுற்றி சுழன்று கொண்டு இருக்கின்றன என்றும் அவர் முடிவுக்கு வந்தார். அந்த சித்தாந்தத்தை மேலும் சிந்தித்துப் பார்த்த போது கோபர்நிகஸ் பூமியைப் பற்றி சொன்னது உண்மை என்ற முடிவுக்கு வந்தார். கோபர்நிகஸ் பூமியைச் சுற்றி சூரியன் சுழல்வதில்லை. சூரியனைச் சுற்றியே பூமி சுழல்கிறது என்று பல ஆண்டுகளுக்கு முன்பே சொல்லி இருந்தார்.

கலிலியோ கோபர்நிகஸ் சொன்னது சரியே, பூமி சூரியனைச் சுற்றுகிறது என்று கூறியதுடன் அந்த கண்டுபிடிப்புகளை ஒரு புத்தகமாக கிபி 1610ல் வெளியிட்டார் இதுவே அவருக்கு வினையாயிற்று. கி.பி.1600ல் கியார்டானோ ப்ருனோ (Giordano Bruno) என்ற நபர் இதை நம்பியதற்கும் பூமியைப் போல் பல்லாயிரக் கணக்கான கோள்கள் பிரபஞ்சத்தில் உள்ளன என்று சொன்னதற்கும் உயிரோடு எரிக்கப்பட்டிருந்தார். பைபிளில் சொல்லி இருப்பதற்கு எதிர்மாறாக அவர் சொல்வதாகக் காரணம் சொல்லி அவரை எரித்தவர்கள் கலிலியோவையும் விடவில்லை. அவரிடம் விசாரணை நடத்தினார்கள். இனி கோபர்நிகஸ் சொன்னதை பிரபலப்படுத்தக் கூடாது என்று சொல்லி அவரை விடுதலை செய்தார்கள்.

கலிலியோ தன் ஆய்வுகளைத் தொடர்ந்தார். அவர் மேலும் கண்ட உண்மைகள் அவரை சும்மா இருக்க விடவில்லை. தன் ஆய்வுகளை "Dialogue" புத்தகத்தில் மூன்று கற்பனைக் கதாபாத்திரங்கள் பேசிக் கொள்வது போல எழுதினார். ஒரு கதாபாத்திரம் இவரது கருத்துகளை அறிவுபூர்வமாகப் பேசுவது போலவும் ஒரு கதாபாத்திரம் முட்டாள்தனமாக எதிர்ப்பது போலவும் இன்னொரு கதாபாத்திரம் திறந்த மனதுடன் அவற்றை பரிசீலிப்பது போலவும் எழுதினார். உடனடியாக அந்த நூலைத் தடை செய்து அவரைக் கைது செய்து அவரை விசாரணைக்கு உட்படுத்தினர்.

68 வயதாகி இருந்த கலிலியோவிற்கு கண்பார்வையும் மங்க ஆரம்பித்திருந்தது. அவர் நோய்வாய்ப்பட்டும் இருந்தார். இந்த நிலையில் அவரை சித்திரவதைப் படுத்துவோம் என்று அதிகார வர்க்கம் அச்சுறுத்தவே தான் சொன்னது எல்லாம் தவறென்று கலிலியோ பகிரங்கமாக ஒப்புக் கொண்டார். பூமி அசையாமல் இருந்த இடத்தில் இருக்க சூரியனே அதைச் சுற்றி வருகிறது என்று பூமியைப் பற்றிச் சத்தமாகச் சொன்ன அந்த நேரத்தில் கடைசியில் "ஆனாலும் அது நகர்கிறது" என்று முணுமுணுத்ததாக சிலர் சொல்வதுண்டு. வீட்டு சிறையிலேயே தன் மீதமுள்ள வாழ்நாளைக் கழிக்க வேண்டி வந்த கலிலியோ இந்த வானவியல் ஆராய்ச்சிகளை விட்டு மற்ற விஞ்ஞான ஆராய்ச்சிகளில் தன்னை மரணம் வரை ஈடுபடுத்திக் கொண்டார்.

கோபர்நிகஸின் கண்டுபிடிப்பு சரியே என்பது பிற்காலத்தில் சந்தேகத்திற்கு இடமில்லாமல் நிரூபிக்கப்பட்டதால் 1822 ஆம் ஆண்டு அவருடைய "Dialogue" நூலுக்கு விதிக்கப்பட்ட தடை நீக்கப்பட்டது. பின்னர் சில நூற்றாண்டுகள் கழித்து வாடிகன் 1992 ஆம் ஆண்டு பகிரங்கமாக கலிலியோ குற்றமற்றவர் என்றும் அவரை விசாரித்து சிறைப்படுத்தியது தவறு என்றும் ஒத்துக் கொண்டது.

சில நேரங்களில் உண்மை என்று உணர்வதை வெளியே சொல்லும் போது அது அக்கால கட்டத்தில் இருப்போரின் அந்த சூழ்நிலைக்கு ஏற்க முடியாததாக இருக்கலாம். ஆனாலும் உண்மை அப்படி தனியாகவே ஒரு குரலில் ஒலித்தாலும் பிற்காலத்தில் அந்த தனிக்குரல் உண்மையென்று அனைவரும் உணரும் நிலை வருவது நிச்சயம்.

எனவே சில நேரங்களில் தனிக்குரலாக உங்கள் கருத்து ஒலிப்பதில் வெட்கம் கொள்ளாதீர்கள். அக்குரல் உங்களை வரலாற்றுப் பக்கங்களில் பதிய வைக்கும் குரலாகக் கூட இருக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருத்துவ அமிர்தம்

# மாதுளை



**தாவரப்பெயர் :– PUNICA GRANATUM**
**தாவரக்குடும்பம் :- PUNIACACEAE**

மாதுளம்பழத்திற்கு "மாதுளங்கம்' என்ற பெயரும் உண்டு . மாதுளையின் பழம், பூ, பட்டை, ஆகியவை அனைத்தும் மருத்துவ குணங்கள் நிறைந்தவை. மாதுளையின் பழங்களில் இரும்பு, சர்க்கரை, சுண்ணாம்பு, பாஸ்பரஸ் மற்றும் அனைத்து வகையான தாதுஉப்புக்களும் உயிர்ச்சத்துக்களும் அடங்கியுள்ளன.

மாதுளம் பழத்தைச் சாப்பிடுவதால் உடலில் நோய் எதிர்ப்புச் சக்தி அதிகமாகி றது. உடலுக்குத்தீங்கு விளைவிக்கும் வைரஸ் கிருமிகளை மிகத் துரிதமாகவும் அதிக அளவிலும் அழித்து விடுகிறது. அதனால் நோய்நீங்கி ஆரோக்கியமும் சக்தியும் அளிப்பதில் மாதுளை சிறந்த பலனைத் தருகிறது.

இனிப்பு மாதுளம் பழத்தைச் சாப்பிட்டால் இதயத்திற்கும் மூளைக்கும் மிகுதியான சக்திகி டைக்கிறது. பித்தத்தைப் போக்கு கிறது இருமலை நிறுத்துகிறது.

புளிப்பு மாதுளையைப் பயன்படுத்தினால் வயிற்றுக் கடுப்பு நீங்குகிறது . இரத்த பேதிக்குச் சிறந்த மருந்தாகிறது. தடைபட்டசிறுநீரை வெளியேற்றுகிறது . குடற்புண்களை (அல்சர்) குணமாக்குகிறது.

மாதுளம் விதைகளைச் சாப்பிட்டால் நீர்த்துப் போன சுக்கிலம் கெட்டிப்படுகிறது. மேக நோயின் பாதிப்பு ஏற்பட்டவர்கள் மாதுளை விதைகளைச் சாப்பிட்டால் பிரமேகம் பாதிப்பிலிருந்து நிவர்த்தியாகும்.

இதயநோய்கள், இதயபலகீனம் நிவர்த்தி யாகும். இரத்தவிருத்தி ஏற்படும். சீதபேதிக்கு மாதுளை சிறந்த நிவாரணம் அளிக்கிறது. தொடர்ந்து நோயின் பாதிப்பால் பலகீனம் அடைந்தவர்கள் மாதுளம்பழத்தைச் சாப்பிட் டால் உடல் தேறும், உடல் எடைகூடும்.

தொண்டை, மார்பகங்கள், நுரையீரல், குடலுக்கு அதிகமான வலிமையை உண்டாக்குகிறது.

ஆண்தன்மையில் பலகீனம் உள்ளவர்கள் மாதுளம் பழம் சாப்பிடுவதால் மிகுந்த சக்தியை அடைய முடிகிறது.

மாதுளம் பழத்தோலுடன் வேலம் பட்டைத் தூளைக் கலந்து பல் துலக்கிவர பல்வலி, பல்லில் ரத்தம் கசிதல் நீங்கும்.

மாதுளம்பட்டை ச்சாறுவயிற் றிலுள்ள புழுக்களை வெளிப்படுத்தும்.

மூகிலிருந்து குருதி வடிவதை நிறுத்த மாதுளம்பூச் சாற்றுடன் அறுகம்புல் சாற்றையும் சம அளவுகலந்து குடித்தால் குனமாகும்










# பேரறிஞர் அண்ணா பிறந்த தினம்

**1909** -செப்டெம்பர் 15ஆம் திகதி பேரறிஞர் அண்ணா பிறந்தார்.

**1950** இதே தினத்தில் தனித்தமிழ் இயக்கத்தைத் தோற்றுவித்த மறைமலை அடிகள் காலமானார்.

**1987** - இதே தினத்தில் திலீபன் நீராகாரம் இன்றி உண்ணாநோன்பைத் தொடங்கினார்.

1879 - செப்டெம்பர் 17ஆம் திகதிதந்தை பெரியார் பிறந்தார்.

**1953** - இதே தினத்தில் தமிழறிஞர் திரு வி. க.காலமானார்.

**2004** - இதே தினத்தில் இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

**1658** - செப்டெம்பர் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் ரோமன் கத்தோலிக்க மத குருமாரை மறைத்து வைத்திருப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாக டச்சு அரசால் அறிவிக்கப்பட்டது.

**1893** - இதே தினத்தில் சுவாமி விவேகானந்தர் சிக்காகோவில் உலக சமய மாநாட்டில் உலகப் புகழ் பெற்ற சொற்பொழிவை நிகழ்த்தினார்.

**1980** - இதே தினத்தில் தமிழிசை, நாடகக் கலைஞர் கே. பி. சுந்தராம்பாள் காலமானார்.

**1959** - செப்டெம்பர் 25ஆம் திகதி இலங்கைப் பிரதமர் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காபுத்த பிக்கு ஒருவரினால் சுடப்பட்டுப் படுகாயமடைந்து அடுத்த நாள் மரணமானார்.

**1987** - செப்டெம்பர் 26 ஆம் திகதி தமிழீழ விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் திலீபன்இந்திய அமைதிப் படையிடம் ஐந்து கோரிக்கைகளை முன்வைத்து நீரும் அருந்தா உண்ணாநோன்பு இருந்து உயிர்துறந்தார்.

**2003** - செப்டெம்பர் 30 ஆம் திகதி தமிழ் விக்கிப்பீடியா ஆரம்பிக்கப்பட்டது.







முதல்முதலாக பறக்கும் ஸ்டார் ஹோட்டல் ஒன்றை உருவாக்கியுள்ளார்கள். இது சோவியத் நாட்டில் தயாரிக்கப் பட்ட உலகின் மிகப் பெரிய ஹெலிகொப்டரை மாற்றி உருவாக்கப்பட்டுள்ளது. உலகிலேயே மிக பெரிய ஹெலிகொப்டரான சோவியத் தயாரிப்பான Mil ஏ-12 என்ற ஹெலிகொப்டரை ஐந்து ஆண்டுகள் கடின உழைப்பால் மாற்றி இவ்வாறு அமைத்துள்ளனர்.

இது பார்ப்பதற்கு டபுல் டெக்கர் பஸ் போல தோற்றமளிக்கும் இதனுடைய நீளம் 135 அடி, உயரம் 45 அடி உடையது. 105 ஆயிரம் கிலோ வெயிட்டை இந்த ஹெலிகொப்டரால் தூக்க முடியும். இது மணிக்கு 158 மைல் வேகத்தில் பறக்க கூடியது. இதில் 18 வசதியான அறைகள் உள்ளன. சவுண்ட் ப்ரூப் உடன் மினி பார் உள்ளடங்கிய குயின் சைஸ் பெட்டுடன் வயர்லஸ் இன்டர்நெட் வசதிகள் உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரே ஒரு இளநி

தேவராஜன் வள வளவென்று பேசிக்கொண்டேயிருந்தார். எப்படி அவரிடமிருந்து கழன்று கொள்ளலாம் என்று யோசித்தபடி உட்கார்ந்திருந்தேன்.

நான் அவர் வீட்டில் வந்து உட்கார்ந்து அரைமணி நேரமாகியும் இன்னும் எனக்கு குடிக்க ஒரு தம்ளர் தண்ணீர் கூட தரவில்லை அந்த மனுஷர். அப்படிப்பட்ட மகா கஞ்சன் அவர்.

அப்போது உள்ளே வந்து நுழைந்தார் பக்கத்து வீட்டு ஆசாமி.

"என்ன நடராஜன், இந்த நேரத்துல வீட்டுல இருக்கீங்க? ஆபீசுக்கு மட்டமா?" என்று தேவராஜன் அவரைப் பார்த்து நக்கலாகக் கேட்க, பாவம் அவர், முகத்தை இறுக்கமாக வைத்துக்கொண்டு சொன்னார்.

"மனைவிக்கு உடம்பு சுகமில்லேங்க.. அதான் லீவு போட்டேன்."

பாவம், அவருடைய முகத்தைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. மனைவியின் உடம்புக்கு என்ன என்றுகூட விசாரிக்கவில்லை தேவராஜன். மனுஷர் பேச்சிலும் கூட சிக்கனம்.

எனக்கு மனசு கேட்கவில்லை. விசாரித்தேன்.

'மூணு மாசமா வயித்துல அல்ஸருங்க. இங்கிலீஷ் வைத்தியமெல்லாம் பார்த்து குணமாகலே. சித்த வைத்தியர்க்கிட்ட காட்டிக்கிட்டுருக்கேன். மருந்து சாப்பிட ஒரு இளநி வேணும். அதான் சார்க்கிட்ட கேட்டு வாங்கிக்கிட்டு போகலாம்னு வந்தேன்.' என்றார் அவர்.

தேவராஜன் குறுக்கிட்டார். " இளநியா? இப்ப ஏதுங்க மரத்துல காய்ப்பு? ஊர்ல தண்ணியே வரண்டு போச்சுன்னு அவனவன் அல்லாடறான்.. மரம் எப்படிங்க காய்க்கும்?

"அவசரம் சார். சாயங்காலம் மருந்து குடுக்க ஒரே ஒரு இளநி வேணும். இதுக்காக நான் பஸ் புடிச்சி ரவுனுக்கு போயாகணுமேன்னு பார்க்கறேன்..' என்று கெஞ்சும் குரலில் கேட்டார் அவர்.

"அதுக்கு என்னை என்ன பண்ணச் சொல்லுறீங்க' தேவராஜனின் குரலில் சூடு தெரிந்தது.

"அந்த மரத்துல காய் இருக்கறதைப் பார்த்துட்டுத்தான் கேக்க வந்தேன் சார்.' என்று அவர் சொல்ல, தேவராஜனுக்கு ஆத்திரம்.

"இல்லேன்னு சொல்றேன்ல.. வச்சுக்கிட்டு வஞ்சனையா பண்ணுறேன்?

நாங்கள் உட்கார்ந்திருந்த வராந்தாவிலிருந்து பார்த்தபோது மாடியின் கைப்பிடிச் சுவர் பக்கத்தில் சாய்ந்து நின்ற தென்னைமரம் தெரிந்தது. தேவராஜனுக்குத் தெரியாமல் நான் நைஸாக மரத்தைப் பார்த்தேன். குலை குலையாகக் காய்கள்!

"சொன்னாக் கேக்கமாட்டீங்களே.. இப்பத்தான் ஏதோ கொஞ்சம் குரும்பை வச்சிருக்கு. அது உங்க கண்ணை உறுத்துது போலருக்கு!' என்று தேவராஜன் சொன்னதும் வந்தவருக்கு முகம் என்னவோ போல் ஆகிவிட்டது.

ஒன்றுமே பேசாமல் வாய்க்குள் முணுமுணுத்தபடியே போய்விட்டார் அவர்.

தேவராஜனுடைய கஞ்சத்தனத்தை நினைத்தபோது எனக்கு எரிச்சலாக இருந்தது. அவரிடம் கேட்டேன்.

"மருந்துக்குன்னு தானே கேட்டாரு.. ஒண்ணே ஒண்ணு பறிச்சி கொடுத்திருக்கலாமே தேவராஜன்?


"நீங்க சும்மா இருங்க சார்.. போனாப் போவுதுன்னு இப்ப ஒண்ணு குடுத்தா ஒவ்வொரு தடவையும் ஓசி கேட்டு வந்து நிப்பாரு!'

"உங்க வீட்டுல எத்தனை தென்னை மரம் இருக்குங்க? - விடாப்பிடியாக நான் கேட்டேன்.

"என் வீட்டுல ஏதுங்க தென்னை மரம்?........ அவர் வீட்டு மரம் தான் காம்பவுண்ட் சுவத்துப் பக்கமா வளைஞ்சு வந்து எங்க வீட்டு மாடிப் பக்கம் காய்க்குது!'

அடப்பாவி மனுஷா!

- கிரிஜா மணாளன்





# ஏது சாபம்


(சென்ற இதழ் தொடர்ச்சி)

உண்மையில் சாபம் என்பதற்கும் கோபம் என்பதற்கும் தொடர்பே இல்லை.

நாம் சாதாரணமாக பேசுகின்றபோது வார்த்தைகள் நமது தொண்டையிலிருந்து வெளிப்படுவதாக தோன்றினாலும் அது முற்றிலும் இங்கிருந்து வருவதில்லை.

அடிவறு, மார்பு மற்றும் தொண்டையிலிருந்து கிளம்புகின்ற ஒலியலைகள் தான் வார்த்தைகளாக வெளிவருகின்றன.

நாம் அன்றாட நடப்புகளைப் பேசுகின்றபோது நமது மனம் நாலாவிதமான சிந்தனைகளுக்குள்



சிக்குண்டிருக்கிறது. அதனால் வாய் ஒன்றைப் பேசினாலும் மனது மற்றொன்றை நினைத்துக் கொண்டிருக்கும். இது தொண்டையிலிருந்து வருகிறது. இந்தப் பேச்சில் ஆழம், அர்த்தம் இருக்காது. ஆதலினால் இந்தப்பேச் சால் பயன் ஏதும் கிடைப்பதில்லை.

ஆனால் நாம் ஆசைப்படும்போது,எதையாவது ஒன்றை பெற்றுவிட வேண்டும் என எதிர்பார்ப்போடு பேசும்போது அந்த வார்த்தை மார்பிலிருந்து கிளம்புகின்றது. இதில் தடுமாற்றம் இருந்தாலும் குறிக்கோளை அடைகின்ற உறுதி இருக்கும். இத்தகைய உறுதிமிக்க வார்த்தைகள் எப்போதெல்லாம் நம்மிடத்திலிருந்து புறப்படுகின்றதோ, அப்பொதெல்லாம் நாம் எதிர்பார்க்கும் காரியங்கள் ஓரளவு வெற்றிபெறும்.

ஒவ்வொரு மனிதனுக்கும் ஏதாவது ஒரு சமயத்தில்தான் அடிவயிற்றிலிருந்து வார்த்தைகள் எழுகின்றன. அதிகமான சந்தோஷமோ, சோகமோ அல்லது உணர்ச்சியூட்டும் சம்பவங்களோ நடைபெறும்போதுதான் அங்கிருந்து வார்த்தைகள் பிறக்கின்றன இப்படிப் பிறக்கின்ற சொற்கள் வல்லமை வாய்ந்தவையாகிவி டுகின்றன.

இவ்வாறு பிறக்கும் சொல் எதைப்பிரயோகம் செய்கின்றதோ அந்த வார்த்தை நிச்சயம் பலித்துவிடும்.

இப்படி அடிவயிற்றிலிருந்து பிறக்கும் வார்த்தைகள் அமங்கலமாக இருந்தால் சாபம் ஆகின்றது. மங்கலமாக இருந்தால் வரம் ஆகின்றது.


வயிற்றிலிருந்து பிறக்கும் வார்த்தைகள் சாதாரண மனிதர்களிடம் அடிக்கடி பிறப்பதில்லை.

முறையாக மூச்சுப்பயிற்சி செய்தவர்களுக்கே இது சாத்தியம் தரவல்லது இதனால் தான் தவசிகள், ஆன்மீகத்துறவிகள் போன்றோர் இதனை சுலபமாக பெறுகின்றனர்.

இதன் முலமாக அவர்கள் வெளியிடும் வார்த்தைகள் பலம் வாய்ந்தவையாக இருக்கின்றனவே தவிர தவசிகள், முனிவர்களால் மட்டும் தான் சாபம் கொடுக்கமுடியும் என சொல்லிவிட முடியாது சாதாண மனிதர்கள் வெளியிடும் வார்த்தைகள்கூட சாபமாகலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# குழந்தை தொழிலாளர்கள் இல்லாத ஒரு சமுதாயத்தை உருவாக்குவோம்

எந்த ஒரு சமூகமும் முன்னோக்கி நகர்வதற்கும் தன்னை உலகில் தனித்துவமாக அடையாளப்படுத்துவதற்கும் கல்வியறிவு இன்றியமையாத ஒன்றாகும். இந்த கல்வியறிவு என்பது வெறுமனே புத்தக படிப்பு மட்டும் அல்ல அதனையும் தாண்டிய பழக்கவழக்கங்களுடன் கூடியதாக அமையவேண்டும். அப்போதுதான் மனித அபிவிருத்தியை எந்த சமூகமும் எட்ட முடியும்.

இலங்கையில் காணப்படுகின்ற ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது, எமது மலையக சமூதாயம் பின்னடைந்த நிலையில் உள்ளது என்பது மறுக்கமுடியாத உண்மை. இந்த பின்னடைவு என்பது மாற்றியமைக்க வேண்டிய ஒன்று. ஆயினும் நாம் 150 வருடங்களாக் நமது பிரச்சினைகளையும் பின்னடைவுகளையும் பேசிக்கொண்ட இருக்கின்றோமே தவிர. அதற்கான தீர்வுகளை தேடுவதற்கோ அதைபற்றி சிந்திக்கவோ முனையாதவர்களாகவே உள்ளோம்.

எமக்கு கிடைத்துள்ள மிகப்பெரிய மூலதனம் "இலவசக்கல்வி" ஆகும் இதனை பயன்படுத்தி பயன்பெறுகின்றோமா? என்றால் கேள்வி குறியே, இன்றைய மாணவன் நாளைய தலைவன் என்கிறார்கள். ஆனால் நம் சமுதாயத்தினர் இன்றும் கொழும்பு நகர்புற ஹோட்டல்களிலும் பெட்டிக்கடைகளிலும் பணக்கார வீடுகளிலும் கூலிகளாக வேலைசெய்கின்றமை கண்கூடு. இதற்கு யார் பொறுப்பு என்றால் நம்மைத் தவிர வேறு யாரும் அல்லர்.

இன்று நாடளாவிய ரீதியல் சிறுவர் துஸ்பிரயோகங்கள் பரவலாக நடைப்பெறுகின்றன. எங்கு பார்த்தாலும் நகர்புற கடைகளிலும் ஹோட்டல்களிலும் நமது சிறுவர்கள்தான் வேலை செய்துக்கொண்டு இருக்கிறார்கள்.

மலையக பகுதிகளில் இருந்து வீட்டுவேலைக்கு வந்த மஸ்கெலிய பகுதியை சேர்ந்த இரண்டு யுவதிகள் கடந்த சில வருடங்களுக்கு முன்னர் இறந்து சடலமாக மீட்கப்பட்டிருந்தனர். இதற்குப் பின்னரும் எமக்கு விழிப்புணர்வு வந்ததா இல்லையே?

கடந்த ஆகஸ்ட் மாதம் ஆடைத்தொழிற்சாலைக்கு வேலைக்கு வந்த கிறேட்வெஸ்ட்ரன் பகுதி சிறுமிகள் தவறான வழிநடத்தலில் பெற்றோரை விட்டு வேலைத்தளத்தை விட்டு தலைமறைவாகி போயினரே. இதற்கெல்லாம் யார் காரணம்? முதற்காரணம் பெற்றோர்களே.

அரசு மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பெருந்தோட்டப் பகுதிகளின் கல்வி வளர்ச்சிக்கு பல்வேறு உதவிகளை செய்து வருகின்றன. ஆனால் பெற்றோர்கள் இன்னும் நகர்புறங்களுக்கும் கொழும்பு போன்ற புறபகுதிகளுக்கும் பிள்ளைகளை வேலைக்கு அனுப்புவதை நிறுத்தாமலேயே உள்ளனர்.

மேலும். 9ஆம் ஆண்டு படிக்கும்போதே உலகத்தில் எதனையோ சாதித்துவிட்டோம் என சில பாடசாலை மாணவர்கள் எண்ணிக்கொள்ளுகின்றனர். கொஞ்சம் அரும்பு மீசை கட்டத்தொடங்கியதும் அவர்களது நடவடிக்கை மாறிப்போகின்றது. இன்று டியூசன் வகுப்புக்கு செல்பவர்களைவிட சி.டி கடைகளில் அணிதிரளும் மாணவர்களின் எண்ணிக்கையே அதிகமாக உள்ளது

எமது முந்தைய தலைமுறையினர் மதுவுக்கு அடிமையானது போல இன்றைய தலைமுறையினர் சி.டிகளுக்கு அடிமைப்பட்டுக் கொண்டிருக்கின்றனர் இது பல கலாசார சீரழிவுகளை அதிகமாக ஏற்படுத்துவதில் பங்கு வகிக்கிறது. சிறுவயது திருமணங்கள் போன்ற சமூக சீரழிவுகளுக்கு சிறுவர்கள் உள்ளாகுகின்ற நிலையையும் தோற்றுவித்துள்ளது.

சில நகர்புற பாடசாலை மாணவர்கள் "கொம்யூட்டர் கேம்ஸ்" என்று பாடசாலை முடிந்ததும் சில கணனி நிலையங்களில் வரிசையாக நிற்பதனை நாம் காணக்கூடியதாக உள்ளது. இதுபோன்ற கணனி விளையாட்டுக்கள் வரவேற்கத்தக்கதே ஆயினும் இவை அளவுக்கு மீறுவது கூட சமுதாய கல்வியின் தேக்கநிலைக்குக் காரணமாக அமையும். எனவே இதுபோன்ற நடவடிக்கைகளில் தமது பிள்ளைகள் முழுமையாக ஈடுபடுவதை பெற்றோர்கள் வரையறுக்க வேண்டியது அவசியம். அதுப்போல 'கேபில் ரிவி' எல்லா வீடுகளிலும் உள்நுழைந்துள்ளது. இதன் பாவணைகளை வரையறை செய்வதும் நன்மையே.

எது எப்படியோ ஒரு சமூகத்தின் வளர்சிக்கு மிகமுக்கியமான பொக்கிஷம் சிறுவர்களே. அவர்களின் வாழ்வினை வளமாக்க வேண்டியது எமது கடமை. சிறுவர்களின் வாழ்வு வளமாக மாறும்போதே எமது சமுதாயம் மாற்றத்தினையும் உயர்வினையும் அடையும். இந்த மாற்றத்தை நாம் ஒவ்வொருவரும் ஏற்படுத்த முனைய வேண்டும். குழந்தை தொழிலாளர்கள் இல்லாத ஒரு சமூதாயத்தை உருவாக்க முனையவேண்டும்.

–குமார்சுகுணா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிமோன் கண்ட உண்மை

ஆங்கில நாடகாசிரியர் ஷேக்ஸ்பியரைத் துவிதப் பிரம்மா என்பார்கள். உலகத்தின் சிருஷ்டி தத்துவத்தைப் புரிந்து கொண்டு தமது படைப்புகளில் பாத்திரங்களை நடமாட விடுவார். இத்தகைய தனித்துவ சிறப்பாற்றல் அவரிடம் இருந்தமை காரணமாக அவரது படைப்புகள் உலகம் முழுவதும் பேசப்படவும் அறிப்படவும் காரணமாகின.. இவரது படைப்புகள் பல்வேறுமொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளன அதில் சிலவற்றை தமிழ்சிறுகதைகளின் முன்னோடி புதுமைப்பித்தன் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.





அவரது மொழிபெயர்பில் உருவான ரிமோன் கண்ட உண்மை (Timon of Athens) என்ற படைப்பு தினமகுடியின் இளம் வாசகர்கள் அறிந்து கொள்வதற்காக இங்கு பிரசுரமாகின்றது.

ஷேக்ஸ்பியர் 1564இல் வார்விஷயரில் உள்ள ஸ்டாபோர்ட் - ஆன் - அவான் - (அவான் நதிக்கரையில் உள்ள ஸ்டாபோர்ட்) என்ற ஊரில்

**இன்றைய இளையவர்களுக்காக சிறுகதை முன்னொடியின் படைப்பு**

பிறந்தார்: 1616-ஆம் ஆண்டு அந்த ஸ்டோ போர்ட் - ஆன் - அவானிலேயே பிரபலஸ்தராக உயிர் துறந்தார். சிறு வயதில் அவரது குடும்பம் நொடிந்து விட்டது. அவர் மணவினை சொத்தைக் கொண்டு வந்தாலும் மகிழ்ச்சியைக் கொண்டு வரவில்லை. அத்துமீறி ஒரு காட்டில் மான் வேட்டையாடியதாலோ மற்றெந்தக் காரணத்தினாலோ ஊரைவிட்டு வெளியேறும்படி நேர்ந்தது.

லண்டனில் முதலில் பழைய நாடகங்களைத் திருத்திக் கொடுப்பவராகவும், நடிகராகவும், நாடகாசிரியராகவும் பிறகு நாடக இலக்கியத்தின் சாம்ராட்டாகவும் பேரும் புகழும் பணமும் சம்பாதித்தார். பிறகு அந்திம காலத்தைச் சுகவாசியாகக் கழிக்க, பிறந்தவூர் திரும்பினார்.உலகின் ஆழ்ந்த புதிர்களை எடுத்து நாடகங்களாக அமைத்த காலத்தில் பிறந்த நாடகங்கள் ரிமோன் கண்ட உண்மை (Timon of Athens), மணிமந்திரத் தீவு (The Tempest), தரும தேவதையின் துரும்பு (Hamlet) என்பனவாகும்.

இதில் ரிமோன் கண்ட உண்மை நாடகத்தின் கதை இதோ........

ரிமோன் குபேர சம்பத்துடையவன். கிரேக்க நாகரிகத்தின் நாற்றங்கால் என்று சொல்லவேண்டிய ஏதென்ஸ் நகரத்தின் பிரதான பிரஜை. உலகத்தின் சௌபாக்கியங்கள் யாவும் அவன் காலடியில் கிடந்தன. பணம் இருந்தால் மட்டும் போதுமா? மாரிபோல இரு கைகளாலும் வாரி வழங்கும் மனமும் இருந்தது.


அவன் மாளிகையிலே நண்பர்களுக்கு ஓயாத விருந்து. எடுத்த வார்த்தைக்கெல்லாம் பரிசு. அவனுடைய வாழ்க்கையே பெருங் களியாட்டமாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏதென்ஸ் நகரத்தின் குடியாட்சியில் அவனுக்கு சொல் சக்தி வாய்ந்தது ஏனென்றால் நகரத்துச் சேனையில் தலைமை வகித்துப் போர் புரிந்து, பவித்திரமான வடுக்கள் பெற்றவன்.

ரிமோன் ஏதென்ஸ் நகரின் அதிர்ஷ்ட தேவதை என்றே சொல்ல வேண்டும். அவன் வீட்டில் "ஐயோ" என்று வருகிறவன் மனம் ஒடிந்து திரும்பமாட்டான். பாட்டுக்கட்டி வரும் கவிராயரும், பலநிறப் படம் தீட்டி வரும் ஓவியக்காரரும் பட்டினியோடு திரும்பியதில்லை. நகை வியாபாரிகளுக்கு அவன் முற்றத்தில் கொள்ளை இலாபம்.



ரிமோன் அவ்வூரில் மூன்று பேரைத் தன் உயிருக்குயிரான நண்பர்களாக மதித்திருந்தான். அவன் வீட்டுக்கு அவர்கள் விருந்தாடி வந்து பரிசில் பெற்றுப் போகாத நாள் கிடையாது. ஆனால், அவர்கள் அவனைப் பணம் காய்க்கும் மரம் என்று நினைத்திருந்தார்கள். அவன் புன்சிரிப்பின் தண்மையிலே தளிர்த்தார்கள்.

ரிமோன் வாரி வழங்கும் துருதுருப்புக் கொண்டவனாதலால்,அவனது வென்டிட்டஸ் என்ற நண்பன் கடன்காரன் கையில் சிக்கிக் கொண்டான் உடனே அவனை மீட்க ரிமோன் பணம் விரைகிறது. ஒரு ஏழைக் கிழவன் அவனுக்கு ஒரு மகள். அவளை ரிமோனின் வேலைக்காரன் காதலிக்கிறான். கிழவனுக்கோ, தட்டுத் தூக்குகிறவன் தன் மகளைக் கலியாணம் செய்து கொள்வதா என்ற எண்ணம். இந்தச் செய்தி காதில் விழுந்ததும் அந்த இரண்டு இளம் ஜோடிகளும் சுகமாக வாழ்வதற்கு வேண்டிய பணத்தை வேலைக்காரனுக்குக் கொடுத்து, அவனை அடிமைத்தளையிலிருந்து விடுவித்து, கலியாணமும் செய்து வைக்கிறான் ரிமோன் வாழ்விலே கஷ்டம் தெரியவில்லை. பணத்தின் சிக்கல்கள், மனி தகுணத்தின் ஆழம் - இவற்றைத் அறிந்து கொள்ள அவகாசம் இல்லை, அப்படிப் பெரியதொரு கேளிக்கையாக இருந்தது அவன் வாழ்வு.

ஆனால் அவனுடைய கொடுக்கல் வாங்கல் விவகாரங்கள், அவனது ஆசைகள் ஓடும் திசையின் போக்கு அறிந்து அவற்றை நடத்தி வைப்பது போன்றவை அவனுடைய மாளிகைக் கணக்குப் பிள்ளையான பளாவியஸ். அவன் யோக்கியன். ரிமோன் சிறுபிள்ளைத்தனமான விளையாட்டின் விபரீதம் எங்கு வந்து விடியும் என்பதை உணர்ந்தவன் எஜமானிடத்தில் மாறாத பாசம் வைத்த பணியாளன்.

ஏதென்ஸ் நகரத்தைக் காப்பதற்காக, முன்பு ரிமோன் தலைமையில் நடைபெற்ற போரில் துணையாக நின்ற அல்க்கிப்யாடிஸ் சேனாதிபதிக்கு ரிமோனிடம் உண்மையான நட்பும் விசுவாசமும் உண்டு. அவன் இப்போது எதென்ஸ் நகரக் குடியாட்சியின் ஸ்தானாபதி.

ஆனால் நகரக் குடியாட்சியோ உளுத்துப்போனதொரு செனேட் சபையின் நிர்வாகத்தின்கீழ் சிக்கிக் கிடந்தது. சபை அங்கத்தினர்களோ உடலும் நெஞ்சும் வரண்ட பேர்வழிகள். பணத்தை குட்டி போடவிட்டுப் பெருக்குவதிலேயே பொழுதையும் வயதையும் கழிப்பவர்கள். இவர்களுக்கு ரிமோன் என்றால் பிடிக்காது. "திமிர் பிடித்த பயல், படாடோபக்காரன்" என்று வெறுப்பார்கள். ரிமோனின் கிரகம் உச்சத்திலிருக்கும்வரை அவனை இவர்களது வெறுப்புத் தீண்டுவதற்குத் திராணியற்று முடங்கிக் கிடந்தது.

இந்த நகரத்தின் கோலாகல வாழ்வுக்கும் சீர்கேட்டுக்கும் மாற்று மருந்து போல ஒரு சித்தாந்தி நடமாடித் திரிந்தான். லோகத்தின் பகட்டு, படாடோபம் நம்பிக்கை மோசடி இவற்றைக் குத்திக் குத்திக் காண்பிக்கும் சுபாவம் உள்ளவன். அழையா விருந்தினனாக எல்லா இடங்களிலும் நுழைவான்! திட்டுவான்! தூற்றுவான். மனிதர்கள் என்றால் சகல துர்க்குணங்களுக்கும் தாயகமான "கெட்ட ஜாதி" பிராணி என்று நினைப்பவன். வலியப் போய் ஒருவன் முன்னால் உட்கார்ந்து கொண்டு அவனை வாய்க்கு வந்தபடி திட்டுவான். ஏதென்ஸ்வாசிகள் தங்களுக்குப் பொழுது போகாவிட்டால்,

**தொடரும்.........**

# கலையுலகில் நான்

தினமகுடியின் இம்மாத இதழை அலங்கரிப்பவர் மேடை, தொலைக் காட்சி நாடக இயக்குநர், நடிகர், எழுத்தாளர் கலாபூஷணம் சிவா பிரதீபன் ஆவர். இவருடனான சந்திப்பின்போது...



**இத்துறைக்கான தங்களின் பிரவேசம்...**

இத்துறைக்கு வருவேன் என்று நான் நினைத்துக்கூடபார்க்கவில்லை எனக்கு விளையாட்டு துறையில் தான் ஆர்வம் அதிகம் அதற்காக பயிற்சி செய்து எனது உடலை மெருகேற்றி வைத்திருந்தேன். அதுவே என்னை இத்துறைக்குள் வழிகோலியது. 1972ஆம் ஆண்டு 'உறவுக்கு ஒருவன்' என்ற நாடகத்தில் வில்லன் பாத்திரத்தில் நடித்ததன் மூலம் எனது இப்பிரவேசம் ஆரம்பமானது. சிவாஜி ரசிகர் மன்றத்தலைவரும் "கலை அமுதம்" சஞ்சிகையின் ஆசிரியருமான 'பைனாஸ் மொஹமட்' இத்துறைக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்.

**நாடகத்துறையில் மறக்கமுடியாத சம்பவம் ஏதும்...**

நிறையவே உள்ளன. எனினும் முத்துராமன் ரசிகர் மன்றத்தினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நாடக ஒத்திகையின்போது பிரதான நடிகருக்கும் இயக்குநருக்கும் ஏற்பட்ட மனக்கசப்பு காரணமாக நடிகர் நடிக்க மறுத்து விட்டார் மேடையேற்ற மூன்று நாட்கள் மட்டுமே இருந்த வேளையில் ஒத்திகை பார்க்கச்சென்றிருந்த என்னை இயக்குநர் அழைத்து நடியும் என்றார். தயங்கினேன் கதாநாயகன் என்றால் மறுத்தேன் எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன் நீர் நடியும் என்றார்.

நாடக அரங்கேற்றம் பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் அமைச்சர் தொண்டமான் இந்திய நடிகர் கார்த்திக்கின் தந்தை முத்துராமன் என பலர் முன்னிலையில் முதற் தடவையாக கதாநாயகனாக மேடையேறினேன்.

திரைச்சீலை திறக்க மின்குமிழ்களின் வெளிச்சத்தில் நான் வியர்த்து ஆடைமுழுதும் தோய்ந்து எதுவுமே பேசாமல் நடுக்கத்துடன் நின்றிருந்தேன். சபையில் இருந்த அனைவருமே சிரித்துவிட்டார்கள் திரைச்சீலையை மூடி என்னை தயார்படுத்தி மீண்டும் மேடையில் தோன்றி நடித்து முடித்தேன். அமைச்சரும், நடிகர் முத்துராமனும் மாலை அணிவித்து பாராட்டினார்கள் அவர்களின் ஆசியோடு அதன் பிறகு நிறையவே வாய்ப்புகள் வந்தன மறக்கவே முடியாத நிகழ்வு அதுவாகும்.

**நீங்கள் இதுவரை இயக்கிய நடித்த நாடகங்களைப் பற்றி...**

இதுவரை நான் 18 நாடகங்களில் நடித்தும் 7நாடகத்தை இயக்கியும் ஒரு சில தமிழ், சிங்களப் படங்களிலும் நடித்துள்ளேன். 1973ஆண்டு "மௌனஸ் புரடக்ஷன்" தயாரித்த "அச்சாணி" நாடகம் 1977 இல் முத்துராமன் ரசிகர் மன்றம் தயாரித்த "மௌனராகம்" நாடகம் 1978இல் நானே கதை வசனம் எழுதி, இயக்கிய நாடகம் "முள்வேலி" பின்னர் வெள்ளி நிலா கலாலயம் "இருட்டில் தேடாதீங்க" அதே ஆண்டில் கலைஞர் கலைச்செல்வன் இயக்கத்தில் "லவ் பண்ணத்தோனலையா" "வந்தவன்" போன்ற நாடகங்களிலும் 1998இல் சினேகா பைன்ஆர்ட்ஸ் என்ற அமைப்பைத் தோற்றுவித்து அதன் மூலம் "வினை வினைத்தவன்" என்ற நாடகத்தை தயாரித்து இயக்கினேன்.

2000ஆம் ஆண்டு ஷேக்ஸ்பியரின் ஜலியர்ஸீஸர் என்ற வரலாற்று நாடகத்தை தயாரித்து இயக்கினேன் இந் நாடகத்தை தலைநகரில் 9 முறை மேடையேற்றினேன். "தென்றலும் புயலும்' 'வெண்சங்கு' "எங்களில் ஒருவன்" போன்ற படங்களிலும் சிங்கள மொழியில் "கம்மித்தவில" 'காதல் விம்பம்' தொலைக்காட்சி நாடகத்திலும் சிறீஸ்கந்த ராஜாவின் இயக்கத்தில் 'ஆராதனை' நாடகத்திலும் தற்போது சிங்கள நாடகத்திலும் நடித்துள்ளேன் நடித்து வருகிறேன்.

**நாடக நடிகனுக்கு இருக்க வேண்டிய தகுதிகள் என்ன...**

அந்தக் காலத்தில் (Hero Manilisam) இருந்தது அதாவது கதாநாயகனுக்கு உரிய சிறப்பம்சங்கள் முக அழகு, கண், மூக்கு, தலைமுடி, உடலமைப்பு அம்சம் பொருந்தியதாக இருக்கவேண்டும் முக்கியமாக உச்சரிப்பு, நடிப்பு கலையில் நாட்டம் இன்னும் நிறையவே எதிர்பார்ப்பார்கள்.

அத்தனையிருந்தாலும் அதிஷ்டம் வேண்டும் நடிகனாகுவதற்கு போட்டியான நிலை இப்போது அவ்வாறு இல்லை மேலே குறிப்பிட்ட எதுவுமே தேவையில்லை எல் லாவற்றையும் நவீன சாதனங்கள் மூலமும் அழகையும் குரலையும் எதுவேனாலும் செய்யலாம். சிபாரிசும் பணமும் இருந்தால் போதும். முதல் கதைக்குத்தான் நடிகர்களை தேர்வு செய்வார்கள் இப்போது நடிகனுக்குத் தான் கதை எழுதுகிறார்கள் எல்லாமே மாற்றம் தான்.

**நாடகத்தின் துறையாக விளங்கிய இடம் எது...**

இந்தியாவில் கோடம் பக்கம் என்று சொல்லுவார்கள் அதுபோல இலங்கையில் கொழும்பு கொச்சிக்கடை செக்கடித்தெரு பகுதிகளை கோடம்பக்கம் என்று தான் சொல்லுவார்கள் ஏன் என்றால் எங்கு பார்த்தாலும் கொட்டகை போட்டு நாடக ஒத்திகைதான் நடக்கும் நாடக நடிகைகள் இசையமைப்பவர்கள் அழகுக்கலைஞர்கள் என பெரும் பட்டாளமே கூடியிருக்கும் இந்தியாக்கலைஞர்கள் வந்து நிகழ்ச்சிகள் செய்வார்கள் எல்லாக் கலைஞர்களையும் இங்கு வந்தால் சந்திக்கலாம் அந்தக்காலத்தை நினைக்கும் போது மனம் காற்றில் மிதக்கிறது.

**22வயதில் தொடங்கி 62 வயது வரை இத்துறையில் இருக்கின்றீர்கள் இலங்கையில் என்ன நிகழ்ச்சியினை எடுத்துக் கொண்டாலும் இந்தியக் கலைஞர்கள் இல்லாமல் நடைபெறுவதில்லை இவர்களின் வருகை உங்களைப் போன்றவர்களுக்கு தாக்கம் இல்லையா...**

இந்தியாக் கலைஞர்களின் வருகையால் பாதிப்பு இல்லை ஆனால் இந்தியாவில் இருந்து வருகின்ற தொலைக் காட்சி சீரியல்தான் எங்கள் நாடக வளர்ச்சிக்கு வீழ்ச்சி எனலாம். இலங்கை நாடகத்தினை வளர்க்க வேண்டும் அதே வேளை எங்களை நாங்களே மறந்து விடுகிறோம்.

**எந்தவொரு துறையானாலும் அத்துறையில் இருக்கும் கலைஞனுக்கு கிடைக்கின் விருதுகளும் பட்டங்களும் கௌரவங்களும் மக்களின் அங்கீகாரம் தானே அவனது ஆற்றலை இன்னும் வளப்படுத்துமல்லவா அந்த வகையில் உங்களுக்கு கிடைத்த விருதுகள் பற்றி...**

எனது கலைச்சேவையை பாராட்டி இரண்டு தடைவ தேசிய விருதும். இரத்தினபுரி இன நல்லிணக்க ஒன்றியத்தின் மூலமாக "சாமஸ்ரீ கலைக்குமரன்" பட்டமும் எம்.ஜீ.ஆர்-ஜெயலலிதா பேரவை மூலமாக "கலாஜோதி" விருதும் 2010 இல் சாகித்திய மண்டலப்பரிசும் "கலாபூஷணம்" விருதும் சமாதான நீதிவான் கௌரவமும் கிடைத்துள்ளது.

**இத்துறைசார்ந்த இளைஞர்களுக்கு தங்களின் அனுபவத்தில் இருந்து...**

இத்துறையல்ல எத்துறையானாலும் சரியான வழிகாட்டல் அத்துறைபற்றிய போதிய அறிவும் தேடலும் எதுவானாலும் ஏற்றுக்கொள்ளும் மனம் விடாமுயற்சியோடு செயற்படும் ஆற்றல் இருந்தால் சிறப்பான எதிர்காலம் அமையும்.

**தினமகுடி பற்றி தங்களின் கருத்து...**

பல்சுவையான அம்சங்களோடு அச்சுப்பிழை எழுத்துப் பிழை இல்லாமல் நேர்த்தியான பக்க அமைப்பு குறிப்பாக இலங்கைக் கலைஞர்களை அறிமுகப்படுத்துதல் இந் நூலை பத்திரப்படுத்த விரும்புவார்கள். பாம்பாட்டி கேள்வி பதிலில் காரசாரம் தேவை. இன்னும் பல அம்சங்களை உள்வாங்கி வெற்றி நடைபோட வாழ்த்துகிறோன். எனது ஆசை தினமகுடி கலைஞர் அமைப்பொன்றை உருவாக்கலாமே.


குறிப்பு- "கலையுலகில் நான்" எனும் தலைப்பில் சிவாபிரதீபன் தனது கலையுலக வாழ்க்கையினை தொகுத்து மிக விரைவில் வெளியிட இருக்கிறார்.

சந்திப்பு–வை–கஜேந்திரன்




தின மகுடி 14.09.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மின்னலுக்கு பின் இன்னல்

சென்னையில் வளர்ந்தவர்தான் அந்த இரண்டெழுத்து "சு" நடிகை. என்றாலும் அடிப்படை ஆந்திரா. மப்பும் மந்தாரமுமாக இருந்த அவரின் அழகில் மயங்கிப்போனார் பக்கத்து வீட்டில் வசித்த சினிமா ஒப்பனைக் கலைஞர் ஒருவர்.

"வெண்ணெய்யைக் கைல வச்சுக்கிட்டு எண்ணெய்க்காக ஏங்கிக்கிட்டு இருக்கீங் களே? நீங்க மனசு வச்சா ஓங்க குடும்ப கஷ்டம் தீரும்" என்றபடி அர்த்த புஷ்டியோடு அந்த அழகுப்பெண்ணான "சு" வைப் பார்த் தார் ஒப்பனையாளர்.

"ஓகே. சினிமாவில் இறங்க நான் ரெடி" என அந்த "சு" பெண்ணும் சம்மதித்தார்.

அழைத்தவர் ஒப்பனைக் கலைஞராக இருந்தாலும் ஒப்பனை போட்டு மறைக் காமல் ஒரு உண்மையைச் சொன்னார். "அதுக்கெல்லாம் உடன்படணும். அதுக்கு முன்னாடி எனக்கும் உடன்படணும்" என உடன்படிக்கை போட்டார். மறுப்பு தெரிவிக் காமல் சம்மதித்தார் நடிகை.

ஒரு புதுமுக நடிகர் இயக்கி நடித்த பள்ளி இறுதி வகுப்பைக் குறிக்கும் படம் மூலம் நடிகையாக அறிமுகமானார். ஆனால் அந் தப்படம் தோல்விப் படமானதால் நடிகைக்கு வாய்ப்புகள் கிடைப்பது குதிரைக் கொம் பானது.

இந்தச் சமயம் ஒரு இளைஞருடன் காதல் ஏற்பட்டது நடிகைக்கு. சினிமாவை விட்டு விடலாம் என நினைத்துக் கொண்டிருந்த நேரத்தில் நடிகையின் அக்கா காதல் தோல்வி ஏற்பட்டு தற்கொலை செய்து கொண்டார்.

இதனால் தன் காதலையும் துறந்த நடிகை குடும்பத்திற்கு உழைப்பது மட்டுமே குறிக்கோள் என முடிவு செய்தார்.

அப்போது "தகடு தகடு" ஆக்டரை வைத்து "சவுண்டான" படம் எடுத்த டைரக்டருடன் பழக்கம் ஏற்பட்டது. டைரக்டருக்கே படம் இல்லாத நிலை. இருந்தாலும் வெளித் தொடர்புகளை ஏற்படுத்திக் கொடுத்தார். இன்னொரு புறம் சினிமா வாய்ப்பு வேட்டை-களிலும் இறங்கினார்.

கதை நாயகி வாய்ப்பை விட, கவர்ச்சி நாயகி வாய்ப்பு ஈஸி. குத்துப்பாட்டு ஆடும் நடிகைகளுக்கு டிமாண்ட்டும் உண்டு. அத னால் அந்த ரூட்டில் இறங்கினார். அதற்கு நல்ல பலன் கிடைத்தது. அர்ஜுனை வைத்து வெங்கடம் இயக்கிய "ஆசிரியர்" படம் மூலம் தன் குத்தாட்ட நடிப்பை ஆரம் பித்தார்.

ரீ-மிக்ஸ் பாடலான "முனியம்மா" பாட் டுக்கு நடிகை போட்ட ஆட்டம் ஹிட்டாகி பரவலான வாய்ப்பைப் பெற்றுத் தந்தது. பணக்கார இளசுகளின் பார்வையும் நடிகை மீது விழுந்தது. இதில் பழக்கமான ஒரு இளைஞர் தன் நண்பர்களிடமும் இதுபற்றிச் சொல்ல.

ஒருநாள் காதலர் தினத்தன்று இரண்டு பேர் நடிகையிடம் புரோக்ராம் போட்டார்கள். ஏடாகூட விவகாரங்களுக்கு பேர்போன கிழக்கு கடற்கரை சாலையில் இருக்கும் சவுக்குத் தோப்புதான் லொகேஷன்.

காருக்குள் தண்ணீரும் சல்லாபமுமாக இருக்க திடீரென அந்த இடத்தை ஐந்தாறு முரட்டு ஆசாமிகள் சூழ்ந்துகொண்டனர். "சு" நடிகையுடன் வந்த இரண்டு இளைஞர் களையும் தாக்கிவிட்டு நடிகையை பலவந்த மாக வெளியே இழுத்து கடத்திக் கொண்டு போக திட்டமிட்டனர்.

நடிகையுடன் வந்தவர்கள் அதைத் தடுக் கும் முயற்சியில் ஈடுபட்டனர். இந்த அதிரடி-யில் நடுநடுங்கிப்போன நடிகை பலம் கொண்ட மட்டும் அவர்களை எதிர்த்துப் போராட எதேச்சையாக அந்தப் பகுதியில் பொலிஸார் வரத் தப்பி ஓடியது முரட்டுக் கும்பல்.

நடிகையும் அவருடன் வந்தவர்களும்கூட சிக்காமல் எஸ்கேப் ஆனார்கள்.

தனக்கு நெருக்கமான ஒருசில நிருபர் களிடம் மனம்விட்டுப் பேசுவது "சு" வின் வழக்கம். "சினிமா பீல்டுக்கு வந்திட்டா அப் படி இப்படித்தான் இருக்கமுடியும். நான் உத்தமினு சொல்லிக்க விரும்பல" என்பது அவர் உதிர்க்கும் தத்துவமாகும்.

-திருச்சி அருள்தாஸ்


noolaham Foundation
noolaham.org | aavanaham.org




கொழும்பு 12 - பரடைஸ் பிளேஸ் மக்கள் சந்திப்பில் உலர் உணவு பொதிகள் வழங்கியபொது




மாதம்பிட்டிய மக்கள் சந்திப்பின் போது மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களும் பெண்களுக்கு தையல் இயந்திரம் வழங்கும் எஸ்.கே. கிருஷ்ணா

## நவோதய அமைப்புகளின் நிகழ்வுகள்




கிம்புலாஎல கழகங்களுக்கிடையிலான போட்டியில் வெற்றியாளர்களுக்கு கேடயம் வழங்கும் எஸ்.கே. கிருஷ்ணா



ஆட்டுபட்டித்தெருவில் மக்களை சந்திக்கும் எஸ்.கே. கிருஷ்ணா



நவோதய அமைப்பின் ஏற்பாட்டில் மூக்குகண்ணாடி வழங்கிய போது



தின மகுடி
14.09.2012

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சேத்தவன ராமய விகாரை

தினமகுடியின் புனித ஸ்தலங்கள் பார்வையில் இம்முறை இம்மாத இதழை அலங்கரிப்பது பௌத்த மக்களின் வழிபாட்டுத்தலங்களில் ஒன்றான கொழும்பு-14 சேத்தவன ராமய விகாரையாகும்.

இவ் விகாரையின் தற்போதைய தலைமை விகாரதிபதியாக சாஸ்த்திரவேதிபூஜ்ஜ பபரந்தே ராவுல நாயக்க ஸத்தவீர சுவாமிவஹன்ஷே உள்ளார். அவரிடம் வினாவியபோது, ஆசிய நாடுகளில் புராதன வரலாற்று புகழுடைய விகாரைகளில் 4ஆவது இடத்தைப் பிடித்துள்ளது. 1921ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டது இவ் விகாரை. இப்புனிதத்தலம் அமைந்திருக்கும் நிலப்பரப்பினை நன்கொடையாக வழங்கியவர் ஏ.ஏ.கபோசிங்க அவரின் நினைவாக கபோஸ் மாவத்தை என அவருடைய நாமத்தையே சூட்டியுள்ளது. இப்போதும் அவரின் குடும்ப உறுப்பினர்கள் பல பணிகளை செய்து வருகின்றனர்.

1960ஆம் வருடம் புனர் நிர்மாணம் செய்யபட்ட பழமை வாய்ந்த தாதுகோபுரமாக ஆசியா நாடுகளில் தெரிவு செய்யப்பட்டுள்ளமை யான புராண வரலாற்றுக்கமைய 80 வருட சரித்திர புகழுடைய வெள்ளை நிறத்திலான தாதுகோபுரமும் நுழைவாயிலில் பிரகாசிக்கின்றது. இவ்விகாரையில் வண்ணமயமான சுவரோவியங்களும் சிற்பங்களும் பிரசித்தி பெற்ற சிற்பக்கலைஞர்களால் வடிவமைக்கப்பட்டுள்ளன.



மிகப்பெரியனவாக தரமான பளிங்கு கற்களினா புத்தசிலையும் புத்தபெருமானின் ஒவ்வொரு தியான முத்திரைகளும் தனித்தனியே அமைக்கப்பட்டிருக்கிறது.

அவற்றை உற்று நோக்கும்போது பணிவு, சாந்தம், அமைதி, சமாதானம் போன்ற சிறந்த பண்புகள் வெளிப்படுகிறது. அனைத்து விதமான போதிப்பூஜைகள் சனி மற்றும் ஞாயிற்றுகிழமைகளிலும் விஷேட தினங்களில் நடக்கிறது சமய ஆகம செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. பரிபூரணத்துவம் பெற்ற புனிதமான இவ் விகாரையில் 2500 இளம் சாதுக்கள் புத்தசாசன தர்மக்கல்வியினை பெற்றதோடு 50 சாதுக்கள் இவ்விகாரையில் முற்று முழுதாக தம்மை துறவு வாழ்வுக்கு அர்பணித்துள்ளமையால் சேத்தவ னராமய பிரிவென எனும் புனைபெயரும் உள்ளது. இதுசம்பந்தமாக சாட்சிபகிரக்கூடிய ஓவியங்கள் வரையப்பட்டுள்ளன.

**விகாரையின் பங்களிப்பு–** இரத்ததானம் ஞாயிறு போதனை வகுப்புக்களும் வறிய மாணவர்களின் கல்வி முன்னேற்றம் புத்த தர்ம தார்மீக விழிப்புணர்வு போன்ற சேவைகள் ஆற்றப்படுகின்றது. முன்னைய காலத்தில் இவ் விகாரைக்கு தனவந்தர்களும் அரசாங்கமும் போதிய நிதியுதவியினையும் பல சேவைகளினையும் செய்து வந்துள்ளனர்.

தற்போதைய சூழலில் பல உதவிகள் கிடைக்காமல் இருப்பதால் விகாரையின் பல தேவைகள் நிறைவேற்ற முடியாமல் உள்ளது. அரசாங்கப்பதிவு இருப்பதினால் புத்தசாசனக்கல்வி இலவசமாக வழங்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்க விடயமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org